
www.tamilarangam.net

# எரிமலை

கார்த்திகை 1993



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இன்றைய எங்கள் வீதி ஒவ்வொன்றும் அல்லது புதிய புலிக்குட்டி

- கல்வயல் வே. குமாரசாமி -

எங்கள் நிலத்துக்கு எருத்தேவை
ஏனென்றால், இங்கே
எருக்கலை, ஈஞ்சு, குருவிச்சை
எங்கும் பரவி
இருப்பிருந்த சத்தையெல்லாம்
தங்களது பாட்டில் சவட்டிக் குடித்தமையால்
எங்கள் நிலத்துக் கெருத்தேவை
என்றபடி காளைகளை விரட்டி
வண்டிலை விட்டபடி
காளை ஒருவன் கதைத்தபடியே செல்வான்.
வீரன் ஒருத்தனே மாவீரன் ஆனான்
காளைகளை முன்விட்டுக்
கயிற்றைப் பிடித்துத்
வாய் திறந்தவாறு
செண்பகம் ஒன்று குறுக்கே நடக்கும்
வீரன் ஒருத்தனே
மாவீரன் ஆனான்?
தென்னங்குருத்துத் தெருவெல்லாம்
தோரணமாய்.
பின்னல் முறையால் பிரிவின்
பொருள் உணர்த்திச் சொல்லும் சில சேதி
துக்கம் அதனாலே
கல்லுக்குள் ஈரம் போல் மெல்லக் கசியும்
ஒரு சின்னப் பொடியன்,
மழலை மொழி - கொன்னை அவன்
"தம்பியின் காலத்தில் தான்
தமிழ் ஈழம் கிடைக்கும்



நம்புங்கள் நம்புங்கள்" என்று
உரக்கப்பாடி,
தன்னுள் ரசித்துத் தலையாட்டி,
தாளமிட்டு
கூச்சமில்லாமல்
வலு 'கூலா'கப் போவான்.
மூச்சிரைக்கும் மூத்த திரை விழுந்த
ஆச்சியோ
"படிடா ஒருக்கால் அதை திருப்பி மோனை"
என்றோர் வேண்டுகோளை விட்டபடி
வேலியிடை நிற்பாள்
இடுப்பைப் பிடித்திருந்த
கையை எடுத்துப்
பொடிப்பிள்ளை கிட்டப் போய்
பொக்கை வாய்
உச்சி தடவி உவந்து.

தன் தோளில் கலப்பை நுகத்தைச்
சுமந்தபடி
"நாளையுங்கூட உழுதுழுது வைச்சாத்தான்,
வேளை வரும்போது விளைச்சல் கிடைக்கும்."
எனக் காளை நடப்பான்!
தன் மண்ணையே காதலித்து
வேளை தவறாமல்
வேர்த்துழைப்போன் வேகமுடன்.
தோளிலே துப்பாக்கி தொங்கச்
சிலர் விரைவர்
வானில்
விமானம் ஹெலி இரையும்
பேரிரைச்சல்
பதுங்கு குழிகள் மனிதரை
அங்கே வதவதென விழுங்க.

www.tamilarangam.net

எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பன்னிரண்டாம் ஆண்டு
கார்த்திகை 1993

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42

www.tamilarangam.net

# தமிழீழத்தை மாவீரர்களுக்கு காணிக்கையாக்குவோம்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவரை 5000க்கும் மேற்பட்ட விடுதலைப் புலி வீரர்கள் வீரச்சாவை எய்தியுள்ளனர். சங்கர் தொட்டு இன்றுவரை போராளிகளின் வீரம் செறிந்த செயல்களினாலும், அதி உயர் மரண அர்ப்பணிப்பினாலும் தமிழீழத்தின் சதையும், உயிரும் ஊட்டப்பட்டு வருகின்றது.

தங்கள் மரணத்தின் தலைவிதியைத் தாங்களே விதித்துக்கொண்டு, உரிமை கோரியும், கோராமலும் சாதனைகள் புரிந்த கரும்புலிகளின் பட்டியல் நீளுகின்றது.

தமிழீழம் உருவாகிவருகின்ற அதேவேளை, தன் சிங்களப் பகுதிகளுக்கு இன்றும் பெரிய ஆபத்தில்லை என்ற அசட்டுத் துணிவினால், இனவாதத்தின் சுரம் இறங்கியதாகத் தெரியவில்லை. தாயகத்தைப் பிரிப்பதிலும், சிங்கள மேலாதிக்க அரசியல் சட்ட யாப்பினுள்ளும் ஏதோ ஒரு தீர்வைக் கொண்டுவரும் முயற்சிகளிலேயே சிங்கள அரசாங்கம் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. அதனை சர்வதேச சமூகத்திற்கு விற்கும் முயற்சியிலும் அது ஈடுபட்டுள்ளது. அதற்கு வசதியாக களத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து அழிக்கும் இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது. இதன் பொருட்டு, மேற்குலகிடமிருந்து நிதியையும், கிழக்கு ஐரோப்பாவிலிருந்து ஆயுதங்களைப் பெறவும் தொடர்ந்து முயல்கிறது.

இத்தகைய ஒரு தந்திரோபாய ரீதியான திட்டத்தின் வெளிப்பாடே கிளாலி நோக்கிய "யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையாகும். தார்மீக நியாயமற்ற இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதானது விஷப் பரீட்சையாக தோல்விகண்டுள்ளது. ஆயினும், இனவாதத்திற்கு தீனிபோடுதல், மகாசங்கத்தை மகிமைப்படுத்தல், பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளுதல் போன்ற காரணங்களுக்காக இதுபோன்ற இராணுவ நடவடிக்கைகள் தொடரலாம். ஆயினும், மறைந்த மாவீரர்களின் தியாகத்திற்கு காணிக்கையாக மலரும் தமிழீழத்தை அவர்களின் பாதங்களில் வைக்கும் வரை விடுதலைப் போராட்டம் ஓயப்போவதில்லை. அதுவரை சிங்கள இனவாதத்தின் வேகமும் குறையப்போவதில்லை.

www.tamilarangam.net

# அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே...

**ஆ. தேவர்அண்ணா**

1981ம் ஆண்டு மார்ச் மாதக் கடைசியில் நீர்வேலியில் இடம்பெற்ற வங்கி பணம்பறிப்பு நடவடிக்கையினைத் தொடர்ந்து சிறிலங்காவின் சி.ஐ.டி. பொலிசார் எப்படியும் அதில் சம்பந்தப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்துவிடவேண்டும் என்ற நோக்கில் அலைந்துகொண்டிருந்தார்கள்.

இந்தச் சம்பவத்தினைத் தொடர்ந்து தங்கத்துரை, குட்டிமணி, தேவன் என்கின்ற மூவர் இச் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள். (அப்போது நாங்களும் அவர்களும் ஒன்றாக இணைந்து செயற்பட்டுக்கொண்டிருந்த காலம்) தமிழகத்திற்குச் செல்வதற்காக படகேறச் சென்ற சமயம், வல்லிபுரக்கோயிலுக்குக் கிழக்குப் புறமாக உள்ள கடற்கரைப் பகுதியில், கள்ளக்கடத்தல் இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலினைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு தரை வழியாக வந்த வாகனங்களில் வந்திறங்கிய கடற்படையினர் அவர்கள் மூவரையும் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்டபோது அவர்கள் யாரென சி.ஐ.டி. பொலிசாருக்குத் தெரியாது. பின் பருத்தித்துறைக் காவல் நிலையத்தில் குட்டிமணி அடையாளம் காணப்பட்டதினைத் தொடர்ந்து உடனடியாக அவர்கள் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். அங்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பயங்கர சித்திரவதைகளைத் தொடர்ந்து அவர்களிடமிருந்து சில தகவல்களை சி.ஐ.டி.யினர் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர். ஆனையிறவு தடைமுகாமில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு, அவர்களோடு தொடர்புடையவர்களை அடையாளம் காண்பிப்பதற்காக பலத்த பாதுகாவல்களோடு குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

தங்கத்துரை, குட்டிமணி ஆகியோருக்குத் தெரிந்த மறைவிடங்கள் பல மாற்றப்பட்டன. தொடர்புடையவர்கள் பலர் தலைமறைவாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆதரவாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டார்கள்; சித்திரவதைக்குள்ளானார்கள். தொடர்புடையவர்களின் குடும்பத்தவர்கள் பலரும் கூட கைது செய்யப்பட்டும், தாக்கப்பட்டும் கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது.

சிறிலங்காவின் சி.ஐ.டி. பொலிசார் பகல் வேளைகளில் மாத்திரமன்றி நள்ளிரவு வேளைகளிலும் கூட எம்மவர்களைத் தேடி வேட்டை நாய்களாக அலைந்து கொண்டிருந்தார்கள்.


எங்கள் தலைவரின் தீர்க்கதரிசனமான நடவடிக்கைகள் தான் அன்றிலிருந்து இன்றுவரை, எப்பொழுதுமே எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்திருக்கின்றது. தலைவரிடம் இருக்கும், பின்னுக்கு நடக்கப்போகின்றவற்றை அப்படியே அச்சொட்டாக முன் கூட்டியே சொல்லிவிடும் ஆற்றல், திறமை, அதற்கேற்ற முறையில் உடனுக்குடன் மேற்கொள்கின்ற பாதுகாப்பு நடவடிக்கைகள், இவைகள்தாம் பல சந்தர்ப்பங்களில் எம்மில் பலரைக் காப்பாற்றியிருக்கின்றது.

தங்கத்துரை, குட்டிமணி ஆகியோரோடு நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரது கைது நடவடிக்கைகளும், சித்திரவதைகள், தேடுதல் சம்பவங்களும் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது ஒருநாள், “அண்ணா நீங்கள் என்ன செய்வியளோ தெரியாது. உடனே வீட்டை மாறுங்கோ. அடுத்து உங்களிட்டைப் பாய்வான்கள்.” என்று தலைவர் என்னை எச்சரித்தார்.

ஒரு சனிக்கிழமை நாங்கள் (நான், மனைவி, குழந்தைகள் நால்வர்) வீடு மாறுறம். அடுத்த செவ்வாய்க்கிழமை (29.04.81) நள்ளிரவில் நாங்கள் தங்கியிருந்த அந்த வீடு சுற்றிவளைக்கப்பட்டு என்னைக் கைதுசெய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

வங்கிப் பணம்பறிப்பு நடவடிக்கையோடு சம்பந்தப்பட்ட தங்கத்துரை ஆகியோருக்கு நேரடியாக அடையாளம் தெரிந்தவர்கள் தொடர்ந்தும் இங்கிருந்தால் அனைவருமே கைதுசெய்யப்பட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




முற்றுகையில் முன்னின்று முதற்சாவு கண்ட லெப். சங்கர்

விடுவோம் என்பதனாலும், ஒரு சில உறுப்பினர்களோடு இயங்கிவந்த இயக்கம் வளர்ச்சி பெற வேண்டு மென்ற நோக்கிலும் எம்மில் சிலர் தமிழகம் சென்று சில காலங்களுக்கு அங்கு தங்கியிருப்பது என முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவின்படி நானும் தமிழகம் போய்ச் சேர்ந்த போதுதான் சங்கரை அங்கு சந்தித்தேன்.

சென்னையின் புறநகர்ப்பகுதி ஒன்றில் நாங்கள் வீடொன்றை வாடகைக்கு பெற்று அங்கு தங்கி யிருந்தோம். கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வரை சங்கர் மற்றும் சிலரோடு ஒன்றாக வாழ்கின்ற பேறு எனக்குக் கிட்டியது.

சங்கரைப் பற்றிச் சொல்வ தென்றால்.... நல்ல கம்பீரமான தோற்றம். சுறுசுறுப்பான நடவடிக் கைகள், தலைவர்மீது அளவுகடந்த விசுவாசம், அதிகம் பேசமாட்டான், இனிப்பு என்றால் கொள்ளை ஆசை.

அந்த நாட்களிலை எங்கடை கைச்செலவுக்கு என்று சொல்லி ஒவ்வொருவருக்கும் பத்து ரூபா தரப்படும். அந்தக் காசிலைதான் நாங்கள் எங்கள் தனிப்பட்ட செலவுகளைச் செய்துகொள்வோம். சங்கருக்கு வழங்கப்படும் அந்தப் பத்து ரூபாயிலை அவன் தனக்கென தனியாக எதுவும் செலவு செய்ய மாட்டான். பால் கோவா, மைசூர் பாகு, உட்பட இனிப்புப் பண்டங் களை வாங்கிவருவான். எங்கள் எல்லோருக்கும் தருவான். நாங்கள் எல்லோரும் சந்தோஷமாக சாப்பிடு வோம்.

நாங்கள் தங்கியிருந்த இடத்திற் குக் கிட்ட மலையடிவாரத்தில் இந்திய இராணுவத்தின் சில பிரிவினர் தினமும் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி எடுப்பார்கள். எங்களையும் அழைத்துக்கொண்டு சென்று அவற்றை ஆர்வத்தோடு அவதானிப்பான்.

நான் தமிழகம் போய்ச் சேர்ந்தது 1981 ஜூன் 7ம் திகதி. ஆகஸ்ட் மாதக் கடைசிவரை அவர்களு டனேயே தங்கியிருந்தேன்.

சிங்களப் பொலிசாரின் கெடுபிடி களினால் தொடர்ந்தும் நாட்டிலே தங்கியிருக்க முடியாத சூழ்நிலையி னால் எனது வீட்டுக்கார்றரையும் தம்பிமார் தமிழகத்திற்குக் கூட்டி வந்தனர். அதன்பிறகு எங்கள் குடும்பம் பாண்டிச்சேரியிலை தங்குவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. எனது மனைவி பிள்ளைகளோடு அங்கு தங்கியிருந்த வண்ணம் தேவைகளின் பொருட்டு எம்மவர்கள் தங்கியிருந்த இடங் களுக்குச் சென்று அவர்களைச் சந்தித்து வருவேன்.

## 1982 நவம்பர் 26ம் திகதி...

அப்போது தலைவர் மதுரையில் இருந்தார். மே 82ல் சென்னை பாண்டிபஜாரில் உமாமகேஸ்வர னுடனான சூட்டுச் சம்பவத்தினைத் தொடர்ந்து சிலகாலம் சென்னை மத்திய சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்த தலைவர் அவர்கள் நிபந்தனையோடு கூடிய பிணையில் விடுதலை செய்யப்பட்டு மதுரையில் தமிழ்நாடு காவல்துறை யினரின் கண்காணிப்பில் 'லாட்ஜ்' ஒன்றில் தங்கியிருந்தார்.

அன்று தலைவரின் பிறந்தநாள் என்பதற்காக தலைவரைச் சந்திப் பதன் பொருட்டு பாண்டிச்சேரியிலி ருந்த எனது கடைசிமகள் தமிழினியையும் (அப்பொழுது அவள் இரண்டு வயதுக் குழந்தை) அழைத்துக் கொண்டு மதுரைக்குச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சென்றிருந்தேன்.

தலைவர் தங்கியிருந்த அந்த அறைக்குள் நான் சென்றபோது அங்கு ஒரே நிசப்தமாயிருந்தது. வழக்கமாக தலைவர் இருக்குமிடம் எப்பொழுதுமே கலகலப்பாக இருக்கும். ஆனால் அன்று அமைதி குடிகொண்டிருந்தது. பல நிமிடங்கள் வரை யாரும் எதுவுமே பேசவில்லை.

அமைதித் திரையை விலக்கிக் கொண்டு, "அண்ணா, சங்கர் சூடுபட்டு, கொண்டுவந்திருக்கினம். அங்கை கரையிலையும் பிரச்சினைய ளாம். கொண்டுவரப் பிந்திட்டினம். பிழைக்க வைக்கிறது கஷ்டம் போல இருக்கு. நீங்கள் தமிழைக் கொண்டு போய் வீட்டை விட்டுட்டு உடனே திரும்பி வாருங்கோ..." என்றார் தலைவர்.

"ஏதும் நடக்கக்கூடாதது நடந்த தெண்டால் நீங்கள்தான் பொறுப் பேற்று எல்லாம் செய்து முடிக்க வேணும். நீங்கள்தான் 'றிஸ்க்' எடுக்க வேணும். நீங்கள் குடும்பமா இருக்கிறபடியா பிரச்சினையள் வராது....." என அவர் தொடர்ந்தார்.

நான் உடனேயே அவ்விடத்தை விட்டு அகன்றேன். மதுரையிலிருந்து திருச்சி, விழுப்புரம் வழியாக பாண்டிச்சேரிக்குப் போய் தமிழினியை விட்டு விட்டு மீண்டும் நான் மதுரைக்குப் போய்ச் சேர்ந்த போது மறுநாள் பொழுதுபட்டு விட்டது.

அங்கு எல்லோருமே சோகமய மாக வீற்றிருந்தார்கள். அவர்கள் உட்காந்திருந்த அந்தக் கோலம் எனக்கு நிலையைத் தெளிவுபடுத் தியது.

எதற்குமே கலங்காத எமது தலைவரின் கண்களும் சிவந்து போயிருந்தன.

எமது இயக்கத்தைப் பொறுத்த வரையில் சாவுகள் எமக்கு இப்போது பழக்கப்பட்டுவிட்டன. கொத்துக் கொத்தாக எமது வீரர்களை, வீராங்கனைகளை நாம் இழந்துவிடுகின்ற சந்தர்ப்பங் களிற்கூட, எமது நெஞ்சங்களில் சோகவெள்ளம் ததும்பி வழிந்தாலும் அவற்றை வெளிக்காட்டிக் கொள்ளாதவர்களாக "இவர்கள் மனம் என்ன கருங்கல்லா....?" என மற்றவர்கள் சிந்திக்கின்ற அளவுக்கு நாங்கள் எங்களைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றோம்.

ஆனால் அன்றைய அந்த நிகழ்வை, சங்கரின் இழப்பை அப்பொழுது எங்களால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!

திருநெல்வேலிப் பகுதியில் காயப்பட்ட அவனுக்கு இங்கேயே வைத்திய வசதி கிடைத்திருந்தால் சங்கரின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும்.

இயக்கங்களோடு தொடர்புடை யவன் என ஒருவன்மீது ஒரு சிறு சந்தேகம் வந்தாலும் உற்றார், உறவினர், உயிர் நண்பர்கள் கூட எம்மை விட்டு ஓடி ஒழிந்த காலமது! பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு உட்பட்ட ஒருவனுக்கு வைத்தியம் செய்ய யார் அப்பொழுது இங்கு முன்வந்திருப் பார்கள்.....?

தமிழகத்திலும் அப்பொழுது அதேநிலைதான். இலங்கையைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கள்ளக்கடத்தல்

## இந்த நூற்றாண்டின் இணையற்ற போராளிகள்

அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் 'சிட்னி மோனிங் ஹெறால்ட்' பத்திரிகையின் செய்தியாளர் லின்சி மேச்டொச் எழுதிய குறிப்பு ஒன்றில் விடுதலைப் புலிகள் பற்றிக் காணப்படுகிறது.

தமிழீழத்திற்காகப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலைப் போராளிகள் மட்டுமல்ல, அவர்கள் தமது கொள்கையில் அதீத நம்பிக்கை கொண்டவர்கள்.

அவர்கள் தங்களது கொள்கையை உயிரினும் மேலாக நேசிக்கின்றனர். அவர்கள் தமது உயிரினை துச்சமென மதிப்பவர்கள் என்று விடுதலைப்புலிகளைப் பற்றி லின்சி மேச்டொச் எழுதியதோடு, இந்த நூற்றாண்டின் இணையற்ற போராளிகள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காரர்கள் எனவும், கள்ளத் தோணிகள் எனவும் கைதுசெய்து சிறையில் போட்டுவிடுவார்கள். அப்படி இருக்கும்போது, இலங் கையைச் சேர்ந்த ஒரு இளைஞன், அதுவும் துப்பாக்கிச் சூட்டினால் காயப்பட்டவன் என்றால் யார்தான் உதவி செய்ய முன்வந்திருப் பார்கள்.....?

அங்கும் நாங்கள் சுதந்திரமாக நடமாடமுடியாத காலம் அது. 83ம் ஆண்டு ஆடிக்கலவரத்திற்குப் பின்தான் அங்கு நாங்களும் 'அகதிகள்' என்ற பெயரிலோ, 'புலிகள்' என்ற பெயரிலோ நடமாட முடிந்தது.

காயப்பட்ட சங்கரை தமிழகத் திற்குக் கொண்டு வந்தவருக்கு தமிழ்நாடு புதுசு. அவர் கோடிக் கரையில் சங்கரை தங்கவைத்து விட்டு மதுரைக்கு வந்து தகவல் சொல்லி, மதுரையில் இருந்து எம்மவர்கள் வாகனம் கொண்டு சென்று சங்கரை எடுத்துவந்து தனியார் வைத்தியசாலை ஒன்றில்தான் இரகசியமாக அனுமதிக்க முடிந்தது.

வைத்திய வசதிகள் நேரகாலத் திற்குக் கிடைக்காத காரணத்தினால் சங்கரை எம்மால் காப்பாற்ற முடியாது போய்விட்டது. சங்கரினது உயிரைத்தான் எம்மால் காப்பாற்ற முடியவில்லை. அவனது உடலைத் தன்னும் பூரண மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று தகனம் செய்வதற்குக் கூட இயலாத நிலை.

சங்கரை, தமிழ்நாட்டின் திருநெல் வேலிப் பகுதியைச் சேர்ந்த வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர் எனவும், நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார் எனவும், அவரது உடலை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்கு நிதிவசதி இல்லையெனவும் கூறி, மரணச்சான்றிதழ் ஒன்றினைப் பெற்று, நள்ளிரவு நேரத்தில் யாரோ ஒருவரது அநாதைப் பிணம்போல, அந்தத் தனியார் மருத்துவமனையி லிருந்து பொது வாகனம் ஒன்றில் எடுத்துச் சென்று மதுரையிலுள்ள ஒரு சுடுகாட்டில், பொன்னம்மான், பேபி (இளங்குமரன்), கிட்டு, அப்பையா அண்ணர், கட்சித் தொண்டர்கள் சிலரோடு நெடுமாறன் ஆகியோரோடு நானும் ஒருவனாகச் சென்று தகனம் செய்தோம்.

www.tamilarangam.net

அப்பையா அண்ணர் அவர்களே சங்கரது உடலுக்குத் தீ மூட்டினார்கள். சங்கரின் அஸ்தி சேகரித்து பாதுகாப்பாக வைக்கப் பட்டு, மறுவருடம்தான் சங்கரது மரணச்செய்தியும் அவனது பெற்றோருக்குத் தெரிவிக்கப்பட்டு அஸ்தியும் கையளிக்கப்பட்டது.

சாதாரணமாக உலகில் யாராக இருந்தாலும்சரி, எங்கள் உடலில் எங்கேயோ ஒரு இடத்தில் காயம் பட்டுவிட்டது என்றால்கூட நாங்கள் "ஐயோ அம்மா" என்றுதான் குழறுவோம். ஆனால் சங்கரது உடலைவிட்டு உயிர் பிரிகின்ற அந்த இறுதி நேரத்திலும்கூட, அவனால் எதையுமே புரிந்துகொள்ள முடியாத அந்த மயக்க நிலையிலும்கூட "தம்பி.....தம்பி" என்ற வார்த்தைகள் தான் அவனது வாயிலிருந்து வெளிவந்தன. (தலைவரை நாம் அப்போது தம்பி என்றுதான் அழைப்போம்)

ஒவ்வொரு போராளியும் எங்கள் தலைவர்மீது எந்த அளவுக்குப் பற்றையும் பாசத்தையும் வைத்திருக் கின்றார்கள்; நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் இருக்கின்றார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

**எமது வீரர்கள் இரத்தம் சிந்தும் போது**

**எமது இதயம் வருந்துகின்றது.**

**எனினும் நாங்கள் உறுதி தளரமாட்டோம்.**

**ஏனெனில் இரத்தம் சிந்தாமல்**

**நாம் சுதந்திரம் பெறமுடியாது.**

*தமிழீழத் தேசியத் தலைவர்*
*திரு. வே. பிரபாகரன்.*

ஒவ்வொரு போராளிமீதும் தலைவர் எந்த அளவிற்கு அன் போடும், ஆதரவோடும் இருக்கின் றார்; அவர்களது வீரத்தைப் போற்றுகின்றார்; அவர்களது தற் கொடைகளுக்கு எந்த அளவுக்கு மதிப்பும் மரியாதையும் தருகின்றார் என்பதற்கு 'மாவீரர் நாள்' ஒரு சான்றாகும்.

எமது இயக்கத்தில் முதல் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சங்கர் (சத்தியநாதன்) மரணித்த அந்த நாளை, கார்த்திகை 27ம் நாளை மாவீரர்களை நினைவு கொள்கின்ற நாளாக, 'மாவீரர் நாளாகப்' பிரகடனம் செய்து 1989 இல் இருந்து ஆண்டுதோறும் விழா எடுத்து வருகின்றோம்.

## சிறிமாவோ பண்டாரநாயக்க அச்சம்

**கொழும்பு படை முகாம்களையும் புலிகள் தகர்த்து விடுவர். கொழும்பிலுள்ள பாதுகாப்புப் படைகளின் முகாம்களைத் தகர்த்து, அங்குள்ள ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் தாம் விரும்பிய இடங்களுக்கு எடுத்துச் செல்லும் அளவுக்கு விடுதலைப் புலிகள் துணிச்சலான சக்தியைப் பெற்றுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க பத்திரிகையாளர்களுடனான சந்திப்பு ஒன்றின்போது இவ்வாறு தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.**

**மண்கிண்டிமலை முகாம் மிகவும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்தது. இதனையே விடுதலைப் புலிகள் முப்பது நிமிடத்தில் தரைமட்டமாக்கியதுடன், அங்குள்ள இராணுவத் தளபாடங்களையும் எடுத்துச் சென்றுள்ள சம்பவமானது, எவராலும் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாதது என்றும் கூறியிருந்தார்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'யாழ்தேவி' = ஆனையிறவு

"'யாழ்தேவி' மீண்டும் ஆனையிறவுக்குத் திரும்பிவிட்டது." என்ற செய்தி கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டபோது, அவர்கள் ஒருவகையில் கொதித்துப் போயினர். நான் இங்கு பத்திரிகையாளர்கள் எனக் குறிப்பிடுவது சிங்கள பௌத்த இனவாதத்தைத் தாங்கி நின்று வளர்த்தெடுக்கும் பத்திரிகையாளர்களைத்தான். திட்டமிட்டவாறு 'யாழ்தேவி' கிளாலியில் தரித்து நிற்பதாகவும், அங்கு தனது நிலைகளைப் பலப்படுத்துவதாகவும், புலிகளின் நிலைகளும், படகுகளும் நிர்மூலமாக்கப்பட்டு விட்டதாகவும் கொட்டை எழுத்தில் பிரசுரித்த மறுதினமே 'யாழ்தேவி' ஆனையிறவு நிலையத்திற்குத் திரும்பவேண்டிய செய்தியினைப் பிரசுரிக்க வேண்டிய 'சோதனை' அவர்களுக்கு ஏற்பட்டது. இதனால் அவர்களுக்கு ஏற்பட்ட ஆத்திரம் அரசின்மீது கேள்விக்கணைகளாக எழுந்தது. அரச படைகள் கிளாலிக்கு சென்றிருந்தால் அங்கே நிலை கொண்டு சாவகச்சேரியை நோக்கி முன்னேறாதது ஏன்? கிளாலியில் நிலைகொள்ளுவதற்கு போதுமான ஆட்பலம் இராணுவத்தினரிடம் இல்லாவிடின் இத்தகைய நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்தது ஏன்? புலிகளையும் படகுகளையும் அழிப்பதுதான் இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்றால், இதனை ஆகாயம் மூலமான விமானத் தாக்குதலால் மேற்கொண்டிருக்க முடியாதா? 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் நோக்கம்தான் என்ன? இப்படியாக கேள்விக்கணைகளை அரசின்மீதும் இராணுவம் மீதும் தொடுத்து காரசாரமான கண்டனங்களையும் எழுப்பியுள்ளனர் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள்.

தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களின் சீற்றம் தாக்குதலின் ஊக்கம் காணாது என்பதன் அடிப்படையில் எழுந்தது என்பது மட்டுமன்றி, தமது பத்திரிகைகளில் முகப்புச் செய்தியாகவும் மற்றும் பத்திகளிலும் தாம் எழுதிய விடயங்களை உடனடியாக மறுதலிக்க வேண்டி ஏற்பட்ட அவலத்தின் வெளிப்பாடாகவும் அமைந்தது.

'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கை காரணமாக ஆயுதப்படையினர் இலட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஆயுதங்களை இழந்தது மட்டுமன்றி அவ் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியமை இரட்டைத் தோல்வியாக அமைகின்றது என்று கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரை ஒன்று கவலை தெரிவித்துள்ளது. முன்னர் ஒரு தடவை யுத்தநிறுத்தம் குறித்த கோரிக்கையினை விடுதலைப் புலிகள் விடுத்தபோது, அதனை மறுதலித்த சிறிலங்கா அரசதரப்பு, யுத்த நிறுத்தம் ஏற்படுமானால் விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்வார்கள் எனக் கருத்துத் தெரிவித்தது. இது குறித்து பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த தலைவர் பிரபாகரன் அவர்கள் "நாங்கள் இராணுவத்திடமிருந்தே ஆயுதங்களையுப் பெறுகின்றோம். யுத்த நிறுத்தம் ஏற்படின் எமக்கு இந்த வாய்ப்புக் கிடையாது." என்ற தொனியில் பதிலளித்தார். அண்மைக் காலங்களில் விடுதலைப் புலிகளின் ஆயுதவிநியோகஸ்தர்களில் சிறிலங்கா இராணுவமே முதலிடத்தினைப் பெற்றுவருகின்றது.

ஆம் ☐

## அடுத்தது

'யாழ்தேவி' அந்தப் பணியினை செவ்வனே செய்துவிட்டு புறப்பட்ட இடத்திற்கே திரும்பிவிட்டது.

### ஏன் இந்த யாழ்தேவி?

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டிய தேவை சிறிலங்கா அரசுக்கு ஏன் ஏற்பட்டது. 1992 ஆம் ஆண்டு ஆவணி மாதம் எட்டாம் திகதி அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் லெப். ஜெனரல். கொப்பேகடுவ, மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணா உட்பட பத்து உயரதிகாரிகள் கொல்லப்பட்ட பின்னர், சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையாகவும் இது அமைகின்றது. இத்தகைய பெரிய இராணுவ நடவடிக்கைக்கு சிறிலங்கா அரசு ஏன் தயாரானது?

1993 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதலாம் திகதி கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட டி.பி. விஜயதுங்கா இப்போது அடிக்கடி பிரகடனம் செய்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# → கிளாலி → சாவகச்சேரி

## இல்லை ✔

## என்ன ?

கொள்ளும் விடயம் இதுதான். “இங்கு இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை. பயங்கரவாதப் பிரச்சினைதான் உள்ளது.” இப்பிர கடனம் தர்க்க ரீதியாக இராணுவத் தீர்வினையே நாடிநிற்கின்றது. தமிழீழ மக்கள் மீது நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாகத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டுவந்த ஒடுக்குமுறைகளின் வெளிப்பாடே தமிழீழ விடுதலைப் போராட்டமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் என்பதனை மறுத்து, ‘பயங்கரவாதப்’ பிரச்சினை எனப் பிரகடனப்படுத்தினால் அப் ‘பயங்கரவாதத்திற்கு’ எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை ஏற்படத்தான் செய்யும்.

இதுமட்டுமன்றி, புதிய ஜனாதிபதி பதவியேற்றபின், சிறிலங்கா இராணுவம் புலிகளிடம் பலத்த அடி வாங்கிவந்தது. குறிப்பாக மண்கிண்டி மலை இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சிறிலங்கா அரசையும், அரச படைகளையும் அதிரவைத்தது. இது தவிர, கடற் புலிகளின் கரும்புலிகளினால் ஆவணி 26ம், 29ம் திகதிகளில் அடுத்தடுத்து நடாத்தப்பட்ட தற் கொலைத் தாக்குதல்கள் கடற் படையினருக்கு பெரும் சவாலாக அமைந்தது.

இத்தாக்குதல்களை அடுத்து இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளின் கையோங்கி வருவதான குற்றச்சாட்டு தென்னிலங்கையில் பரவலாக எழத்தொடங்கியது. புலிகளைக் கையாளும் திறமை தற்போதைய அரசுக்கு இல்லையென, அரசுமீது பெளத்த பேரினவாதிகள் குற்றஞ்சாட்டத் தொடங்கினர். இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை; பயங்கர வாதப் பிரச்சினையே உள்ளது எனப் பிரகடனப்படுத்திய ஜனாதிபதி, தனது பிரகடனத்தின் அடிப்படையில் பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கான திட்டங்களை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

‘யாழ்தேவி’ நடவடிக்கையின் மூலம் கிளாலிப் பிரதேசத்தினைக் கைப்பற்றல்; அங்கிருந்து சாவகச் சேரிப் பகுதியினை நோக்கி நகர்தல் என்பதே இப்பாரிய இராணுவ நடவடிக்கையின் நோக்கமாக வெளிப்படுத்தப்பட்டது. கிளாலி யினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் குடாநாட் டுக்கும் ஏனைய பகுதிகளுக்கு மிடையான போக்குவரத்தைத் துண் டிக்கலாம். இவ்வாறு பொது மக்களின் போக்குவரத்தைத் துண்டிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் பிளவினை ஏற்படுத் தலாம். இப்பிளவு ஏற்படும்போது, மேலும் இராணுவ நடவடிக்கை யினை மேற்கொண்டு புலிகளைப் பலவீனப்படுத்தி, மக்களிடமிருந்து அந்நியப்படுத்தலாம் போன்ற பல உள்நோக்கங்களையும் இவ் இரா ணுவ ஆக்கிரமிப்புத் திட்டம் கொண்டிருந்தது.

### திட்டமிடப்படாத நடவடிக்கையா ?

‘யாழ்தேவி’ நடவடிக்கையினை விமர்சிக்கும் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் இது ஒழுங் காகத் திட்டமிடப்படாத நடவடிக் கையா என்ற ரீதியான கேள்விகளை எழுப்பியிருந்தனர். ஆனால் ‘யாழ்தேவி’ போன்ற இராணுவ நடவடிக்கையினை திட்டமிடாத முறையில் சிறிலங்கா தரப்பு மேற்கொண்டிருக்க முடியாது. “பிரதேசங்களைக் கைப்பற்றுவதல்ல பிரச்சினை; அப்பிரதேசங்களைத் தக்கவைத்துக் கொள்வதுதான் பிரச்சினை.” என்பது சிறிலங்கா இராணுவத் திட்ட வகுப்பாளர் களின் அடிப்படைப் பிரச்னையாக இருந்து வருகின்றது. கைப்பற்றப் பட்ட பிரதேசங்களுக்குள் ஊடுருவி, தாக்குதல் நடாத்தி, இராணுவத் திற்குப் பெரும் சேதம், இழப்பினை ஏற்படுத்தக்கூடிய சக்தி விடுதலைப் புலிகளுக்கு இருப்பதனால், விடு தலைப் புலிகள் ஊடுருவ முடியாத அளவுக்கு நெருக்கமான நிலைகளை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் சிறிலங்கா இராணுவத்திற்கு இருந்து வருகின்றது. இதனால், ஏற்கனவே தாம் கைப்பற்றிய பிரதேசங்களைக் கூடக் கைவிட்டு பின்வாங்க வேண்டிய கட்டாயம் இராணுவத் திற்கு ஏற்பட்டிருந்தது. இரு மாதங்களுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்திலிருந்தும் கணிசமான பிரதேசங்களை விட்டு இராணுவம் பின்வாங்கியிருந்தது.

இந்நிலையில், ‘யாழ்தேவி’ இரா ணுவ நடவடிக்கையினை ஆரம்பிக்க முன்னர், கிளாலியினைக் கைப்பற்று வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும், அவ்வாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கைப்பற்ற முடிந்தால், கிளாலிப் பகுதியினைத் தக்கவைத்துக் கொள்வது தொடர்பாகவும் ஆழமாக ஆராய்ந்த பின்னரே சிறிலங்காப் படையினர் இராணுவ நடவடிக்கையினை ஆரம்பித்திருப் பார்கள். அவர்களுடைய கணிப்பு கிளாலியைக் கைப்பற்றுவதோ அல் லது கிளாலியில் தரித்து நிற்பதோ சாத்தியமில்லை என்பதாக இருந் திருந்தால் 'யாழ்தேவி'க்கு இவ்வளவு பிரகடனங்கள் செய்திருக்கமாட் டார்கள். வழமைபோல் சிறு தரை நகர்வு முயற்சியாகவே இந் நடவடிக்கை இருந்திருக்கும்.

ஆனால், இராணுவ திட்ட வகுப்பாய்வாளர்களின் முடிவு கிளாலியினைக் கைப்பற்றுவதும், அங்கு தரித்து நின்று போக்குவரத் தினைத் துண்டிப்பதுவும் சாத்திய மானது, என்பதாக இருந்தமையால் தான் இந்த இராணுவ நகர்வு பெரியதாக 'யாழ்தேவி' எனும் பெயரில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் யதார்த்தம் 'யாழ்தேவி'க்கு கசப்பான அனுபவத்தினைக் கொடுத்துவிட்டது.

## நடந்தது என்ன ?

'யாழ்தேவி' கிளாலியினைச் சென்றடைந்துவிட்டதாக இராணு வத்தரப்புச் செய்தியினை ஆதார மாகக் கொண்டு கொழும்புப் பத்திரிகைகளில் பரபரப்பாக எழுதப்பட்டது. உண்மையில் யாழ்தேவி கிளாலிக்குச் சென்றதா இல்லையா என்பதல்ல முக்கியம். இராணுவ நடவடிக்கை ஆரம்பிக் கப்படுவதற்கு முன்னரும், முடிவ டைந்த பின்னரும் உள்ள நிலைமைகளின் படி, எவர் கூடுதலான பாதிப்பிற்கு உள்ளாகி யிருக்கிறார்கள் என்பதே கவனத்திற்கு எடுத்துகொள்ள வேண்டியது.

'யாழ்தேவி' கிளாலிக்குச் சென்று விட்டது என்றும், பின்னர் திரும்பி ஆனையிறவுக்கு வந்துவிட்டது என்றும் அறிவித்தமை மூலம், சிறிலங்கா அரசு மிகுந்த நெருக்கடிக் குள்ளாகியுள்ளது. எதுவித பயனு மற்ற ஒரு இராணுவ நடவடிக் கையால் பாரிய இழப்பினை படையினர் சந்தித்துள்ளதாக பெரும் கண்டனங்கள் எழுந்துள்ளது. "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தது." போன்ற ஒரு நிலைமை சிறிலங்கா அரசுக்ககு ஏற்பட் டுள்ளது. 'யாழ்தேவி'யின் நகர்வுக்குப் பின்னரும் கிளாலியூடாக முன்னர் மாதிரியே படகுச்சேவை இடம்பெற்று வருகின்றது எனவும், படையினர் அழித்ததாகச் சொன்ன படகுகள் சேவையில் ஈடுபடுகின்றன எனவும் தளத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றை வைத்து நோக்கும் போது, சிறிலங்காப் படையினர் தாம் எதிர்பார்த்ததை விட பலத்த அடி வாங்கியுள்ளனர் என்பதும், அவர்களுக்கு ஏற்பட்ட இழப்பின் விளைவாக இராணுவ நடவடிக் கையினை இடையில் முறித்துக் கொண்டு தளம் திரும்பவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது என்பதும் தெளிவாகின்றது. நீண்ட நாட்கள் இடைவெளிக்குப் பின்னர் மிகுந்த ஆரவாரங்களுடன் ஆரம்பிக்கப் பட்ட இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்தமை சிறிலங்கா அரசின் நிலையினை பலவீனமாக்கியுள்ளது. தமிழீழ மக்கள் மீதான இராணுவ அழுத் தங்களை எதிர்த்துப் போராடுவதற்கு தமிழீழ மக்களுக்கு உறுதிமிக்க முன்னணிப்படை உண்டு என்பதனை மீண்டும் ஒருமுறை 'யாழ்தேவி' மூலம் வரலாறு பதிவுசெய்து கொண்டது.

## அடுத்தது என்ன ?

யாழ்தேவியின் தோல்வியின் பின் சிறிலங்கா அரசுக்கு உள்ள அடுத்த தெரிவு என்ன? இராணுவத்தீர்வு முயற்சி சாத்தியப்படாது என்பதனை சிறிலங்கா அரசு உணர்ந்துகொண்டுவிட்டதா?

சிறிலங்கா அரசு, பௌத்த இன வாதத் தூண்களின் மேல் நிறுத்தப் பட்டுள்ளது. சிங்கள பௌத்த இன வாதம் தமிழீழத் தேசிய இனத்திற்கு சமாதானத்தீர்வை வழங்குவதற்கு தயாராக இல்லை. தமது மேலாதிக் கத்துக்கு உட்பட்டவர்களாக தமிழீழ மக்கள் வாழும் ஒரு தீர்வுக்கு மேலாக எதனையும் சிங்கள பௌத்த மேலாதிக்கம் வழங்கிவிடப் போவதில்லை. இத்தகைய ஒரு தீர்வினை தமிழீழ மக்கள் மீது திணிப்பதற்குத் தடையாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகளே. இதனால்தான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை வெறும் 'பயங்கரவாதமாக' இனவாதம் சித்தரித்து வருகின்றது.

எனவே, சிங்கள பௌத்த இனவாதத்தினைத் தலைமை தாங்கும் சிறிலங்கா அரசு இராணுவத்தீர்வு குறித்த முன்னெ டுப்பினையே தொடர்ந்தும் மேற் கொள்ளும். 'யாழ்தேவி' தோல்வி யடைந்தமையினால் இராணுவ வெற்றிகளைச் சாதித்துப் பிரபல்யப் படுத்தும் நோக்குடன் மிகப் பாரிய இராணுவ நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முயலும். சிறிலங்காப்படையினரிடம் தற்போது உள்ள ஆள், ஆயுத பலத்தின் படி கூடுதலான பிரதேசங்களைத் தம்வசப்படுத் துவது சாத்தியமற்றது என்பத னையும் சிறிலங்கா அரசு உணர்ந் துள்ளது. எனவே மேலும் கூடுத லானவர்களை படைக்குச் சேர்த்துக் கொள்ளவும், கூடுதலான ஆயுதத் தளபாடங்களைத் தருவிப்பதற்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும்.

ஆனால், மனோபலம் இல்லாத இராணுவத்தினரிடம் எவ்வளவுதான் ஆயுதங்கள் இருந்தாலும் அது அவர்களின் வெற்றிக்கு வழிவகுத்து விடப்போவதில்லை. இராணுவத் தினரின் மனோபலம் தொடர்ச் சியாக வீழ்ச்சியடைந்து வரும் இன்றைய சூழலில் விடுதலைப் புலிகளின் ஆயுதக்கிடங்காகவே சிறிலங்கா இராணுவ முகாம்களும், இராணுவத்தினரும் மாறிக்கொண் டிருக்கின்றனர் என்பதை தொடரும் நிகழ்வுகள் உணர்த்தும்.

**- சர்வே -**

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீதான் எமதுணவு



- வவுனியா திலீபன் -

முட்கள் சுகம் தரும்!
இடி இதமாக
எம்மைத் தழுவும்!
தீ இனிக்கும்!

ஆச்சரியம் தான்....
பூக்களுக்கெல்லாம்
புயல் மீது பிரியம்!

நாம்
சுதந்திரத்தை
நேசிக்கிறோம்!

சுதந்திர விதை
முளைவிடுவதற்கு
ரத்த நீர் பாய்ச்சுகிறோம்!

காற்று மிக மிருதுவாய்
காது மடல்களைத் தட்டும்
தனிமைப் பொழுதில்
இந்த மண்ணில் வீழ்ந்தவர்கள்
நினைவுகள்
மனசுள்
மையங்கொள்ளும்!

பனி நீர்
சுடு நீராகும்.
தென்றல் காயப்படுத்தும்
சருகுகள்
கற்களாகி
கால்களைக் கிழிக்கும்!

மறுகணம்
வீழ்ந்தவர் ஞாபகங்கள்
எம்மை
புயலாகப் புதுப்பிக்கும்!

எமது விழிகளில்
நெருப்பு
இருப்புக் கொள்ளும்.

எமது செவிகளில்
முரசு
சரசமாடும்.

இத்தனை
இழப்புகளின் பின்னரும்
நாம் யோசிக்கவில்லை
எதிரியை யாசிக்க வைத்திருக்கின்றோம்.

தேசம் மீளும் வரை
தீ தான்
எமதுணவு.

☆☆☆

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காவிய வரலாறு படைத்த

1978ம் ஆண்டு மாசித்திங்கள் 4ம்நாள்! இலங்கையின் முப்பதாவது சுதந்திரதினம் நாடெங்கும் கோலா கலமாகக் கொண்டாட அன்றைய ஜே.ஆர் தலைமையிலான சிறிலங்கா அரசு ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

பாடசாலைகள் முதல் சகல அரச அலுவலகங்களிலும் தேசியக் கொடி ஏற்றி மரியாதை செய்ய வேண்டும் என்பது அரசின் கட்டளை. தன்மானமுள்ள தமிழ் மகன் எவனும் இவ்வைபவத்தை மனதாலும் ஏற்றுக்கொள்ளவே மாட்டான். அவ்வாறே,

அன்று கல்லூரி மாணவனாக இருந்த "சாள்ஸ் அன்ரனி" என்ற சீலனின் நெஞ்சிலும் நெருப்புக் கனன்றது.

"கொலை வாள் ஏந்திய சிங்கக்கொடிக்கு தலைவணங்கு வதால் தமிழனுக்கு என்ன லாபம்?" என்று சீற்றத்துடன் சிந்தித்த அந்த சிறுத்தை, தமிழினத்தின் உள்ளக் குமுறலையும் எழுச்சிகொண்ட இளைஞர்தம் எண்ணத்தின் வண் ணத்தையும் சிங்கள அரசுக்கும் உலகுக்கும் உணர்த்த வேண்டும் என முடிவு செய்தான்.


அவ்வாறே திருமலை இந்துக் கல்லூரியில், அன்று அரசுக்கு அஞ்சியோராலும், அடிபணிவோ ராலும் மரியாதையாக ஏற்றப்பட்ட சிங்கக்கொடி கரியாகிப் புகையாகிக் காற்றோடு கலந்துபோயிற்று!

இதுகண்டு புளகாங்கித மடைந்தான் புலிநிகர்த்த சீலன்.

அவனோடு அவன் நண்பர்களும் மகிழ்ந்தனர்.

நண்பர்களில் குறிப்பிடத்தக்க இருவர், கணேசும், புலேந்திரனும் ஆவர்.

(மேஜர். கணேஸ், லெப். கேணல். புலேந்திரன்) இந்நிகழ்வினால் அன்று, திருக்கோணமலை பதற்ற மடைந்ததுடன், நாட்டின் பல பாகங்களிலும் பரபரப்பாகப்



# மாவீரன் சீலன்

www.tamilarangam.net



பேசவும் பட்டது.

கொடியெரிப்பு நிகழ்வினால் சீற்றமடைந்த சிங்களப் பொலிசார் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவரெனப் பலரைக் கைதுசெய்து "விசாரித்தனர்". இதன் விளைவாய் "சாள்ஸ் அன்ரனி" என்ற நமது சீலன் மிக மோசமாகத் தாக்கப்பட்டதுடன் 14 நாட்கள் விசாரணைக் கைதியாகவும் அடைக்கப்பட்டான்.

ஆனால், மனவுறுதி கொண்ட மாணவனான அந்த மறப்புலியிடமிருந்து எந்தத் தகவலையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் பொலிசார் ஏமாற்றத்துடன் விடுவித்தனர்.

இனவெறி படைத்த சிங்களக் காடையர்களினாலும், படையினராலும் திருமலையில் அடிக்கடி நடாத்தப்படும் வெறியாட்டம், வீடெரிப்புக்கள், மண்பறிப்பு முதலியன கண்டு சீற்றமும் சிந்தனையில் நெருப்பும் கொண்டு நின்ற சீலனின் வாழ்வில் மேற்படி நிகழ்வுகள் ஒரு முடிவுக்கு வரும் வாய்ப்பைத் தந்தன.

அக்காலகட்டத்தில், முளைவிட்டு வளர்ச்சிப் பாதையை நாடிக்கொண்டிருந்த, தலைவர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, விடுதலை விருப்புக் கொண்ட சீலனின் கவனத்தை ஈர்த்ததில் புதுமையேதுமில்லை.

எனவே விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட சீலன் அளவிலா மகிழ்வோடும், ஆழமான பற்றோடும், வீர, விவேகங்களோடும் செயற்ப்பட்டான்.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் சீலனின் பங்களிப்பானது அளப்பரியதும், இயக்க வளர்ச்சிக்கு அத்திவாரமும் போன்றதாகும். 27.10.82ல் சீலன் தலைமையேற்று நடாத்திய சாவகச்சேரிப் பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலின் வெற்றி கண்டு சிறிலங்கா அரசு மிரட்சியடைந்ததுடன், புலிகளின் திடமான வளர்ச்சியையும் உணர்ந்து கொண்டது.

மேலும், பொன்னாலையில் கடற்படையினர் மீதான வெற்றிகரத் தாக்குதல். 18.05.83ல் (உள்ளூராட்சி தேர்தல் தினத்தன்று) கந்தர் மடத்தில் தேர்தல் சாவடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதல், காங்கேசன் சீமெந்து ஆலையில் இருந்து வெடிக்க வைக்கும் கருவியைக் கைப்பற்றி வந்த வீரமான நிகழ்வு, விலகும்படி வேண்டுகோள் விடுத்தும் விலகாது சிங்கள அரசின் பாதந்தாங்கிக் கிடந்த இனத்துரோகிகளை களையெடுத்தமை, என சீலனின் போராட்ட வாழவில் நிகழ்த்திய சாதனைகள் எண்ணிலடங்கா.

ஈற்றில் 1983ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 15ம் நாளில் மீசாலையில் துரோகிகளின் காட்டிக்கொடுப்பினால் சுற்றிவளைத்த எதிரிகளின் குண்டுதுளைத்துக் காயமுற்ற நிலையில் இலட்சிய உறுதியுடன் இயக்க மரபுக்கமைய உயிருடன் எதிரியிடம் சிக்கக்கூடாது என்பதற்காகவும், கையிலிருந்த ஆயுதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற காத்திரமான உணர்வுடனும் சக போராளியான "ஆனந்"தோடு, தனது சக போராளியின் (நண்பனான "அருணா"வின்) கையாலேயே கட்டாயப்படுத்தி "என்னையும் ஆனந்தையும் சுட்டுவிட்டு ஆயுதத்தைக் காப்பாற்றிக்கொண்டு செல்" என்று இணையில்லா அர்ப்பணிப்பாளனாய் வீரச்சாவை ஏற்றுக் கொண்டான்.

இந்த மாவீரன் மறைந்து பத்து ஆண்டுகள் நிறைவெய்திய போதும், தமிழீழம் உள்ளவரை அவனது புகழ் நிலைத்து நிற்கும். அவன் எம் நெஞ்சங்களில் என்றும் வாழ்கின்றான். இந்த மாவீரனின் வாழ்வும் சாவும், ஆயிரமாயிரம் போராளிகளை உருவாக்கும் உந்துசக்திவாய்ந்த உன்னதமான காவிய வரலாறு என்றால் மிகையாகாது.

**நிலாதமிழின்தாசன்**

**நன்றி: ஈழநாதம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வழுக்கையாறு வழிவந்த வரலாறு

செ. கிருஷ்ணராசா

யாழ். குடாநாட்டின் சமூக, பண்பாட்டு உருவாக்கத்தில் இயற்கையமைப்பும் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ் வகையில் குடாநாட்டின் தாய்நிலப் பகுதியில் வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கும், தொண்டைமானாற்றிற்கு கிழக்கே மாயக்கை நீரேந்துப் பரப்பும் மக்கள் வாழ்வின் ஜீவனோபாய முறைகளில் செல் வாக்குச் செலுத்தியிருந்தமைக்கான தொல்லியற் சான்றுகள் கிடைத் துள்ளன. குறிப்பாக மாயக்கையி லிருந்து சேகரிக்கப்பட்ட புராதன, மத்தியகாலப் பகுதிக்குரிய மட் பாண்ட ஓடுகள், கீச்சுக்கிட்டங்கள் (Iron slag), நாணயங்கள், மணிகள், கல்லில் செய்யப்பட்ட கருவிகள் போன்றன சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. இதேபோன்று வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் ஓரங்களிலில் இருந்து சேகரிக்கப் பட்ட கல்லாகிப்போன உயிரினச் சுவடுகள், மிகவும் காலத்தால் முந்திய மட்பாண்ட ஓடுகள், நாணயங்கள் போன்றன இப்பிராந் தியத்தின் வரலாற்று முக்கியத் துவத்தினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவற்றுள் எவையுமே திட்டமிடப்பட்ட தொல்லியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில் இருந்துகொண்டிருப்பினும் கூட, கந்தரோடையிலிருந்தும், ஆனைக்கோட்டையிலிருந்தும் இது வரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டு எச்சங்கள் வழுக்கை யாற்றுப் பள்ளத்தாக்கு கொண்டிருந் திருக்கக்கூடிய பண்பாட்டுப் பங்க ளிப்பினையும், அவற்றின் முக்கியத்து வத்தினையும் உணரவைக்கின்றன.

அளவெட்டி, தொல்புரம், எள்ளாலை (ஏழாலை) ஆகிய மையங்களை இணைக்கின்ற நீரேந்துப் பரப்பிலிருந்து மாரி காலத்தில் உருவாகும் நீரோடை யானது, வளைந்து வளைந்து சென்று ஆனைக்கோட்டையில் யாழ்ப்பாணக் கடல்நீரேரியுடன் சங்கமமாவதையே வழுக்கையாறு என்கிறோம். மாரிப் பருவத்தில் மாத்திரம் இப்பள்ளத்தாக்கில் நீர் நிறைந்து அலைகள் தோன்றுவ தனைக் காணலாம். கோடை காலத்தில் ஆங்காங்கு வற்றாத கோடையூற்றுக்களாக அப்பள்ளத் தாக்கில் நிலைத்து நிற்கும் நீர்ச் சுனைகளிலிருந்து மக்கள் பயிர்ச் செய்கைக்காக நீரைப் பயன் படுத்துகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடரும் இச் செயற்பாடானது, அப்பள்ளத் தாக்கினை மையப்படுத்தி வாழும் மக்களது வாழ்விலும் உணர்விலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத் தியது என்றால் அது மிகையாகாது. தமிழகத்தில் காவிரி நதிப்படுக்கை எவ்வாறு மக்கள் வாழ்வின் உயி ரோட்டமாக விளங்கியதோ அதே போன்று, யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு மக்களது ஜீவனோ பாயத்துடன் ஒன்றித்திருந்தது என லாம். அப்பின்னணியில் மக்களது சமய வாழ்வு மலர்வதற்கும் அப்பள்ளத்தாக்கு வழிசமைத்துக் கொடுத்திருந்தது.

யாழ்ப்பாணத்தின் சமூக உரு வாக்கம் பற்றி ஆராய்வோருக்கு, வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு வளமான சான்று சேர்க்கும் மையமாக அமையும் என்பதும் எமது நம்பிக்கையாகும். யாழ்ப் பாணக் குடாநாட்டில் உள்ள ஏனைய பிராந்தியங்களை விடவும், வழுக்கையாற்றுப் பள்ளத்தாக் கிலேயே பூர்வீகக் குடியிருப்புக் களையும், பாரம்பரிய சமூகக் கட்டுக்கோப்பு முறைகளையும் கண்டுகொள்ள முடிகிறது. இவ் வாறான சமூக உருவாக்கத்துக்கான உற்பத்தியுறவினையும், உற்பத்தி முறைகளையும் உருவாக்கிக் கொடுத்த ஒரு மையம் என்ற வகையில் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் வரலாற்றுப் பின்புலம் எதிர்காலத்தில் நன்கு ஆராயப்பட வேண்டியதாகவுள்ளது.

## உற்பத்தி வேளாண்மை, மேலதிக உற்பத்தி, நகரவாழ்வு

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் கோடைப் பருவத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் எள்ளு, குரக்கன், தினை, சாமை, பூசனி போன்ற பயிர்வகைகளையே உற்பத்தி செய்தனர். மாரிகாலத்தில் நெல் வேளாண்மை சிறப்பிடத்தினைப் பெற்று வந்தது. ஆனைக்கோட்டை ஈறாக மாரிப் பருவத்தில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனைக் கோட்டை என்ற மையமானது எள்ளு உற்பத்திக்கும் எண்ணை ஊற்றும் கைத்தொழிலுக்கும் அன்று தொட்டு இன்றுவரைக்கும் சிறப் பிடம் பெற்று வருவதனைக் காண

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

லாம். இப்பொழுது ஏழாலை என்று அழைக்கப்படும் மையமானது புராதன காலத்தில் எள்ளு ஆலைகள் நிறைந்த தொழிற்களமாக விளங்கியிருந்திருக்க வேண்டும். 'எள்ளாலை'ப் பெருங்குடி மக்கள் 'கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கலாம்' என்ற தத்துவத்தினை நன்கு தெரிந்து வைத்திருந்தவர்கள். எள்ளுணவு வகை செய்வதில் கை தேர்ந்தவர்கள், வழுக்கையாற்றின் வழி சென்று பொருளீட்டிய பெருமக்கள் இவர்களாவர். இதே போன்று தொல்புரம் (தொள்புரம்), அளவெட்டி (அளைவெட்டி) பிராந்திய மக்களும் வழுக்கையாற்று வழிசென்று தத்தமது ஜீவனோபாயத்தினை அமைத்து வந்தவர்களாகும். இவ்வாறு உற்பத்தி வேளாண்மைத் துறையில் மிகவும் உந்துசக்தியாக விளங்கிய இப்பள்ளத்தாக்கானது மேலதிக உற்பத்தி முறைமை உருவாவதற்கு உரிய பல சாதகமான நிலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்ததில் வியப்பேதுமில்லை. இப்பின்னணியில் இப்பள்ளத்தாக்கின் ஓரமாக நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வகையில் கந்தரோடை என்ற நகரத்தின் தோற்றமானது பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டவுடன் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மையமாக வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இதனால் பல்வேறு வகையான பண்பாட்டு அம்சங்கள் அவ்விடத்தில் காலத்திற்குக் காலம் மையம் கொள்வதற்கும் வாய்ப்பாயிற்று. இவ்வாறான ஒரு நிலைக்கு வடிகாலாக அமைந்தது வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கென்றே குறிப்பிட வேண்டும். இதனால் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு மரபுகள் பலவற்றுடனும் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு இணைத்துக் கூறப்படுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.

www.tamilarangam.net

## காலத்தால் முற்பட்ட பண்பாட்டு மரபுகள்

'கடவை' என்று முடியும் இறுதிப் பெயர்ச்சொற்கள் பல இக்குடா நாட்டின் குறிப்பிட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களில் காணப்படுவது அவதானிக்கத் தக்கது. ஆயக்கடவை, அங்கண் அம்மைக் கடவை, பெருமாக் கடவை, கந்தவனக்கடவை, இலுப்பைக்கடவை என்பன அவற்றுள் சிலவாகும். பண்பாட்டு மரபுகள் பரிமாற்றத்திற்குட்பட்ட முதல் மையங்களே 'கடவை' என்று வழங்கும் இறுதிப் பெயர்ச் சொற்களுடன் காணப்படுகின்றன எனலாம். அவ்வகையில் அங்கண் அம்மைக்கடவை என்ற மையமும் பண்பாட்டு மரபு ஒன்றுடன் இணைத்துக் கூறப்படுவதனைக் காணலாம். அம்மையமானது கந்த ரோடைக்கு நேர் மேற்கே, பள்ளத் தாக்கிற்கு அப்பால் அமைந்துள்ள கல்வளைப்பிள்ளையார் கோவிலுக்கு வடதிசையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அங்கண் அம்மைக் கடவையில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் கோவில் மிகவும் புராதனம் வாய்ந்தது என்று கூறப்படுகின்றது. இப்புராதனக் கோவிலுடன் தொடர்புபட்ட மரபானது ஈழத்திற்கு கண்ணகி வழிபாடு பரவிய பண்பாட்டுப் புலத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. சேரநாட்டில் சேரன் செங்குட்டுவன் மதுரையை எரித்த கண்ணகியைத் தெய்வமாக்கி, அத்தெய்வத்திற்கு இமயத்துக் கல்லில் சிலை வடித்து, விழா எடுத்த சமயத்தில் இலங்கை மன்னனான முதலாம் கயவாகு வேந்தனும் உடனிருந்து பங்கு கொண்டான் எனவும், பின்னர் அம்மன்னன் திருவடி நிலையில் வந்திறங்கி அங்கண் அம்மைக் கடவையில் 'மதுரையை எரித்த

## உவர் நிலத்தில் நெற்செய்கை பரீட்சார்த்தமுயற்சி.

**உவர் நிலப் பிரதேசத்தில் முதன் முதலாக பரீட்சார்த்த முறையில் நெற்பயிர்ச்செய்கை ஒன்றினை கோப்பாய் பிரதேச செயலாளர் அறிமுகப்படுத்தியுள்ளார்.**

**கோப்பாய் வடக்கு கோட்டை வாய்க்கால் ஒழுங்கையில் கிழக்குப்புறமாய் உள்ள பண்படுத்தப்பட்ட தரவையில் இப்பயிர்ச்செய்கை நடைபெறவுள்ளது. இரண்டு ஏக்கர் நிலத்தில் செறிவிற்கேற்ற மாதிரி மூன்று பிரிவாக பிரித்து, உவர் நிலத்தை பயிரிடக்கூடிய நான்கு நெல்லினங்களை அரை ஏக்கருக்கு ஒரு இனம் என்றவாறு விதைக்கவுள்ளனர்.**

**இப்பிரதேசத்தில் இவ்வாறான உவர்நிலம் 500 ஏக்கர் உள்ளது. இந்நிலத்தில் உள்ள மண்ணை இரண்டு வாரத்திற்கு ஒருமுறை வவுனியா, பேராதனையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையங்களிற்கு அனுப்ப ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. உவர் நீரை (கடல் நீரை) இப்பிரதேசத்திற்குள் வராதவாறு தடுக்க முதல் நடவடிக்கையாக 30,000 ரூபா செலவில் துருசுகள் திருத்தி அமைக்கப்பட்டும், அணை ஒன்று புதிதாக கட்டப்பட்டுமுள்ளது. இதற்கான நிதியை கோப்பாய் பிரதேச செயலர், பிரிவு பிரமாண அடிப்படையில் முதலீடு நிதியத்திலிருந்து ஒதுக்கியுள்ளது.**

www.tamilarangam.net

## புழுக்கொடியல் மாவிலிருந்து இனிப்புப் பண்டம் அறிமுகம்

**தமிழீழத்தின் முக்கிய வளமான பனையின் பயன்பாடுகளில் ஒன்றான புழுக்கொடியல் மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட புதியதோர் இனிப்புப் பண்டம் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியினர் நல்லூர் உற்சவகால கண்காட்சியின்போது மக்கள் மத்தியிலே அறிமுகப் படுத்தியிருந்தனர்.**

**பரீட்சார்த்தமாக தயாரிக்கப்பட்ட இந்தச் சுவையான புழுக்கொடியல்மா இனிப்புப் பண்டம் கண்காட்சியினை பார்வையிட வந்திருந்த பெருந்தொகை மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. பனை வளத்தினுடைய பயன்பாட்டினை மக்கள் மத்தியிலே அறிமுகப்படுத்தும் நோக்குடனேயே புழுக்கொடியல் மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டம் விநியோகிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.**

**அத்துடன் அது தொடர்பான செய்முறை விளக்கம் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.**

கண்ணகிக்கு' தனது முதற்கோயிலை நிர்மாணித்துவிட்டு பின்னர் வழுக்கையாற்றினூடாகப் பயணம் செய்து, தனது வாழ்விடத்திற்கு மீண்டான் எனவும் மரபுக் கதைகள் வாயிலாக அறியமுடிகின்றது.

சேர நாட்டிற்கும் ஈழ நாட்டிற்கும் இடையிலான தொடர்புகள் பெருமளவுற்கு வாணிப முயற்சிகளுக்கூடாகவே கையாளப்பட்டிருக்க வேண்டும். தென்னிந்தியாவில் வாணிப முயற்சிகளில் ஈடுபட்ட ரோம வியாபாரிகள் ஈழத்திற்கு நேரடியாக வந்து அம்முயற்சிகளில் ஈடுபட்டிருக்கவில்லை. பதிலாக சேரநாட்டு வியாபாரிகளுக்கூடாகவே அவ் வியாபார முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டமைக்கான சான்றுகளை மகாவம்சம் போன்ற இலக்கியங்களின் ஊடாக அனுமானிக்க முடிகிறது. இக்காரணத்தினாலேயே சேரன் செங்குட்டுவன், கயபாகு உறவு மிகவும் நெருக்கமடைந்திருக்க வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள 'செங்குந்தர்' (செங்குட்டுவர்) 'கட்டுவன்' போன்ற பெயர்கள் சேர நாட்டுடன் கொண்ட தொடர்புகளின் அடியாகவே பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இப்பின்னணியில் வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கும் சேரநாட்டு, ஈழநாட்டு வியாபாரிகளுக்கு மரக்கலம் ஓட்டுவதற்கு சாதகமான நிலையை தோற்றுவித்திருந்தது எனலாம். பாண்டிய நாட்டின் சமணமும், சேரநாட்டின் பௌத்தமும் எதிர்ப்பியக்கத்திற்குள் அகப்பட்டமையைத் தொடர்ந்து பௌத்தமானது தனது வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்குமான வகைகளை அயல் நாடுகளிலும் தேடிக்கொள்ள முற்பட்டது. இச் சூழலில் இலங்கையிலும் பௌத்தம் பரவிக்கொண்டது. இவ்வாறான பௌத்தப் பண்பாட்டின் இலங்கை வருகையில் அதன் ஒரு பிரிவானது சேரநாட்டின் ஊடாக இலங்கைக்கு எடுத்து வரப்பட்டிருக்கலாம் எனக் கருதுவதற்கு உதவும் சில சான்றுகளை வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கில், குறிப்பாக கந்தரோடையில் கண்டுகொள்ள முடிகின்றது. கந்தரோடையில் காணப்படும் எச்சங்கள் வெளிப்படுத்தி நிற்கின்ற கலை மரபுகளில் சேரநாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்ட அமராவதி பண்புகளின் சாயலை அவதானிக்க முடிகிறது. பழந்திராவிடத்தின் ஒரு பிரிவான சேரநாடு பௌத்தத்தின் செல்வாக்குக்குட்பட்ட நிலையில் பௌத்த கலைக் கூறுகளான ஸ்தூபி, விகாரைகள், புத்தர் உருவங்கள் என்பவற்றைக் கொண்டிருந்தன. தனித்துவம் வாய்ந்த ஸ்தூபி அமைப்பு முறைகளை சேரநாடு கொண்டிருந்தமை அவதானிக்கத்தக்கது. சிலப்பதிகாரப் பண்பாட்டினைத் தோற்றுவித்த அதே சேரநாடு, பின்னர் மணிமேகலை கண்ட துறவு வாழ்வினையும் கொண்டது என்றால், அது சேர நாட்டின் அமைவு எந்த அளவுக்குப் பண்பாட்டுப் பரிமாற்ற முறைகளில் பங்கெடுத்திருந்தது என்பதனை நிரூபிப்பதாக அமையும். கந்தரோடையிலும் இவ்வாறான பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டிருந்தது என்பதனை கிடைத்துள்ள சில சான்றுகள் வாயிலாக வெளிப்படுத்த முடிகின்றது.

### கந்தரோடை, தமிழ்ப் பௌத்த மையமா?

கந்தரோடை தொடர்பான தொல்லியல் சான்றுகள் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் அடிப்படையில் திராவிடப் பண்பாட்டுக்குரியதாகவும் மேற்படையில் பாளிபௌத்தப் பண்பாட்டுக்குரியதாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இங்கு பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடப் பழங்குடியினரே முதலில் வாழ்க்கையினைத் தொடங்கியிருந்தனர் என்பதும் பின்னரே பௌத்தப் பண்பாடு வந்து மையங்கொண்டிருந்தது என்பதும், இப்போது பெருமளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மிகப் பூரணத்துவமான தொல்லியல் அகழ்வாய்வினைக் கந்தரோடையில் நடத்தி முற்றுவிக்கப்படும் வரைக்கும் கந்தரோடை பற்றிய காலமும் கருத்தும் ஐதீகமான அளவிலேயே இருந்துகொண்டிருக்கும். இந்நிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் கந்தரோடையைப் பற்றிய வரலாறு பண்பாட்டுப் பகைப்புல மானது பலராலும் திரிபுபடுத்தப் பட்டு, காலத்திற்கேற்ற வகையில், காலத்தின் தேவைகருதி, அவரவர்க் குச் சாதகமாக எடுத்துக் கூறப்பட்டு வருவதனைக் காணலாம். கந்தரோ டையில் எவ்வாறு பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன என்பதும், அதனை எவ்வாறு பண்பாட்டு ஆய்வாளர்கள் இனி மேல் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதனைக் கண்டுகொள்வதும் எதிர்கால அதிகார மாற்றங்களின் ஊடாகவே தீர்மானிக்கப்பட வேண்டியவை ஆகிவிட்டன.

கந்தரோடையில் பௌத்தம் தொடர்பான தொல்லியல் எச்சங் கள் பெருங்கற்காலத் திராவிடப் பண்பாட்டுக்கான மண்படை அடுக்குகளுக்கு மேல் அமைந்து காணப்பட்டிருக்கின்றன. ஆனால் ரோமப் பண்பாட்டுக்குரிய எச் சங்கள் இவ்விரண்டு நிலைமைகளி லும் கலந்து காணப்பட்டிருக் கின்றமை இங்கு அவதானிக்கப்பட வேண்டிய ஓரம்சமாகும். தென்னிந்தி யாவில் ரோமப் பண்பாட்டுக்குரிய தொல்லியல் எச்சங்கள் பெருமளவுக் குப் பெருங்கற்காலத் திராவிடப் பண்பாட்டுடன் இணைந்து காணப் படுவதனை அவதானிக்கலாம். ஆனால், கந்தரோடையிலும் கேரளத்திலும் ரோமப் பண்பாட்டுக் குரிய தொல்லியல் எச்சங்கள் திராவிட பௌத்தப் பண்பாட்டுக் குரிய மண்படைகளுடன் கலந்து இணைந்த வகையில் காணப்பட்டி ருக்கின்றன. இந்நிலைமைனது நாம் எதிர்நோக்கும் சிக்கலை ஓரளவுக் காவது விடுவிப்பதற்கு உதவுவ தாகலாம்.

வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கின் அருகில் வளர்ச்சி பெற்ற இந்நகரமானது முதலில் விவசாயப் பொருளாதார நடவடிக்கைகளின் பின்னணியில் தோற்றுவிக்கப்பட்டது என்பதனை எவருமே மறுக்க முடியாது. அதாவது, பெருங்கற் காலத் திராவிட விவசாய மக்களே இந்நகரத்தின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்குமுடைய அடிப்படை களை அமைத்துக் கொடுத்திருந் தனர் என்பதாகும். பின்னர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வியாபார நடவடிக்கைகளின் பின்னணியில் சர்வ சமூகங்களையும் உள்ளடக்கிய ஒரு வியாபார மையமாக கந்தரோடை வளர்ச்சி யடைந்திருக்க வேண்டும் என் பதனை அங்கிருந்து கண்டெடுக்கப் பட்ட பிரமி, பிராகிருத, சிங்களக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்து கின்றன. இவ்வாறான ஒரு வளர்ச்சி நிலைக்கு வழுக்கையாற்றினூடாக இடம்பெற்றிருந்த மரக்கலங்களின் பயணங்கள் உதவியிருந்தன என்பது தெளிவாகின்றது. நல்லதேவன் துறை என்ற பெயரில் ஒரு பழங்கிராமம் அங்கு இன்றுவரைக்கும் நாவாய் போக்குவரத்து நடைபெற்றிருந்த மைக்குச் சிறந்த உதாரணமாகின்றது.

மரக்கலங்களின் பயணங்களும் சர்வதேச வியாபார நடவடிக் கைகளும் தடைப்படாது அபிவி ருத்தி அடைந்து வந்தது வரையில் கந்தரோடையில் பௌத்தமும் செழிப்புற்றிருந்தது எனக் குறிப் பிடலாம். சிலப்பதிகாரச் செழிப்பின் பின்னணியில் அங்கண் அம்மைக் கடவை தோன்றியது போன்று மணிமேகலையின் துறவின் பின் னணியில் கந்தரோடை வளர்ச்சி பெற்றது எனக் கூறினால் அது மிகையாகிவிடாது. வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் எதிரும் புதிருமாக இவ்விரு மையங்களும் அமைந்தி ருப்பது இரட்டைக் காப்பியங் களுக்கும் ஈழத்துக்கும் உள்ள உறவினை வலுப்படுத்த உதவுகின்றது ஆகலாம். ஆனால், அவையிரண் டுமே சேரநாட்டுத் தொடர்பினால் வலுப்படுத்தப்பட்டவை என்பதை மறந்துவிடலாகாது.

## சேரநாடு, கந்தரோடைத் தொடர்புகள்

கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட வட்டமா னதும், சதுரமானதுமான பௌத்தக் கட்டிடங்களின் அத்திபாரங்களது தோற்றப்பாடானது தாய்லாந்திலும் கேரளாவிலும் காணப்படுகின்ற வற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

## சோளம் விதை விநியோகிக்க த.பொ.மே.நி. நடவடிக்கை

யாழ். மாவட்டத்திலே 1993/94 காலபோகத்தில் சோளப்பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் உயர் விளைவினைத் தரக்கூடிய சோளம் விதைகளை ஒரு கிலோ 28 ரூபாய் வீதம் விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

வீட்டுத் தோட்டத்திலே சோளப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் ஊக்குவிப்பு முயற்சியாக 1/4 கிலோ சோளம் விதை இலவசமாக வழங்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி சோளம் விதைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட, மற்றும் சகல வட்டச் செயலகங்களுடனும் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையில் இப்பௌத்தக் கலையம்சங்கள் ஆந்திர மரபுக் குரியவையாகக் காணப்படுகின்ற பொழுதிலும், கந்தரோடையில் காணப்படுகின்ற பௌத்தமதத்துக் குரிய கட்டிடக்கூறுகளில் கேரள நாட்டுக்குரிய தனித்துவமான கட்டுமான அம்சங்கள் பொருந்தி யுள்ளது. அவற்றுள் ஒன்று கடற் பவளக் கற்களைக் கட்டிடங்களுக் குப் பயன்படுத்தும் முறைமையாகும். கேரளாவில் போர்க்களம், பாலக் காடு ஆகிய இடங்களில் கி.மு. 1ம் நூற்றாண்டுக்குரிய ஸ்தூபிகள் கடற் பவளக்கற்களினால் கட்டப்பட்டுள் ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கந்தரோடையிலும் கடற்பவளக் கல்லினால் கட்டப்பட்டவை பெரிதும் கேரள ஸ்தூபி அமைப்பு முறையினைக் கொண்டுள்ளன. கந்தரோடையில் வெளிப்படுத்தப் பட்ட பௌத்த கட்டிடக் கூறுகளில் தூண்களைத் தாக்குகின்ற துளை கற்கள், கற்றகடுகள் போன்றவை கேரள நாட்டு கற்கட்டுமானக் கலையின் அடியாக உருவாக்கப் பட்டிருந்தன. கேரள நாட்டில் பாறைப்பரப்புகளில் நுண்டுளைகள் இடும் முறையைப் பின்பற்றியே கந்தரோடையில் ஸ்தூபிகளின் உச்சிக் கற்கள் துளையிடப்பட்டி ருந்தன. மேலும், மிகப் பெரிய உச்சிக் கல்லின் நடுப்பாகம் கல்லறை போன்று அகழப்பட்டு விலை உயர்ந்த நவரத்தின மணிகள் இட்டு வைக்கப்பட்டிருந்த முறைமை யும் கந்தரோடையில் கண்டுபிடிக்கப் பட்டது. இதுவும் கேரள கட்டிடக் கலை மரபினையே வெளிப்படுத்து வதாக உள்ளது. இவை எல்லாவற் றுக்கும் மேலாக கந்தரோடை அகழ்வின் போது கண்டுபிடிக்கப் பட்ட 'திருகு கற்கள்' (தானியம் அரைப்பதற்காக பயன்படுத்தப் பட்டவை) கேரள நாட்டுப் பாணியை அப்படியே வெளிப்படுத் துவதாகவுள்ளது. இன்னும் பல அம்சங்களை ஆய்வின் அடிப்ப டையில் எதிர்காலத்தில் எடுத்துக் காட்ட முடியும் இப்பின்னணியில் சேரநாடு புராதன கந்தரோடை பற்றிய தொடர்பினை மேலும் ஆராய வேண்டும். அவ்வழியே வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் வரலாற்று முக்கியத்துவத்தினையும் மேலும் ஆராயக்கூடிய நிலை உருவாகலாம். சிலப்பதிகாரக் காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து மணி மேகலையின் 'அறஒளி' தோன்றி யமை போன்று கந்தரோடையிலும் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. அப்பண்பாட்டு மாற் றங்களுக்கெல்லாம் முதுகெலும்பாக வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு விளங்கிவந்திருக்கின்றது. ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் போது எவ்வாறு பருத்தித்துறையி லிருந்து மலையாளத்துடன் தொடர் புகள் ஏற்பட்டிருந்தனவோ, அதே போன்ற ஒரு தொடர்பினையே கந்த ரோடையும் பழைய மலையாளத் துடன் (சேரநாட்டுடன்) கொண்டி ருந்தது எனலாம். அத்தொடர் புகளின் பின்னணியில் மலையாள நாட்டுப் பண்பாட்டு மரபுகள் அங்கண் அம்மைக் கடவை கந்தரோடைப் பிராந்தியங்களில் நிலைபெறுவற்கு வாய்ப்பளிக்கப் பட்டது. சாத்துப்படியும், மேளமும் இப்பண்பாட்டு மரபின் எச்ச சொச்சமாக இருந்துகொண்டிருக் கின்றன. பெருங்கற்காலப் பண்பாடு, பௌத்த பண்பாடு, கண்ணகி வழி பண்பாட்டு மரபு போன்றன ஒரே பிராந்தியத்தில் மாறி மாறிச் செல் வாக்குச் செலுத்திய தன்மையை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் காணமுடிகின்றது. இவற்றிற் கெல்லாம் மையமாக கந்தரோடை விளங்கியிருக்கின்றது. இப்பிராந்தி யத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் எதிர்கால ஆய்வுகளே மேலும் பல புதிய தகவல்களைத் தருவதாக அமையும். எனவே, புதிய சிந்தனை நோக்கில் அமைந்த இக்கட்டுரை யானது மேலும் சிந்திக்கத் தூண்டு மாயின் அதுவே எடுத்துக்கொண்ட நோக்கத்தின் வெற்றியாக அமையும்.

நன்றி: வெளிச்சம்

ஒடுக்கப்படும் உலக மக்களில் ஒரு பிரிவினராக நாமும் சுதந்திரம் வேண்டி போராடி வருகின் றோம். எல்லா விடுதலைப் போராட்டங்களையும் விட எமது போர்க்குரல் இன்று உலக அரங்கில் மிகப் பெரிதாக ஒலிக்கிறது. எமது சுதந்திரப் போர் ஏனைய விடுதலைப் போராட்டங்களையும் விட சாரம்சத்தில் வித்தியாசமானது; தனக்கே உரித்தான தனித்துவத்தைக் கொண்டது; ஒப்பற்ற சிறப்பம்சங் களைக் கொண்டது.

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் இங்கு, எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கிறது. சாவுக்கு அஞ்சாத வீரத்துக்கும் ஈகத்துக்கும் இலட்சியப் பற்றுக்கும், எமது மாவீரருக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

**தலைவர் திரு.வே. பிரபாகரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாற்றங்கள்

சிறுகதை



ஓவியம்: கண்ணா

நா. பாஸ்கரன்

'செல்லம்மா...... செல்லம்மா......"

பத்திரிகையும் கையுமாக சைக்கிளைத் தள்ளிக்கொண்டு உள்ளே வருகின்றார் செல்லத்துரை.

செல்லம்மாவுக்கு அதிசயமாக இருக்கின்றது. அவளால் வாய் திறந்து பேசமுடியவில்லை. என்றாலும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு,

"அண்ணை, வருங்கோ....." என்று வரவேற்கிறாள்.

செல்லத்துரை தனது பழைய கம்பர் சைக்கிளை ஓரமாக நிறுத்தி விட்டு வந்து அமர்கிறார்.

செல்லம்மாவுக்கு மனத்துடிப்பை நிறுத்த முடியவில்லை. அவரின் வருகையின் நோக்கம் அறியும் ஆவல், நெஞ்சிலே உதைக்கின்றது.

"அண்ணை என்ன இந்தப் பக்கம்.....?" தயக்கத்துடனும் ஆவலுடனும் கேட்கிறாள்.

"ஒண்டுமில்லைப் பிள்ளை, நான் உந்த அச்சுவேலி பஸ்ராண்டுக்கு பேப்பர் எடுக்க வந்தனான். பொடியள் வளலாய் காம்ப் அடிக்கப்போகிறாங்கள் எண்ட செய்தி அடிபட்டுது; அதுதான் உனக்கும் சொல்லிப்போட்டுப் போவமெண்டு வந்தனான்."

செல்லம்மாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை; அவர் சொல்வதை நம்பவும் முடியவில்லை. அவள் மௌனமாக அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள்.

"என்ன நீ யோசிக்கிறாய், அண்ணை என்ன இண்டைக்குப் புதிசாக வந்திருக்கிறார் எண்டே? ஏதோ கொஞ்சக்காலம் விதி என்னையும் உன்னையும் பிரிச்சு வைச்சது உண்மைதான். ஆனால் இண்டைக்கு அந்த விதியின்ரை விளையாட்டை நான் உணர்ந்திட்டன். வெட்டுப்பட்டுக் குத்துப்பட்டு கோடேறித் திரிஞ்சவங்களெல்லாம் இண்டைக்கு ஒண்டு சேர்ந்து நிக்கையுக்கை நாங்கள் மட்டும் சேருறதிலை என்ன பிழை."

செல்லம்மாவுக்கு மனம் நெகிழ்ந்து போகிறது. "அண்ணை ஏன் பழசுகளைக் கிண்டிறியள். உதை விட்டிட்டு வேறேதும் புதினங்களைச் சொல்லுங்கோ." என கனிவாக குழைந்து பேசுகின்றாள்.

"ஆ..... அதுசரி...... உவன் மோகனை இஞ்சை வைச்சு என்ன செய்யப்போகிறாய்....? நாளைக்கு ஆமி இஞ்சாலை வந்தால் அவன்ரை கெதியென்ன?"

"அண்ணை நானென்ன செய்கிறது? இந்த வீட்டை வாசலை வித்தெண்டாலும் அவனை எங்கையாவது அனுப்புவமெண்டு தான் பார்க்கிறன். ஒருதரும் பெறுமதியில்லையெண்டு காசு தர மறுக்கினம்."

செல்லத்துரை நிலைமை தனக்குச் சாதகமாகியுள்ளதை உணர்ந்து, தான் வந்த விடயத்திற்கு வருகின்றார்.

"தங்கச்சி, நீ வீட்டை வாசலை ஈடு வைக்கவேண்டாம். நீ விரும்பினால் அவனை என்ரை செலவிலை அனுப்பிறன். நேற்றுத் தான் தமையன் கடிதம் போட்டவன். தங்கச்சிக்குக் கலியாணம் செய்து லண்டனுக்கு அனுப்புங்கோ எண்டு."

"என்னண்ணை சொல்லுறியள்....?", செல்லம்மா குழம்புகிறாள்.

"எடிதங்கச்சி, அப்பமெண்டால் புட்டுக்காட்டவேணுமே? என்ன

சொன்னாலும் உன்ரை மோன் என்ரை மருமோன் தானடி. என்ரை மோளுக்கு முறை மச்சான். அவன் இருக்க நான் வேற இடத்துக்கு எப்படிப் போறது? சொல்லு பாப்பம்."

"அண்ணை ஏதோ கடவுள் விட்ட வழி. உதுக்கு நனென்ன மறுப்போ. என்னத்துக்கும் அவன் பொடியனையும் ஒருக்கால் கேட்டப்பம்." அவள் மனம் குளிர்ந்து போகின்றது.

"சரிபிள்ளை, பொடியன் என்ன மறுக்கவே போறான்....; எண்டாலும் ஒருசொல்லுக் கேட்டுப்பாரன்....



நான் வாறன்." எனக்கூறிக்கொண்டு செல்லத்துரையர் புறப்படத் தயாராகிறார்.

"அண்ணை தேத்தண்ணி குடிச்சிட்டுப் போங்கே...." எனக் கூறிக்கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தவள், அவசர அவசரமாகத் தேனீர் ஊற்றிவந்து செல்லத்துரையிடம் கொடுக்கின்றாள்.

செல்லத்துரையர் தேனீர் அருந்தியபடி, "செல்லம் ஏன் இன்னும் வீடு மேயேல்லை....?" மீண்டும் அனுதாபத் தோரணையில் கேட்கிறார்.

www.tamilarangam.net

"அண்ணை.....", செல்லம்மா தன் இல்லாமையைச் சொல்லமுடியாது தடுமாறுகின்றாள்.

"சரி.... சரி.. மழை வந்தால் ஒழுகப்போகுது. என்ரை பின்னால்க் காணியிக்கை ஓலையை வெட்டி மேய். நான் வாறன்." செல்லத்துரையர் மரத்தடியில் நிறுத்திவைத்த தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்படுகின்றார்.

செல்லம்மாவின் மனம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறது.

டுடும்....டும் டுடும்....டும்....

"ஐயோ வளலாயிலை இருந்து செல்லடிக்கிறாங்கள்; பிள்ளை பங்கருக்குள்ளை போங்கோ.... உள்ளுக்கை போங்கோ.... உள்ளுக்கை போங்கோ." என்று கூறிக்கொண்டு, தானும் உள்ளே செல்ல அவதிப்படுகிறாள் செல்லம்மா.

"டும்" என்ற பேரிரைச்சலுடன் காற்றைக்கிழித்துக்கொண்டு வந்த குண்டொன்று வெடிக்கிறது.

செல்லம்மா இரத்த வெள்ளத்தில் கிடந்து "தம்பி என்ரை... தம்பி... தம்பி... என்ரை தம்பி" என அலறுகின்றாள்.

மோகன் செய்யவேண்டிய முதலுதவிகள் யாவற்றையும் செய்கிறான். பின்பு வைத்தியசாலைக்குக் கொண்டு விரைகிறான்.

செல்லம்மா காயப்பட்ட செய்தி காற்றோடு காற்றாக அயலெங்கும் பரவுகிறது. செல்லத்துரையரும் மனைவி பாறுபதியும் ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்து சென்றனர்.

அவசர சத்திர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். இப்பொழுதும் செல்லம்மா நினைவு திரும்பாது பினாத்துகின்றாள்.

**"நான் இந்த மண்ணைவிட்டு வெளியேறி அந்நிய மண்ணிலை வாழமாட்டன்; இந்த மண்ணிலைதான் வாழப்போறன்..."**

"உந்த அறுவாங்கள், றக்கோடகவுளாங்களே....."

"போறவாற வழியிலை சாகாங்களே...."

"எங்கட பொடியளோட நேருக்கு நேர் மோதப்பயந்து ஷெல்லல்லே அடிக்கிறாங்கள்."

"வெளிக்கிட்டு வந்தினமெண்டால் கொப்பேக்கடுவவைப் போலத்தான் சாவினம்."

செல்லத்துரையர் தன் மனைவியை, செல்லம்மாவுக்கு உதவியாக வைத்தியசாலையில் நிறுத்திவிட்டு வீடு சென்றார்.

அவர் மனைவியும் மைத்துனி மேல் பாசங் கொண்டவள் போல அடிக்கடி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மச்சாள்.... என்னணை வேணும்?"

"மச்சாள்... என்னணை வேணும், சொல்லுங்கோ." என்று கரிசனையோடு கேட்டு வேண்டியவற்றைச் செய்துகொண்டிருக்கிறாள்.

செல்லத்துரையர் மூன்றுவேளையும் தவறாது வந்து பார்வையிட்டுச் செல்கின்றார்.

சில தினங்களின் பின் செல்லம்மாவுக்கு சுய நினைவு வந்து பேச ஆரம்பித்துவிட்டாள். தமையனும் மனைவியும் கஷ்டப்பட்டு இப்படி உதவி செய்கின்றபோது, மோகன் தன்னுடன் பேசிக்கொண்டதை நினைத்துப் பார்க்கின்றாள்.

"அம்மா... மாமா எங்களிலை பற்றும் பாசமும் கொண்டு எங்களைத் தேடி வரவில்லை. ரகுவைக் காதலிக்கும் மோகனாவை, ரகுவிலையிருந்து பிரிச்சு எனக்குக் கலியாணம் செய்யலாம் எண்டுதான் வந்திருக்கிறார். ஏனெண்டால் ரகு வசதி குறைஞ்சவனாம். உதை என்னாலை ஏற்றுக்கொள்ள முடியாது. அதோடை நான் இந்த மண்ணைவிட்டு வெளியேறி அந்நிய மண்ணிலை வாழமாட்டன்; இந்த மண்ணிலைதான் வாழப்போறன்...."

"அப்ப.... என்ன சொல்லுறாய் தம்பி....?"

"முடியாதம்மா..... உன்ரை கொண்ணற்றை எண்ணம் சரிவராதெண்டு சொல்லிவிடு." மோகனின் இந்த முடிவை எப்படித் தமையனுக்கு தெரிவிக்கிறது என்று நினைத்து இரண்டொரு தினங்கள் கஷ்டப்படுகின்றாள். இறுதியில் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு சொல்லுகிறாள்,

"அண்ணை நான் சொல்லிப்பாத்தன்; அவன் சம்மதிக்கிறான் இல்லை... நானென்ன செய்ய...?"

செல்லத்துரையரின் முகம் வாடி வதங்குகின்றது. தனது ஏமாற்றத்தை சகித்துக்கொள்ள முடியாதவராய்...

"பாறுபதி.... வாடி போவம்...." என சினத்துடன் அழைத்தபடி அங்கிருந்து வெளியேறுகின்றார். செல்லத்துரையர் போவதைப் பார்த்துக்கொண்டு நின்ற மோகனுக்குச் சிரிப்பு வந்தது.

"மாமாவுக்குச் சொல்லவேண்டிய பதிலைச் சொல்லியாச்சு. என்ர நிலை... நான் இனி வாழ்ந்து காட்டத்தான் வேணும். வாழவேணுமெண்டா, அதுக்கான வழியைத் தேடவேணும். வழி... எல்லாத்துக்கும் முதல் நிம்மதியாக வாழவேணுமெண்டா இந்த மண்ணிலை, இந்த மண்ணுக்காக வாழவேணும்...."

மோகன் மனதில் உறுதியுடன் ஒரு தீர்மானம் பிறந்தது.

**நன்றி: வெளிச்சம்**

## ரத்தம் வெவ்வேறு நிறம்

அங்கே
பிணங்கள் விழுந்து கொண்டிருக்கின்றன
நாம்
எத்தனை விக்கெட்டுக்கள் விழுந்தன? என்று
விசாரித்துக் கொண்டிருக்கிறோம்.
அங்கே
குண்டுகள் வெடித்துக் கொண்டிருக்கின்றன
நாம்
பட்டாசு வெடித்துப்
பரவசப் பட்டுக் கொண்டிருக்கிறோம்.
அவர்கள்
வேட்டையாடப்பட்டுக்
கதறிக் கொண்டிருக்கிறார்கள்
நாம்
வெள்ளித்திரைகளுக்கு முன்
விசிலடித்துக் கொண்டிருக்கிறோம்.
அவர்கள்
கற்பழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்
நாம்
கற்பில் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?
என்று
பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள்
வெளிச்சத்தின் விளைச்சலுக்கு
ரத்தம் சொரிந்து கொண்டிருக்கிறார்கள்
நாம்
இருட்டு காடுகளுக்கு
வேர்வை வார்த்து கொண்டிருக்கிறோம்.
அவர்கள்
சயனைட் அருந்திக் கொண்டிருக்கிறார்கள்.
நாம்
அதரபானம் பருகிக்கொண்டிருக்கிறோம்
இதில் வியப்பேதும் இல்லை
அவர்கள் கவரிமான்கள்
நாம் கவரிகள்......

கவிஞர் அப்துல்ரகுமான் (நன்றி சுட்டுவிரல்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரச்சனைகளுக்கு கேள்வி மூலம் தீர்வுகண்ட சோக்கிரட்டீஸ்

உலகத்திலுள்ள ஜீவராசிகள் அனைத்துமே இந்த இயற்கையின் பொதுவான சில விதிகளுக்கு உட்பட்டு வாழ்கின்றன. இந்த ஜீவராசிகள் தங்களுக்கே உரிய சில தனித்தனிப் பழக்கவழக்கங்களுக்கு ஏற்றாற்போல் வாழ்கின்றன. இந்த ஜீவராசிகளில் மனிதனே மேலான முதன்மையான இடத்தை வகிக்கிறான். ஏனெனில் இவனிடம்தான் திட்டமிட்ட வாழ்க்கை முறை ஒன்று அறிவியல் ரீதியாக உணரப்பட்டிருந்தது. இந்த திட்டமிடலானது மனிதனை ஏனைய ஜீவராசிகளில் இருந்து வேறுபடுத்தியது. இயற்கையில் கதிரவன், நிலா, விண்மீன்கள் போலவே மனிதனுக்கும் இந்த பூமியில் நிலையான இடம் உண்டு என்னை இந்த மனித இனம் விளங்கியருந்தது. ஆயினும் மனிதன் தோன்றி பன்னெடுங் காலத்தின் பின்பே மனிதரிலும் மேலானவர்களாக சிந்தனையாளர்கள், தத்துவ ஞானிகள் தோற்றம் பெற்றனர். இவர்கள் இயற்கையின் மாற்றங்களையும் வளர்ச்சி விதிகளையும், சமூக அமைப்பையும் தமது சிந்தனைக்கு உட்படுத்தி எதிர்காலத்தில் நிகழவிருக்கும் மாற்றங்களை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து தீர்க்கதரிசனத்துடன் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

உலகத்தின் அறிவியல் ஊற்றுக்களின் மையங்களாக கிரேக்கம், சீனா, இந்தியா என்பன விளங்கின.

**நேசன்**

இதில் கிரேக்க சிந்தனை மரபு நவீன வரலாற்றிலும் இழையோடிக் கிடப்பதை இன்றும் நாம் அவதானிக்க முடிகிறது. இந்தியாவில் ஆரியப்பட்டரைப்போல சீனாவில் கொன்பியூசியைப் போல கிரேக்கத்தின் சிந்தனை மரபைத் தொடக்கிவைத்தவர்தான் சோக்கிரட்டீஸ். இவர் கிரேக்கச் சிந்தனையின் தந்தை என்று போற்றப்படுகிறார். இவர் சிந்தனை உலகுக்குக் கொடுத்த முக்கிய பங்களிப்பு கேள்விக்குறியாகும்.

சோக்கிரட்டீஸின் அறிவையும் சிந்தனையையும் புரிந்துகொள்ள அவரின் வாழ்க்கைச் சூழலையும், அவரின் வாழ்க்கை முறையையும், அவரின் கருத்துக்களையும் அதனால் அவர் எதிர்நோக்கிய சவால்களையும், அதனை அவர் முறியடித்த வழியையும் நாம் பார்ப்பதன் மூலமே அவரைப் பற்றி மதிப்பிட முடியும்.

இவர் கிரேக்க நாட்டில் எதென்ஸ் நகரத்தில் கி.மு.470ஆம் ஆண்டு பிறந்தார். தகப்பனார் செய்த சிற்பம் செதுக்கும் தொழிலை விட்டு தத்துவம் படிப்பதில் ஆர்வம் காட்டிய இவர், கிரேக்க நகர அரசின் 'அடொம்சின்' என்ற அமைப்பின் ஆலோசகர் குழுவின் ஓர் உறுப்பினராக சிறிதுகாலம் கடமையாற்றினார். இதனால் அரசின் செயற்பாடுகள் பற்றியும் அதன் பலவீனங்கள் பற்றியும் நன்கு அறிந்திருந்தார். சோக்கிரட்டீஸ் வழிபடும் ஆலயத்தின் முன்புறத்திலே "உன்னையே நீ அறிந்து கொள்" என்று பொறிக்கப்பட்டிருந்த வாக்கியத்தைக் கண்டு, அதனாலும் அவர் சிந்தனைத் தெளிவு பெற்றார் என்று கூறப்படுகின்றது. பண்டைய கிரேக்க வழிபாட்டு முறையில் ஆர்வம் கொண்டிருந்த சோக்கிரட்டீஸ், அரசியலும் சட்டமும் தெய்வீக ஆற்றலுக்குட்டவை என்று நம்பினார். இவர் அரசியல், அரசியல் சட்டங்கள் பற்றிய பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வியை மாணவர்களுக்குப் போதித்தார். கல்வியை வேதனத்துக்காக போதிப்பது அறிஞர்களுக்குத் தகாத செயல் என கருதிய காரணத்தினால் அவர் வறுமையிலும் ஏழ்மையிலும் வாடினார்.

சோக்கிரட்டீஸ் நூல்கள் எதனையும் எழுதவில்லை. உரையாடல்கள் மூலம் தன்னுடைய கருத்துக்களை கூறுவதே அவரின் சுபாவம் ஆகும். இவர் சிந்தனை உலகுக்கு செய்த முக்கியமான பணி எதனையும் கேள்விக்குட்படுத்தி விடை காணுவதே. இந்த இயற்கையில் நிகழும் ஒவ்வொரு மாற்றங்களையும் கேள்விக்குட்படுத்தி பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டார். இளைஞர்களிடம் தான் நிறையக் கற்றுக்கொள்ள விரும்பினார். அறியாமையைப் போக்குவதற்கு கேள்வி கேட்பது, பதில் சொல்வது, கருத்துக்களை வரவழைப்பது போன்ற முறைகளை கையாண்டார். ஏன்? எதற்கு? எப்போது? எங்கே? எப்படி? என்ற கேள்விகளை அவர் எழுப்பி, கிரேக்க சிந்தனை மரபைத் தொடக்கிவைத்தார். இதனால் இளைஞர்கள், முதியோர்கள்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஏழைகள் எல்லோரும் அவரின்பால் சென்றனர். இந்த நிகழ்வானது வழமையான மரபுரீதியாக இருந்து வந்த கிரேக்க சமூகத்தில் வித்தியாச மான மாற்றத்தை ஏற்படுத்தியது. இம்மாற்றம் கிரேக்கத்தின் வழமை யான அரசியல் அமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என அஞ்சிய கிரேக்க அரசு சோக்கி ரட்டீசின் மீது மூன்று குற்றங்களைச் சுமத்தி அவரைச் சிறையில் அடைத்தது. ஏனெனில் ஏற்கனவே இருந்துவரும் வழமையான அரசியல், சமூக அமைப்பில் புதிய மாற்றங்கள், சிந்தனை மரபுகள் ஏற்படுவதை அரசோ அல்லது ஆட்சியாளர்களோ விரும்ப மாட்டார்கள். அந்த வகையில் சோக்கிரட்டீசுக்கும் அவரின் சிந்தனை முறைக்கும் அப்போது அந்த அரசில் இடம் கிடைக்க வில்லை.

www.tamilarangam.net

சோக்கிரட்டீசினுடைய 70வது வயதில் அவர்மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டன.

1. நாட்டின் தெய்வங்களை வழிபட மறுத்தல்.

2. அரசினை நிந்தனை செய்தல்

3. இளைஞர்களின் உள்ளங் களையும், எண்ணங் களையும் பாழ்படுத்தல்.

இக்குற்றங்களுக்காக கிரேக்க நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றியது. ஆனால் நீதிபதிகள் சோக்கிரட்டீசின் நண் பர்களாய் இருந்ததனால் அவருக்கு மரணதண்டனை விதிக்க மனச் சாட்சி இடம்கொடுக்காததால் "நீ இனிமேல் இந்தக் குற்றங்களை புரியமாட்டேன் என்றுகூறி மன்னிப் புக்கேள்; நாங்கள் உன்னை விடுதலை செய்கிறோம்." என்றனர். சோக்கிரட்டீசோ இதற்கு மறுமொழி யாக "என் கருத்துக்களைப் புதைத்துவிட்டு என்னை உயிர் வாழச் சொல்கிறீர்களா? அது வேண்டாம். என்னைப் புதையுங்கள். என் கருத்துக்கள் உயிர்வாழட்டும்." என்றார். அவர் தன்னுடைய உயிருக்காக தன்னுடைய கருத்துக் களை மாற்றிக்கொள்ளவில்லை. மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட சோக்கிரட்டீஸ் முப்பது நாட்கள் சிறையில் இருந்தார்.

முப்பதாவது நாள் சோக்கி ரட்டீசின் நெருங்கிய நண்பரான கிரீட்டோ தப்பி ஓடிவிடும்படி அவரைக் கேட்டுக்கொண்டார். அதற்கு சோக்கிரட்டீஸ் "அரச சட்டத்தை மீறி ஓடிய கோழை என்ற பட்டம் எனக்குக் கிடைப் பதைவிட, சட்டத்தை மதித்து நடந்த நேர்மையுள்ளவன் என்ற மதிப்பையே பெற விரும்புகிறேன்." எனக்கூறி விஷத்தை அருந்திக் கொள்கைக்காக தனது உயிரை விட்டு சிந்தனைக்கு உயிர் கொடுத்தார்.

வரலாற்றில் புதிய கருத்துக்களை யும், சிந்தனைகளையும் முன்வைப் பவர்கள் அந்தக் காலகட்டத்தில் மதிக்கப்படுவதில்லை. "தீர்க்கதரிசிகள் சொந்த மண்ணில் மதிக்கப்படுவதில்லை." என்ற நிலை இவருக்கும் அப்போது ஏற்பட்டது. ஆனால் சில நூற்றாண்டுகளின் பின்பு கிரேக்க மக்கள் தமது சிந்தனையாளரை தாமே கொன்று விட்டதை எண்ணிக் கண்ணீர் விட்டனர். சோக்கிரட்டீசின் மாணவர்களாகிய பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்றோர்களால் அவரின் சிந்தனைமுறை உலகுக்கு வெளிக்கொணரப்பட்டது. பிற்கால சிந்தனை உலகின் வழிகாட்டியாக திகழும் சோக்கிரட்டீசை அன்றைய அரசு அழித்தாலும் "வரலாறு அவரை விடுதலை செய்துவிட்டது"

## இராணுவங்களில் பெண்கள்

சில நாடுகளில் இராணுவத்தில் சேரும் பெண்களின் தொகை ஆண்களை மிஞ்சும் வகையில் உள்ளது. இதில் சிரியா முக்கியமானது. அங்கே இராணுவத்தில் சேரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தங்கள் நாட்டில் ஆண்களைவிடப் பெண்கள் அதிக உற்சாகத்துடனும், நுட்பத்துடனும் வீரத்துடனும் போரில் ஈடுபடுவதாகச் சிரிய அரசு அறிவுத்துள்ளது. சிரியாவில் பெண்களுக்கென்றே ஒரு தனி இராணுவப் பிரிவும் செயற்பட்டுவருகிறது. மூன்று வருட இராணுவப் பயிற்சி பெண்களுக்கு அளிக்கப்பட்ட பின்னர் அவர்கள் போர்முனை செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

## கறுப்பினத் தலைவி

தென்னாபிரிக்காவில் வானொலி, காட்சிவானொலித் தலைவராக முதன் முதலாக ஐவிமட்செபி கசாபுரி என்ற கறுப்பினப் பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கடும் உழைப்பாளி

உலகிலே பெண்களே அதிகமான கடின உழைப்பாளிகள் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் செல்வி போளி கார்ட்பை. இவர் தனது ஒன்பதாவது வயதில் உழைக்க ஆரம்பித்து, எண்பத்தாறு ஆண்டுகள் வரையில் ஒரே தொழிற்சாலையில் தொடர்ச்சியாக உழைத்துவந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தில் 'லீசெஸ்டர்' என்னுமிடத்திலுள்ள தொழிற்சாலையில் வேலை செய்துவந்த போளி 1932 ஆம் ஆண்டு தனது தொண்ணூற்றைந்தாவது வயதில் மாண்டார். உலகிலேயே அதிக காலம் உழைத்த பெண்மணி இவர்தான் என்று குறிப்பிடப்படுகிறது.

www.tamilarangam.net









# உப்புக் காற்
# உயிர்கள் வா







# றில் கலந்த
# ழும் ஆலயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரத்தைத் தேடி...



## தளபதி விதுஷா

ஆனையிறவுச் சமர்....

மக்களின் மனங்களில் நீங்காத நாட்கள்.....

தினமும் நெஞ்சில் ஏக்கமும், விழிகளில் கண்ணீரும் சுமந்த நாட்கள்,

சமர்க்களம் அது.

வானத்தில் அலுமினியக் கழுகுகள் ஓயாத வலம். தரையில் அவை வீசிய குண்டுகளின் சிதறல்கள்... சேதங்கள்... உயிரிழப் புக்கள்...

இதன் மத்தியில் கூட தரையில், அந்த உப்பு வெளியில் நேரடி மோதல் நடபெற்றுக்கொண்டிருக் கிறது. யாருமே தலை நிமிர்த்த முடியாத ஒரு நிலை. பலர் காயம். சிலர் வீரமரணம்.

"ஐயோ நான் காயப்பட்டுட்டன்"

"என்ர ரைபிளை எடுங்கோ..."

"ஓடுங்கோடி... பொயின்ரைப் பிடியுங்கோ.... என்னைத் தூக்கா தேங்கோ..."

என்ற கதம்ப ஒலிகள் கேட்டுக் கொண்டேயிருந்தன.

காயமடைந்த, வீரமரணமடைந்த போராளிகளைத் தூக்கிப் பின்னே அனுப்புவதில் நான் மிகப்பெரிய சிரமத்தை எதிர்நோக்கிக் கொண்டி ருந்தேன். நீண்ட தூரம் என்ப தாலும், இடம் மாறப்படுவதாலும் ஒருமுறை தூக்கிச் செல்வோர் மீண்டும் வர நீண்டநேரம் பிடித்தது.

இதிலிருந்து நான் ஓரளவு விடுபட்டது தேவானந்தியாலும் இன்னும் சிலராலும்தான். தேவானந்தி மிக மிகச் சுறுசுறுப்பாக இவ்வேலையில் ஈடுபட்டதுடன், தன் குழுவிலுள்ளோரையும் உற்சாகப் படுத்தி இவ்வேலையில் சுறுசுறுப் பாக ஈடுபடவைத்தாள்.

நம்பமுடியாத ஒரு விரைவை, துணிவை அந்த நேரம் அவளிடம் நான் கண்டுகொண்டேன். அப் போதுதான் அவளை நான் இனம்கண்டுகொண்டேன்.

கடல் அலைபோன்ற சுறுசுறுப்பு. நாலாதிசையும் சுழன்று துறுதுறுக் கும் கண்கள். வளவளத்த பேச்சு. பிறருக்கு வலிந்து உதவி செய்யும் மனப்பான்மை. இவ்வளவும் கொண் டவள்தான் தேவானந்தி.

பள்ளி மாணவியாக இருக்கும் போதே இவள் சுறுசுறுப்பு நிறைந்த வளாகத்தான் இருந்தாள். பிறருக்கு உதவி செய்வதில் இவள் என்றுமே பின்நின்றதில்லை. இதனால்தானோ என்னவோ மாணவ மாணவிகளி லிருந்து ஆசிரியர்கள் வரை "தேவராணி... தேவராணி...!" என இவளின் இயற்பெயரையே அழைத்த வண்ணம் இருப்பார்கள்.

பாடசாலையில் மாணவிகள் தலைவியாக சிறிதுகாலம் விளங்கிய இவள், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கினாள். இவள் இருக் கும்போது கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம் விளையாட்டுத் துறையில் மற்றைய பாடசாலைக ளுடன் போட்டியிட்டு பல பரிசில்க ளைத் தட்டிக் கொண்டது. மேலும், நாடகத்துறையிலும் இவளுக்குப் பாரிய திறமை காணப்பட்டது.

1987 ஆம் ஆண்டு, தந்தை பாலசுப்பிரமணியம் இறந்தபின் குடும்பப் பொறுப்புடன் இவள் விளங்கினாள்.

1990 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்குப் படித்துக்கொண்டி ருந்தபோதே விடுதலைப் போராட் டத்துடன் தன்னை இணைத்துக் கொள்ள இவள் துடித்தாள். அந்தத் துடிப்பினால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றியதுடன், போராட்டம் சம்பந்தமான புத்த கங்களை மக்களுக்கு வீடுவீடாக எடுத்துச் சென்று விற்றாள். இறுதியில் முழுமையாகத் தன்னை போராட்டத்துடன் இணைத்துக் கொண்டாள்.

தனது ஆரம்பப் பயிற்சியின் போது, பயிற்சிப் பாசறையில் எதற்குமே இவள் பின்நின்றதில்லை. சிறிது வாயாடி என்பதால், அதற்கான தண்டனைகளை இவள் பெற்றுக்கொண்டாலும், திறமை யாகப் பயிற்சியினை முடித்துக் கொண்டு வெளியேறினாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மேலதிகப் பயிற்சிகளின் பின், ஆனையிறவுச் சண்டைதான் இவளின் முதல்களமாக அமைந்தது. இதில் இவள் விநியோகக் குழுவில் பங்காற்றினாள். குழுவில் ஒருத்தியாக ஆரம்பித்த களம்.... குழுத் தலைவியாக மாறவைத்தது. சுறு சுறுப்பாலும் அசாத்திய துணிவாலும் பல உயிர்களை மரணத்தினின்றும் இவள் காத்தாள்.

மணலாற்றில் இடம்பெற்ற மின்னல் தாக்குதலில் பதினைந்து பேர்கொண்ட ஒரு குழுவின் தலைவியாக நின்று போரிட்டாள். தலையில் சிறிதாகக் காயப் பட்டவள், இரத்தம் கசிவதையும் பொருட்படுத்தாது, தன்னருகிலே காயமடைந்து விழுந்த மற்றைய போராளியின் காயத்துக்குக் கட்டுப் போட்டுக்கொண்டிருந்தாள். சண்டையின் போது பதற்றமடையாமல் பகிடியாகக் கதைத்தபடி அடிபடும் பழக்கம் இவளிடம் இயல்பாகவே இருந்தது அப்போதுதான் என்னால் உணரப்பட்டது.

நாடகத்தில் நடிப்பதிலும் நாடக வசனம் பேசுவதிலும் வல்லவளான இவள், பாசறையில் நிகழ்ச்சி போடுவதில் முன்நிற்பாள். அழகான முகபாவத்துடன் நடிப்பாள்... சிரிக்க வைப்பாள்.

பின்னர், சிறிது காலம் கடற்கரைக் காவலரண் ஒன்றில் "பிறெண் லோடர்" ஆக நின்றாள். அதற்காக விசேட பயிற்சியினையும் எடுத்துக்கொண்டாள். தனது வாயாடிப் பழக்கத்தால் பொறுப்பாளரிடம் அடிக்கடி தண்டனை வாங்கினாலும், சிறிது நேரத்தில் எல்லாவற்றையும் மறந்து கலகலப்பாகப் பழகுவாள். ஓடி ஓடி வேலைசெய்வாள்.

விளான்பகுதி அது.

தமிழர்கள் காலாகாலமாகப் பிறந்து, வளர்ந்து, உழுது பிழைத்த வளம்மிக்க மண் அது. நெற்றி வியர்வை சிந்தி உழைத்த பணத்தில் எழுந்து நிற்கின்ற வீடுகள்... நித்திரையின்றிப் பாடுபட்டதால் பச்சைப் பசேலென எழுந்து நின்று காற்றுக்குக் கையசைக்கும் காய் கறித்தோட்டங்கள்.

எல்லாமே கவனிப்பாரற்று, காடு மண்டி, தூசி படிந்து தமிழர்களின் அவல நிலையைப் பறைசாற்றியபடி...

www.tamilarangam.net

அங்கு வாழவேண்டிய, வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் அகதிகளாய் எங்கோ ஒரு பாடசாலையில் அவல வாழ்வு வாழ்ந்தபடி...

அங்கேதான் மகளிர் படையணி பற்றைகளை விலக்கி, கவனமாகக் காலடி பதித்து முன்னேறிக் கொண்டிருந்தது. எங்கே பதுங்கி இருக்கிறார்கள், எப்போது தாக்குவார்கள் என்றே தெரியாத நிலை.



லெப். தேவானந்தி

"கோயிலடி வந்திட்டுது; நில்லுங்கோ!"

குழுப்பொறுப்பாளர் கூறுகிறார்.

அங்கேதான் அந்தக் குழு தங்கியிருந்து காவல் புரிய ஆரம்பிக்கிறது. தேவானந்தியும் இன்னொரு போராளியும் தமது இலகு இயந்திரத் துப்பாக்கியுடனும் ஏனைய பொருட்களுடனும் ஏற்ற நிலை தேடி, முன்னே சென்று நிலையெடுக்கின்றனர். மேலும் பல குழுக்கள் பரவலாக முன்னேறி நிலையெடுத்துக் கொள்கின்றன. அப்போது அங்கே வந்த பொறுப்பாளர் பல ஏற்பாடுகள் பற்றியும் கதைத்துவிட்டு,

"ஏதாவது ஒரு பகுதியால் எதிரி முன்னேறுவான். குழுக்களைத் தயார்நிலையில் வைத்திருங்கள்."

என்று கூறிவிட்டுச் செல்கிறார்.

குழுக்களுக்கோ முற்றிலும் புதிய இடம். எந்த வழியால் போனால் எந்த வழியால் வரலாம் என்றே தெரியாத நிலை. மாலை மங்கி, இருள் கவிந்துகொண்டிருந்த நேரம் என்பதால், இருக்கும் இடத்தைக் கூடப் பழக்கப்படுத்திக்கொள்ள முடியாத நிலை.

ஆனால், மனதில் மட்டும் "எதிரியை ஒரு அங்குலம்கூட முன்னேற விடக்கூடாது; விடமாட்டேன்." என்ற உறுதி மலை போல..

* * *

### 18.09.1992

காலை ஐந்து மணி. பொழுது மெல்லப் புலர்கிறது. குழுக்கள் யாவும் மூன்று மணியிலிருந்தே எதிர்பார்ப்புடன் தத்தமது நிலைகளில். தேவானந்தியும் "பிறெண் கண்ணரும்" ஒரே இடத்தில் தயார்நிலையில். தேவானந்தி ஆவலோடு விழிகளை உருட்டி முன்னே பார்க்கிறாள்.

"எங்கட பக்கத்தாலை வரவேணும்; இவன் நல்லாக் குடுக்கலாம்."

அவளின் மனம் வெளிப் படுகிறது.

சிறிது நேரத்தில் அவளின் எண்ணம் நிறைவேறுகின்றது. இவள் இருக்கும் பகுதி நோக்கித்தான் இராணுவத்தினர் வேட்டுக்களைத் தீர்த்தபடி முன்னேறுகின்றனர். முதலில் "பிறெண்"தான் சடசடக்க ஆரம்பிக்கிறது. தொடர்ந்து எங்கும் பரவலாக சடசடப்பு.... குண்டு வெடிப்பு... இடையிடை "பிறெண் கண்ணை" வாங்கி, வேட்டுக்களைத் தீர்க்கிறாள் தேவானந்தி.

உற்சாகமாகப் போரிட்டுக்கொண்டிருந்த தேவானந்தி திடீரென...

"ஐயோ.... அம்மா....!"

என்றபடி தனது கால்களைப்

பற்றிக்கொள்கிறாள். எதிரியின் ரவையொன்று அவளது கால்களைத் துளைத்துவிட்டது. தனது ஜீன்ஸ் பொக்கற்றினுள் இருந்து துணியொன்றை எடுத்து காயத்தின் மேலே தானே கட்டிக்கொள்கிறாள். மீண்டும் தனது வேலையில் ஈடுபட முனைகிறாள்; முடியவில்லை.

எத்தனையோ போராளிகளின் இரத்தப்பெருக்கைக் கட்டுப்படுத்தி, தூக்கிச்சென்று உயிர்காத்தவளை தூக்கிச் செல்வதற்கு அருகில் யாருமே இல்லை.

தேவானந்தியைப் பின்னுக்குப் போகுமாறு கூறினேன். மெல்ல இழுத்து இழுத்து, பின்னே வர முயற்சிக்கிறாள். தலைச்சுற்றல் ஒருபடி மேலேறுகிறது.... அத்தோடு தெரியாத இடம்... எல்லாம் இணைந்து அவளை எங்கோ கொண்டு சென்றுவிடுகிறது.... சோர்வு காரணமாக அவள் மயங்கிவிட்டாள்.

நேரடி மோதல் ஒய்கிறது. இராணுவம் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றுவிட்டது. மாலை ஐந்து மணியிருக்கும். குழுக்கள் சரிபார்க்கப்படுகின்றன. தேவானந்தி காயப்பட்டிருந்ததால் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருப்பாள் என்று நான் எண்ணிக்கொண்டு காயம் அடைந்த போராளிகளின் பெயர்ப்பட்டியலைப் பார்த்தேன். அதில் தேவானந்தியின் பெயர் இல்லை.

எங்கே தேவானந்தி...?

யாருக்கும் தெரியவில்லை... தேடுகிறார்கள்... இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது.

எல்லோருமே தேவானந்தியைத் தேடுகிறோம். இடம்தெரியாமல் வழிமாறி முன்னே சென்றுவிட்டாளோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. உடனே இரு குழுக்களாகப் பிரிந்து இருவேறு பக்கங்களால் தயார் நிலையில் முன்னே செல்கிறோம்.. தேடுகிறோம்.

ஓர் இடத்தில் சிறிது முன்னால் ஒரு உடல் வீழ்ந்து கிடப்பது தெரிவதாக எனது மற்றைய குழு அறிவித்தது. அது எதிரியின் துப்பாக்கி சுடும் தூரம் என்பதால் மிகுதிப்பேரை நிலையெடுக்குமாறு கூறிவிட்டு இருவர் மட்டும் நெருங்கிச் சென்றார்கள்.

www.tamilarangam.net

அங்கு குப்புற வீழ்ந்து கிடப்பது தேவானந்திதான். எதிரியின் சூழ்ச்சிகள் ஏதாவது இருக்கலாம் என்பதால் அருகே சென்று நிலையெடுத்து அவளது கால்களை பிடித்து இழுத்தார்கள்.

"டமார்"

குண்டொன்று வெடிக்கிறது. ஒரு நிமிடம் புரியாமல் திகைத்தவர்கள் தெளிவாகப் பார்த்தபோது நெஞ்சு சிதறி தேவானந்தி படுத்திருக்கிறாள். தான் இடம்மாறி வந்துவிட்டேன் என்பதை உணர்ந்த அவள், மேலும் நகரச் சக்தி இல்லாததால், எதிரியின் கையில் பிடிபடக்கூடாது என்ற விடுதலைப் புலிகளின் கொள்கை மரபிற்கு இணங்க 'சயனைட்டை' உட்கொள்ள முன்னர், தன் உயிரற்ற உடல்கூட எதிரியை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தன் உடலை அசைத்தால் வெடிக்கக்கூடியதாகக் குண்டினைத் தன்னுடன் அணைத்த படி படுத்து, 'சயனைட்'டை உட்கொண்டிருக்கிறாள்.

அவர்கள் தேவானந்தியை தூக்கி வந்தார்கள்.

கலங்கிய எனது கண்களை மெல்லத் துடைத்துவிட்டு அவளருகே மண்டியிட்டு உட்கார்ந்து, இறப்பின் பின்னரும் எதிரியை ஓட விரட்ட, அழிக்க விரும்பிய அந்த வீர உள்ளத்தைத் தேடுகிறேன்.

தவித்துத் துடித்துக்கொண்டிருந்த அந்த உள்ளம் என்னை நோக்கிக் கை நீட்டுகிறது. உடனே தாங்கி அதை நான் எடுத்துக்கொள்கிறேன்.

"உனது பாதையை நான் நிச்சயம் பின்தொடர்வேன்."

என முணுமுணுத்துவிட்டு, என் பின்னே திரும்பிப் பார்க்கிறேன்.. அதே பாதையில்... காலடிபதிக்க வந்துள்ள மகளிர் படையணி வரிசையின் முடிவே என் கண்களுக்குத் தெரியவில்லை.

நன்றி: 'சுதந்திரப் பறவைகள்'

## தேசாபிமானி

இது எனது சொந்தநாடு
என ஒருபோதும் தன்னுள்
கூறாமல் சுவாசிப்பவன்
வெறும் நடைப்பிணம்.
அந்நியக் கரையொன்றில்
அலைந்து திரிந்தபின்
சொந்த நாட்டில் மீண்டும்
காலடி பதிக்கையில்
நெஞ்சில் ஒருபோதும்
உத்வேகங் கொள்ளாதவன்
வெறும் நடைப்பிணம்
அத்தகைய ஒருவனை
நன்றாக அவதானியுங்கள்,
அவன் உயர்பட்டங்களை
தாங்கியிருக்கலாம்;
அவனது பெயர்
பிரபல்யம் பெற்றிருக்கலாம்;
அளப்பரிய செல்வத்தை
விருப்பம் போல்
அடைந்திருக்கலாம்;
பட்டமும் அதிகாரமும்
பெருஞ் செல்வமும்
பெற்றிருந்தும்
சுயநலத்திலே நாட்டமுற்று
வாழும் அந்த ஈனனுக்கு
அவற்றினால்
பெருமையில்லை.
இரட்டித்த வேதனையுடன்
அவன் நரகத்திற்குச்
செல்லும்போது
அவன் தோன்றிய
மண்ணிலிருந்து
மனிதர்கள் எவரும்
அவனின் மரணத்திற்காக
கண்ணீர் சிந்தமாட்டார்கள்;
வணக்கம்
செலுத்தமாட்டார்கள்;
சோககீதம் பாடமாட்டார்கள்

சேர். வோல்ட்டர் ஸ்கொட்
தமிழில்: வை. சுந்தரேசன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழருக்குத் தமிழ் ஆண்டு, மாதம், கிழமை, எண் எது?

நமது தமிழகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்த நாள், கிழமை, நேரம், மாதம் முதலியவை பற்றிப் பிறப்பியம் (சாதகம்) எழுதி வைத்துப் பாதுகாக்கும் பழக்கம் தமிழர்களிடம் இன்றும் இருந்து வருகிறது.

இவ்விதம் தனி மனித வாழ்க்கையில் தனிக் கவனம் செலுத்திய தமிழர்கள் குடும்பம், குமுகாயம் (சமுதாயம்), நாடு பற்றிய பொது நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ் நாடு ஆகியவற்றுக்குப் பொதுவான ஆண்டுக் கணக்கால் எழுதும் வழக்கத்தை ஏனோ பின்பற்றவில்லை!

நாட்டுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் பொதுவான தொடர் ஆண்டால் காலத்தைக் கணக்கிடல் வேண்டும் என்ற கருத்துடையவர்களாகப் பழந்தமிழ் அரசர்கள் இருந்திடவில்லை. தமிழ்ச் சான்றோர்கள் அதன் இன்றியமையாமையை அரசர்களுக்கும் மக்களுக்கும் எடுத்துக் கூறியதாகச் சான்றுகள் கிடைக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திப் 'பிரபவ' முதல் 'அட்சய' வரை உள்ள ஆரிய ஆண்டு முறை புகுந்துவிட்டது.

அறுபது ஆண்டுகளின் பெயர்களின் ஒன்று கூடத் தமிழ் இல்லை. 60 ஆண்டுகள் பற்சக்கர முறையில் இருப்பதால் 60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாக இல்லை. அதற்கு வழங்கும் கதையோ ஆபாசமாக இருக்கிறது. அறிவுக்கும் அறிவியலுக்கும் காலத்திற்கும் கருத்திற்கும் பொருத்தமாக இல்லை.

இவ்வாறு தமிழருக்குத் தமிழில் தொடர் ஆண்டு இல்லாத குறையை உணர்ந்த தமிழ் அறிஞர்கள் சான்றோர்கள், புலவர்கள் ஆகியோர் 1921 ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது என்றும், அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது என்றும் திருவள்ளுவர் காலம் கி.மு.31 என்றும் முடிவு செய்தார்கள்.

இவ்வாறு முடிவு செய்தவர்களில் தலையான தமிழ் அறிஞர்கள் தமிழ்க்கடல் மறைமலை அடிகள், தமிழ்த்தென்றல், திரு.வி.க. தமிழ்க் காவலர் சுப்பிரமணியபிள்ளை, சைவப்பாதிரியார் சச்சிதானந்தம் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் ஆகியோர் ஆவார்கள்.

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை; இறுதி மாதம் மார்கழி. கிழமைகள் வழக்கில் உள்ளவை. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள்.

ஆங்கில ஆண்டுகளுடன் 31ஐக் கூட்ட வருவது திருவள்ளுவர் ஆண்டு. 1993+31=2024. தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 முதல் தமிழ்நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவல்களிலும் பின்பற்றி வருகிறது.

* பன்னிரண்டு ஓரைப் (ராசி) பெயர்களே பன்னிரண்டு மாதங்களின் பெயர்களாக விளங்கிவந்தன. அவை: [1] சுறவம் (தை), [2] கும்பம் (மாசி), [3] மீனம் (பங்குனி), [4] மேழம் (சித்திரை), [5] விடை (வைகாசி), [6] ஆடவை (ஆனி), [7] கடகம் (ஆடி), [8] மடங்கல் (ஆவணி), [9] கன்னி (புரட்டாதி), [10] துலாம் (ஐப்பசி), [11] நளி (கார்த்திகை), [12] சிலை (மார்கழி). இவை இன்றும் தமிழ்நாட்டில் ராசி என்னும் பெயரில் இப்பொழுதும் வழக்கில் உள்ளன.

(1) மேஷம், (2) ரிஷபம், (3) மிதுனம், (4) கடகம், (5) சிம்மம், (6) கன்னி, (7) துலாம், (8) விருச்சகம், (9) தனுசு, (10) மகரம், (11) கும்பம், (12) மீனம் என்னும் பன்னிரண்டு ராசி (ஓரை)களில் கடகம், கன்னி, துலாம், கும்பம், மீனம் ஆகிய ஐந்தும் தமிழ்ப் பெயர்களே. மேஷம், ரிஷபம், மிதுனம், சிம்மம், விருச்சகம், தனுசு, மகரம் ஆகிய ஏழு பெயர்களும் தமிழிலிருந்து வடமொழிக்கு மாற்றம் செய்யப் பட்டுவிட்டன. அவை முறையே மேழம், விடை, ஆடவை, மடங்கல், நளி, சிலை, சுறவம் என்று தமிழில் மீட்கப்பட்டுள்ளன. அதனால் இந்த மாதங்களைப் பின்பற்றுவதும், நினைவில் வைத்துக்கொள்வதும் எளிமையாகும்.

ஓரைப் (ராசி) பெயர்களால் மாதங்களை அமைத்திருப்பது தமிழரின் வானியல் அறிவுக்கு இன்றும் அறிவியல் சான்றாக விளங்குகிறது.

சித்திரை முதல் பங்குனி வரை உள்ள மாதங்களின் பெயர்கள் தமிழிலிருந்து வடமொழிக்கு மாற்றப்பட்டன என்று தமிழ் அறிஞர்களும், வடமொழியிலிருந்து தமிழுக்கு மாற்றப்பட்டன என்று வடமொழிவாணர்களும் வாதிட்டு வருகின்றனர். (எடுத்துக்காட்டு: சித்திரை சைத்ரா; வைகாசி வைசாக; கார்த்திகை கார்த்திகா.)

மொழி ஞாயிறு பாவாணர் அயராது ஆராய்ச்சி செய்து சித்திரை முதல் பங்குனி வரை உள்ள 12 ஓரை (ராசி)களே 12 தமிழ் மாதங்களாகப் பின்பற்றல் வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

* ஏழு கிழமைகளில் புதன், சனி தவிர மற்றவை தமிழ்ப் பெயர்களே. புதன் அறிவன் என்றும் சனி காரி என்றும் வழங்கப்படுகின்றன.

* 1,2,3,4,5,6,7,8,9 என இன்று உலகம் எங்கும் எழுதப்படும் எண்கள் அரபி எண்கள் என்று கூறப்படுகின்றன. ஆனால் அராபியர்களுக்கு இந்த எண்களின் பழைய வரலாறு பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் இவற்றை இந்திய எண்கள் என்கிறார்கள். வடநாட்டு அறிஞர்களுக்கும் இவற்றின் தோற்றம் பற்றி ஒன்றும் விளங்கவில்லை. தமிழ்நாட்டின் பழைய எண் வடிவங்களைப் பற்றி அறியாமல் இருத்தலே இவ்வாறு அனைவரும் தடுமாறுவதற்குக் காரணம் ஆகும்.

அரபி எண்கள் என்றும் இந்திய எண்கள் என்றும் இவ்வாறு தடுமாறிக் கூறப்படும் அந்த எண்கள் (1,2,3 முதலியவை) பழைய தமிழ் எண்களே என்பது பின்வரும் பழந்தமிழ் எண் வடிவங்களைக் கண்டு உணரலாம்.

இவற்றை நோக்கி எண்ண வல்லவர்க்கு 1,2,3 முதலிய எண்களின் எழுத்து வடிவம் தமிழகம் உலகத்திற்கு அளித்த கலையே என்னும் உண்மை புலப்படும் என்று மூதறிஞர் மு. வரதராசனார் கூறுகிறார்.

www.tamilarangam.net

நாம் புதிதாக எதையும் புகுத்தவில்லை. இடைச் செருகலை அகற்றி, இழந்ததை மீட்டு நடைமுறைக்குக் கொண்டு வருகின்றோம்.

தமிழர்களிடம் வழிபடுவது, வணங்குவது, எழுதுவது, பேசுவது மிகுதியாகவும் போற்றுவது, பின்பற்றுவது, பரப்புவது, செயல்படுத்துவது குறைவாகவும் இருக்கின்றன. தனித்தனியாக உயரும் பண்பாடு மிகுதியாகவும் கூட்டாக ஒன்று சேர்ந்து உயரும் பண்பாடு குறைவாகவும் உள்ளன. தனிமரம் தோப்பு ஆகாது என்பது பழமொழி.



**தனது பசியால்**
**மரணத்திற்கு**
**விருந்து வைத்து**

**தனது மரணத்தால்**
**விடுதலைக்கு**
**வாசல் திறந்த**
**திலீபா!**

**இது உனது**
**இறந்த நாள் அல்ல...**
**மரணம் என்பது**
**உண்மையான**
**வீரனுக்கு**
**இரண்டாவது பிறந்த நாள்...**

**அறிவுமதி**
**தமிழ்நாடு.**

மன்னர் ஆட்சியில் இவை குறையாகத் தெரியவில்லை. மக்களாட்சியில் எண்ணத்திற்கு எண்ணிக்கை பலம் தேவைப்படுவதால் வெற்றி வாய்ப்பை இழக்கிறோம். செல்வாக்குப் பெறமுடியவில்லை. உலகம் அறிய வாழ இயலவில்லை. பல வகையிலும் துறையிலும் பாதிக்கப்படுகின்றோம்.

தொடர் ஆண்டைப் பொறுத்த வரை கூட வள்ளலார் ஆண்டு, பெரியார் ஆண்டு, அண்ணா ஆண்டு, பாரதிதாசன் ஆண்டு, கலைஞர் ஆண்டு, அம்பேத்கர் ஆண்டு என்று பலவாறாக அவரவர் விருப்பம் போல் பின்பற்றி வருகின்றனர்.

செய்யத்தக்கவை என்று சான்றோர்கள் புகழ்ந்து கூறியவைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்து சோர்ந்தவருக்கு எப்பொழுதுமே நன்மை இல்லை என்பது வையம் புகழ் வள்ளுவர் வாய் மொழியாகும்.

**"புகழ்ந்தவை போற்றிச் செயல்**
**வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்."**

**திருக்குறள்**

எனவே, தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ் நாடு, ஆகியவற்றின் நலனும் வளனும் பெருமையும் புகழும் நாடுவோர் அனைவரும் திருவள்ளுவர் ஆண்டு, சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை ஆகிய பன்னிரண்டு மாதங்கள், ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி ஆகிய ஏழு கிழமைகள், மேற்குறிப்பிட்ட இருவகை எண் வடிவங்கள் ஆகியவற்றைத் தம் வாழ்வில், வழக்கில் பின்பற்றவும் பரப்பவும் போற்றவும் வேண்டுவது தமிழரின் தலையாய கடமையாகும்.

வ. வேம்பையன்
கல்பாக்கம் கலை அறிவியல் மன்றம்
தமிழ்நாடு.

www.tamilarangam.net

## சிறுகதை

# குருத்துக்கள்

கே. ஆர். டேவிட்

"எடை கண்ணா வாருங்கோடா விளையாடுவம்....." ரமணன், கண்ணனையும் அவனோடு நிற்கின்ற வர்களையும் விளையாட அழைக்கின்றான். ரமணன், கண்ணன், பாலன், செந்தூரன், மயூரன், ராஜு.... எல்லோரும் ஒன்று சேருகின்றனர். ரமணன் எல்லோருக்கும் தலைமை தாங்குகின்றான்.

நேரம் நாலரை மணியிருக்கும்.

பாடசாலையால் வந்து சாப்பாட்டை முடித்துக்கொண்டவர்கள் இங்குவந்து கூடியுள்ளனர். சகலரும் ஒரு கொடிக்காய்கள்.

"கண்ணா, என்ன விளையாட்டடா விளையாடுவம்....?" ரமணன் கண்ணனிடம் கேட்கின்றான். ரமணனுக்கு என்றுமே கணவனிடம் அலாதிப் பிரியமுண்டு. கண்ணன் மிகவும் நல்லவன். எதையுமே சகித்துக்கொள்ளும் இயல்புள்ளவன்.

வீட்டுக்கும், வீட்டுக் கேற்றுக்கும் இடையேயுள்ள பதினைந்தடி நீளமான பாதையின் இடதுபக்கமாக நிற்கின்ற விலாட் மாமரத்தடியோடு நிற்கின்றான் ரமணன். கருவண்டு போன்ற ரமணனின் அழகிய கண்களின் பார்வைக்கோடுகள் கண்ணனின் உதடுகளைத் தொட்டு நிற்கின்றன.

ரமணனுக்கு ஒன்பது வயது. இந்த வீட்டின் கடைசி வாரிசு. ரவுணிலுள்ள பிரபல்ய கல்லூரி ஒன்றின் மாணவன். ரமணனும் கண்ணனும் மாமன் மருமகன் உறவிலுள்ளவர்கள். ஆனால் பார்வைகுச் சகோதரர்களைப் போன்றவர்கள்.

"எடை கண்ணா என்ன விளையாட்டடா விளையாடுவம்....?" ரமணன் திரும்பவும் கேட்கிறான்.

ரமணனின் வீடு.

வீட்டின் இடதுபக்கமாக தறிக்கப்பட்ட தென்னை மரத்தின் அடிப்பாகம்; அதன்மேல் கால்களைத் தொங்கப்போட்டபடி அமர்ந்திருக்கின்றான் கண்ணன். தென்னங் குற்றியிலிருந்து சிறிது தூரத்தில் கிழங்கு பிடுங்கப்பட்டு, மூடப்படாத நீள்சதுர வடிவிலான பனம்பாத்திக் கிடங்கொன்று. அந்தக் கிடங்கைச் சுற்றி நால்வரும் நிற்கின்றனர்.

முற்றத்திலுள்ள தேக்கமர நிழலில் 'கன்வஸ்' கட்டிலில் நான் படுத்திருக்கின்றேன். ரமணனுக்கு நான் தாத்தா முறையில் உள்ளவன்.

" இவன் கண்ணனுக்கு ஒண்டும் தெரியாது.... எடை பாலா... நீ சொல்லடா.... என்ன விளையாட்டு விளையாடுவம்...? கண்ணன் மீது தொடுத்திருந்த கேள்வியை இப்போது பாலா மீது தொடுக்கின்றான் ரமணன்.

இங்கு நிற்பவர்களில் வயதில் மூத்தவன் பாலா. அவனுக்கிப்போது பத்து வயது நடக்கின்றது.

"என்ன விளையாட்டு விளையாடுவம்....? ரமணன் கேட்ட கேள்வி எனது செவிப்பறையில் பதிந்து.... இதயத்தை நோக்கி விரைந்து..... என்னையறியாமலேயே எனது மனத்திலுள்ள அனுபவப் பக்கங்கள் புரட்டப்பட்டு.... ஆரம்ப காலப் பதிவுகளில் நங்கூர மிடுகின்றது. பதினொரு வயதிற்கு இடைப்பட்ட காலம்... நான் இவர்களைப் போன்ற சிறுவன்.

எனது வீட்டிற்கும் கிணற்றடிக்கும் இடையிலுள்ள பூவரசமரத் தடியில்.... சாம்பல் குளித்த கோழிக்குஞ்சுகள் போல்... அரை குறை அம்மணக் கோலத்தில்.... எனது நண்பர்களோடு சோறு கறி சமைத்து விளையாடியதும் குரும் பட்டிகளை ஈர்க்கினால் பொருத்தி தேர் இழுத்து விளையாடியதும், குரும்பட்டைகளை ஈர்க்கினால் பொருத்தி தேர் இழுத்து விளையாடியதும், கிலுகிலுப்பை மரத்தினுள் கள்ளன் பொலிசு விளையாட்டு விளையாடியதும் நினைவுக்கு வருகின்றன...

எனது குடும்பத்தின் பஞ்சப் பட்ட வாழ்க்கை கற்றுத்தந்த சோறு கறி விளையாட்டு....

சமூகம் கற்றுத் தந்த தேர் இழுக்கும் விளையாட்டு...

சமுதாயத்தில் கண்டு கற்றுக் கொண்ட கள்ளன் பொலிஸ் விளையாட்டு....

முதலிரண்டும் தேவை கருதி மனதில் படிந்தவைகள். மூன்றாவது பயத்தினால் மனதில் படிந்தது....

குடும்பம், சமூகம், சமுதாயம்...! இளமைக்கால வளர்ச்சியின் எல்லைகள்.... நான் எனக்குள் சிரித்துக் கொள்கிறேன்!

"புலிகளும் ஆமிக்காறரும் சுடுபடுகிற அடிபட்டு விளையாட்டு விளையாடுவம்..." பாலா கூறுகிறான். பாலாவின் அபிப்பிராயம் பரிசீலனையின்றி ஏகமனதாக அங்கீகாரத்தைப் பெற்று முடிவாக்கப் படுகின்றது.... எல்லோருக்கும் மிக மகிழ்ச்சி.

புலிகள் ஆமி அடிபாடு!

எனது சிறுவயதுக்கால அனுபவங்களை எண்ணி எனக்குள் சிரித்துக்கொண்ட நான், இந்தச் சிறுவர்களின் முடிவைக் கண்டு எனக்குள் ஆச்சரியப்பட்டுக் கொள்கிறேன்.

எனக்கிப்போது ஐம்பது வயது இளமைக்காலமென்று பதினைந்து

வயதுகளைத் கழித்துக் கொண்டாலும், முப்பத்தைந்து வருடங்களில் எவ்வளவு மாற்றங்கள்!

எனது கவனம் முழுவதும் அவர்களின் விளையாட்டில் தரிக்கின்றது.

"அடிபாட்டு விளையாட்டெண்டால்.... துவக்குகள், கிரனைட் குண்டுகள், வோக்கி ரோக்கிகள் எல்லாம் செய்யவேணும்...." போராட்டத்திற்குத் தேவையான ஆயுத உபகரணங்களை ரமணன் எவ்வளவு சர்வசாதரணமாக உச்சரிக்கின்றான். ரமணன் மட்டுமா உச்சரிக்கின்றான்....

இவர்களுக்குள் வயதில் மிகக் குறைந்த இவன் ராஜு... அவன் கூட ஆயுத உபகரணங்களை உச்சரிக்கின்றான்.

சில வினாடிகள் கடுமையான சிந்தனையில் ஈடுபட்டிருந்த பாலா ஏதோ முடிவுக்கு வந்தவனாய் கிணற்றடியில் நிற்கும் பப்பாசி மரத்தை நோக்கி நடக்கின்றான். சில நிமிடங்களுக்கு முன்னர் பப்பாசி மரத்திலிருந்து விழுந்த நீண்ட தண்டோடு சேர்ந்த இலையை எடுத்து வருகின்றான். சில வினாடிகள் பப்பாசித் தண்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவன்... மேற்பக்கத்திலுள்ள இலைப்பகுதியை முறித்து எறிந்து எறிகின்றான்.

www.tamilarangam.net

அடிப்பக்கம் பருத்து, நுனிப் பக்கம் குழல் வடிவில்... ஒரு துப்பாக்கியைப் போன்ற இலேசான ஓர் அமைப்பு... இருந்தாலும்... அவனின் மனம் திருப்திப்படவில்லை...

பாலாவின் சிந்தனை நீள்கின்றது.. பப்பாசித் துண்டை வைத்துத் திருப்பித் திருப்பிப் பார்க்கிறான்.

நான் அவர்களின் நடவடிக் கைகளை மிகவும் அவதானமாக நோக்குகின்றேன்....

"கண்ணா... ஒரு பச்சை ஈக்கு எடுத்துக் கொண்டுவாடா..." பாலாவின் உடன் பிறந்த சகோதரன்தான் கண்ணன். வீட்டில் என்றும் பாலாவுக்கும் கண்ணனுக்கும் போட்டியாகவே இருக்கும். ஆனால், இங்குமட்டும் பாலா கூறியதும் எந்த மறுப்புமின்றி ஈர்க்கை எடுத்துவர ஓடுகிறான் கண்ணன்.

ஓடியவன் செவ்விழநீர் மரத்தில் ஒரு ஓலையைப் பிடுங்கி, கிழித்து ஈர்க்கை மட்டும் கொண்டு வருகின்றான்.

ஈர்க்கை அளவாக முறித்துத் தொடுத்த பாலா, பப்பாசித் தண்டின் அடிப்பாகத்திலிருந்துசிறிது மேலாக ஈர்க்கின் இரண்டு முனைகளையும் வளைத்து அரை வட்ட வடிவில் குத்துகின்றான்....

துப்பாக்கியை வெடிக்க வைக்கும் விசையை பாதுகாத்திருக்கும் இரும்பிலான அரைவட்ட வடிவில் குத்துகிறான்...

துப்பாக்கியை வெடிக்கவைக்கும் விசையை பாதுகாத்திருக்கும் இரும்பிலான அரைவட்டம்... அந்த வடிவம்...

மிகுதி ஈர்க்கில் ஒரு துண்டை மமமுறித்தெடுத்து அரை வட்ட வடிவத்தின் நடுவில் இறுக்குகிறான்.

அது, துப்பாக்கியை வெடிக்க வைக்கும் விசை!...

துப்பாக்கிதான் !

ஆனால் பாலாவுக்கு இன்னும் பூரண திருப்தியில்லை....

"அண்ணா.... எனக்கொண்டு செய்துதாடா" கண்ணன் மன ஆவலில் கேட்கிறான்.

"பொறடா வாறன்....." பாலா எதையோ சிந்திக்கிறான்.

"கண்ணா... ஓடிப்போய் ஒரு வாழைநார் கிழிச்சுக்கொண்டு வாடா..." பாலா மீண்டும் கட்டளையிடுகிறான்.

கண்ணன் ஓடிப்போய் ஒரே நிமிடத்தில் வாழைநாருடன் திரும்பி வருகின்றான். வாழைநாரை வாங்கிய பாலா நாரின் ஒரு முனையை தண்டின் அடிப்பக்கத்திலும், மறுமுனையைத் தண்டின் நுனிப்பாகத்திலும்

# 'தானு'

## சிந்து சமவெளி தமிழச்சி

தானவர் என்ற ஒரு பரம்பரையினருக்குச் சொந்தக்காரி. ஆரியர் எழுதிவைத்துள்ள 'புராணங்களில்' வரும் தானவர்களின் கொள்ளுப்பாட்டி.

தன் மகன் விருத்திரனுக்குத் துணையாக வாளெடுத்துப் போர்முனை சென்ற முதல் தமிழச்சி. இந்தத் தமிழச்சியின் கத்தி நாடோடி ஆரியக் கொள்ளைக்கூட்டக் காட்டுமிராண்டிகளின் உடல்களைச் சுவைபார்த்ததுண்டு. பல ஆரிய மூர்க்கர்களின் தலைகளைக் கொய்ததுமுண்டு. அந்த வீரத் தமிழச்சி போர் முனையில் வீரமரணமடைந்து கிட்டத்தட்ட 3500 ஆண்டுகள் கழிந்தும் அவள் பெயர் நம் தமிழகத்தில் நிலைத்து நிற்பதை எண்ணும்போது மயிர்க்கூச்செய்கிறது.

இன்றும் நம் நாட்டில் பெண்களுக்கு 'தானு' என்று பெயர் வைக்கப்படுகிறது. ஆண்களுக்கும் 'தானு' என்றும் தானப்பன் என்றும் பெயர் வைப்பது உண்டு....

நன்றி: திராவிடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுகிறான்... தோளில் போடுகிறான்... துப்பாக்கி தோளில் தொங்குகின்றது... அவன் வழமையை விட நிமிர்ந்து நிற்கிறான்...

ஒரு போராளி போல்....!

எனது உடலெல்லாம் ஏதோ ஒருவித விறைப்பு...! எனது மனம் திரும்பவும் பின்னோக்கித் திரும்புகின்றது...

பஞ்சப்பட்ட சோறுகறி விளையாட்டு... சிந்தனை நீளப் பார்க்கின்றது... நீள விடாமல் தடுத்து நிறுத்தி முற்றுப்புள்ளி வைத்து..



மகனே
மகனே
எதிர்பார்த்து
பிரசவ விடுதி முன்
காத்திருக்கும்
தந்தையிடம்
மனைவியின்
மரணச் செய்தி
சேர்வது மாதிரி
உன் மரணம்
எங்களுக்குள்
திணிக்கப்பட்டது...

ஈழத்தின் அவசியத்தை
உன் மரணம்
உணர்த்தி விட்டது...

செல்வ பாரதி
தமிழ்நாடு.

இவர்களின் விளையாட்டை அவதானிக்க முயல்கிறேன்...

.....சமைத்ததும் சாப்பிட்டதும் தானே. மிச்சம்... வேறு எதை உருப்படியாகச் செய்தோம்....? எனது மனம் தன்னிச்சையாகத் திட்டுகின்றது! ஒருவாறு சிந்தனையை நிறுத்திக் கொண்டு விளையாட்டை அவதானிக்கின்றேன்.

இப்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பப்பாசித் தண்டு தேவைப்படுகின்றது.... ரமணன் வீட்டின் கோடிப்பக்கமாக ஓடிப்போய் முருங்கை மரத்தடியில் கிடந்த கொக்கத்தடியைத் தூக்க முடியாமல் தூக்கி வருகிறான்... எல்லோரும் சேர்ந்து கொக்கத் தடியை நிமிர்த்தி பப்பாசித் தண்டுகளை தட்டி விழுத்துகின்றனர்...

செவ்விழநீர் மரத்தில் ஈர்க்கும் பிடுங்கப்படுகின்றது.

சில நிமிடங்களில் துப்பாக்கிகள் தயாராகிவிட்டன!

பாலாவைப்போல் தோள்களில் துப்பாக்கிகளைக் கொழுவிக் கொண்டு எல்லோரும் நிமிர்ந்து நிற்கின்றனர்!

அடுத்து கிரனைட் குண்டு.

நீள் சதுரமான அந்த பனம்பாத்திக் கிடங்கை அண்மித்து பனங்கொட்டைகள் குவிக்கப் பட்டிருக்கின்றன. அந்தப் பனங் கொட்டைகளில் ஒன்றஐ எடுக்கின்றான் ரமணன். மண்ணுக்குள் கிடந்து உக்கி, தும்புகள் நீங்கி, ஆமையின் ஓடுகள் போல் ஆகிவிட்ட பனங்கொட்டை.. அதைத் திருப்பித் திருப்பிப் பார்க்கின்றான்...

"எடை பாலா... இதைக் கிரனைட் எண்டு வைச்சிருப்பமா...?"

"ஓமடா.. இதுதான் கிரனைட்..."

எல்லோரும் பனங்கொட்டைக் குவியலுக்குள் நல்ல சிறிய பனங்கொட்டைகளைத் தெரிந்தெடுத்து, தங்கள் களிசான் பைகளை நிரப்பிக்கொள்கின்றநர்.

அடுத்து, வோக்கிரோக்கி...? செந்தூரன் தான் பொறுக்கி வைத்திருந்த பனங்கொட்டைத் துவாரத்தினுள் ஒரு நீண்ட தடியை எடுத்து இறுக்கி நிற்பாட்டுகிறான்.

"எடேய்... இஞ்சருங்கோடா வோக்கிரோக்கி..." எவ்வளவு மகிழ்ச்சியோடு அவன் கூறுகின்றான்.

பனங்கொட்டை வோக்கிரோக்கிப் பெட்டி, தடி அதன் ஏரியல்!

"எடேய்! பெரிய பனங்கொட்டையாய் எடுங்கோ... அப்பதான் வடிவாய் இருக்கும்." ரமணன் சிறு திருத்தம் கூறுகின்றான்.

பப்பாசித் தண்டு துப்பாக்கி

சிறிய பனங்கொட்டை கிரனைட்

பெரிய பனங்கொட்டை வோக்கிரோக்கி!

ஆயுதங்கள் தயாராகிவிட்டன!

இவர்கள் விளையாட்டைத் தொடங்கமாட்டார்களா என்ற ஆவலுணர்வு எனது மனத்தை அரிக்கின்றது. 'பொடியள், விளையாட்டைத் தொடங்கிங்கோடா' இப்படிக் கூற நினைக்கிறேன்.... அவ்வளவு மனவேகம். அப்படிக் கூறினால் அவர்கள் வெட்கப்பட்டு விளையாட்டை நிறுத்திக்கொண்டு விட்டால் அதை நினைத்து மௌனமாக இருந்து அவதானிக்கின்றேன்.

"பாலா கன்னை புறிப்போமா?" ரமணன் இப்படிக் கேட்டதும், எல்லோரும் அரைவட்ட வடிவில் அவனுக்கு முன்னால் நிற்கின்றனர்.

"இந்தக் கிடங்குதானாம் 'ஆமிக் காம்ப்' இதுக்குள்ளை ஆமிக்காறர் துவக்கோடை இருப்பினமாம்... புலிகள் மெல்ல மெல்ல வந்து சுடுவினமாம். ஆமிக்காரர் ஆயுதங்களைப் போட்டிட்டு பயந்தோடுவினமாம் . புலிகள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு காம்பையும் உடைச்சுப்போட்டு போவினமாம்..." ரமணன் விளையாட்டை விளக்கு

கிறான்.

"கன்னை புறிப்பம்... நானும் கண்ணனும் புலிகள். பாலாவும், செந்தூரனும், மயூரனும், ராஜூவும் ஆமிக்காரர்.... ஆமிக்காரர் கனக் கவாய் இருக்கிறவங்கள். புலிகள் கொஞ்சமாய்த்தானே போறவங்கள்.... அதுதான் நானும், கண்ணனும் மட்டும் புலிகள். நீங்களெல்லாம் ஆமிக்காரர்கள்."

கன்னை பிரிக்கப்பட்டுவிட்டது.

அடுத்து விளையாட்டு!

அடிபாடு!

எனது உணர்வின் உச்சநிலை! அவர்களின் நடிப்பைப் பார்க்க வேண்டுமென்று ஆவல்!....

புலியாய் நடிக்கத் தெரிவுசெய்யப் பட்ட கண்ணன் மகிழ்ச்சியோடு ரமணனுக்கருகே வந்து நிற்கின்றான்.

ஏனைய நால்வரும்.... மனம் சோர்ந்து போய் நிற்கின்றனர். பாலா தனது களிசான் பைக்குள் கிரனைட்டாக வைத்திருந்த பனங் கொட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்து நிலத்தில் போடுகின்றான்... அவனுக்கேற்பட்ட வெறுப்புணர் வின் வெளிப்பாடு.

ரமணனால் பாலாவைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ரமணனால் மட்டுமா?... ஐம்பது வயதுக்காரனான என்னாலும் தான் புரிந்துகொள்ள முடியவில்லை!

"பாலா விளையாடுவமா...?"

நான் விளையாட விரயில்லை...." பாலா கூறுகிறான்.

"நானும் விளையாட வெர யில்லை...." செந்தூரன் கூறுகிறான்.

"நாங்களும் விளையாட வெரயில்லை...." மயூரனும் ராஜூவும் கூறுகினறனர்.

ரமணனும் கண்ணனம் ஆளை யாள் பார்த்துக் கொள்கின்றனர். அந்த நால்வரின் மனமாற்றங்களுக் கான காரணங்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை!

பெரும் ஆவலோடு ஆயுதங் களைச் செய்துகொண்ட அவர்கள், இப்போது விளையாட பின்வாங்கு கின்றனர்!

என்ன காரணம்....?

பாலாவைப் போல் மற்றைய மூவரும் ஆயுதங்களை நிலத்தில் போடுகின்றனர்...

"பாலா... பேய்... வாடா விளையாடுவம்" காரணம் புரியாத ரமணன் பாலாவிடம் கெஞ்சு கிறான்.

"நான் மாட்டன்...."

"ஏன்.... ....?

"விளையாட எனக்கு விருப்பம்... ...ஆனால்... ..ஆமிக்காரனாய் வர விருப்பமில்லை" பாலா கூறுகிறான்.

பாலா மனம் சோர்ந்துபோனது புரியாத புதிராக இருந்தது.... இப்போது அவன் கூறிய காரணம், அதைவிடப் புதிராக இருக்கின்றது!

விளையாட விருப்பம்... ...ஆனால் ஆமிக்காறானாய் வர விருப்ப மில்லை... இதில் என்ன வித்தி யாசத்தை இவன் கண்டுவிட்டான்....

சிறுவயதில் நாங்கள் கள்ளன் பொலிசு விளையாட்டு விளையாடு வோம்.. ...இதில் நான் பொலிசுக் காரனாய்த்தான் வர விரும்புவேன. ஏனென்றால், அதிகாரமுள்ள பாத்திரம்... ....

இவன் பாலா... ஆமிக்காரனாய் வர மறுக்கின்றான்!

"எடை... பாலா வாடா விளையாடுவம்..."

"எனக்கு ஆமிக்காரனாய் வர விருப்பமில்லை.."

"ஏன்?"

"ஆமிக்காரனாய் வந்தால்.... ஆயுதங்களைப் போட்டிட்டு பயந்தோட வேணும்... ...."

"விளையாட்டுத்தானே...."

"விளையாட்டுக்கெண்டாலும்... .... பந்தோட விருப்பமில்லை... ... அப்படியெண்டால்... நீயும் கண்ண னும் ஆமிக்காரனாய் வாருங்கோ... நாங்கள் புலிகளாய் வாறம்..." பாலா கூறிவிட்டு ரமணனைப் பார்க் கிறான்.

ரமணனும், கண்ணனும் தலையைக் குனிந்து நிற்கின்றனர்.... அவர்களுக்கும் ஆமிக்காரனாய் வர விருப்பமில்லை... ...

"எங்களுக்கும் புலிகளாய் வரத்தான் விருப்பம்.... ஆமிக் காறனாய் வந்தால்... ஆயுதங்களை எறியவேணும், பயந்தோடவேணும்..." ரமணன் தலையைக் குனிந்தபடி நின்று கூறுகின்றான்.

எல்லோரும் புலிகளாகி நிற்கின் றனர்.... ....

எல்லோரும் ஒரே கன்னை!

.... எனது உடலில் புதியதொரு நரம்பு பிரசவித்து உடலெல்லாம் பிரவாகிக்கின்ற உணர்வெனக்கு.... முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு.... நான் 'சமையல்' விளையாட்டு விளையாடினேன்... இன்று... இவர்கள் 'அடிபாட்டு' விளையாட்டை விளையாடு கின்றனர்....

எவ்வளவு மாற்றம்....?

அதிலும்

விளையாட்டுக்குக் கூட அவர்கள் பயந்தோட விரும்ப வில்லை... அடிக்கத்தான் விரும்பு கின்றார்கள்... ...

இதுதான் மிகப்பெரிய மாற்றம்!

"மாவீரர்கள் புதைக்கப்படுவ தில்லை... ... அவர்கள் விதைக்கப்படு கின்றார்கள்..." என்று கூறுகின்றார் களே... அந்த மாவீரர்கள் விதைக்கப்பட்ட நிலத்தில், மண்ணைக் குடைந்தெழுந்த குருத்துக்களா இவர்கள்!

பெரும் ஆயத்தங்களோடு முகிழ்த்தெடுத்த விளையாட்டு... குழப்பத்தில் முடிகின்றது!

முடியாத இந்த விளையாட் டிலும்

முடிவானதொரு முடிவுண்டு!

விபரிக்க முடியாத பல உணர்வுகள் எனது இதயத்துள் சங்கமமாகிக் கொண்டிருக்கின்றன!

(யாவும் கற்பனையல்ல)

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# இதயபூமி-1

தமிழீழ தேசத்தின் இதயம் அது. மணலாறு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிர் மூச்சாய் இருந்துவரும் மையம். இந்திய வல்லாதிக்கப் படைகளை முகத்தில் அறைந்து வீடு அனுப்பி வைத்ததில் பெரும் பங்கெடுத்துக் கொண்ட களபூமி. எல்லாவற்றிற்கும் மேலாக வடதமிழ் ஈழத்தையும், தென்தமிழ் ஈழத்தையும் இணைத்து வைத்திருக்கும் பால பூமி. மணலாறு, தமிழீழத்தின் இதயத்தைப் பிளந்து தமிழ் மக்களின் தாயக தாகத்தை அழித்து விடத் துடிக்கும் எதிரிக்கும் அந்தப் பிராந்தியம் முக்கியமாகத்தான் இருந்தது. மிகக் குறுகிய காலப் பகுதியில் சிங்கள பேரினவாத அரசு 'வெலி ஓயா' என புதிய நாமம் சூட்டி அப்பகுதியில் வாழ்ந்த தமிழ் சுதேசிகளையெல்லாம் விரட்டியடித்து, அங்கெல்லாம் சிங்கள மக்களைக் குடியமர்த்தி, அவர்களுக்கு பாதுகாப்பளிக்கவும் சில அபகரிப்புக்களை தொடர்ந்து மேற்கொள்ளவும் வீறாப்புடன் எழுந்து நிற்பதுதான் மண்கிண்டி மலை இராணுவமுகாம். 'மண்கிண்டிமலை' அது எதிரியின் பாசையிலே 'ஜானக புர'.

ஆனால்... 25.07.93 அன்று இரவு விடிந்தபோது, எதிரி அதிர்ந்தான். உலகம் வியந்தது. சிங்கள தேசம் ஒருமித்து ஒப்பாரி வைத்தது. 'வெட்கத்துக்குரிய நாள். எது பிழையாகிப் போனது?' இப்படிப்

**'இதயபூமி -1' நடவடிக்கையின் போது தளபதி பால்ராஜ், தளபதி சொர்ணம் மற்றும் போராளிகள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net







www.tamilarangam.net



# இதயபூமி - 1

## விடுதலைப் புலிகள் - வியத்தகு சாதனை




பலவாறு தமது இராணுவத் தோல்விகளை தாங்கிக்கொள்ள முடியாமல் அழுதன பல சிங்களதேச நாளேடுகள்.

ஆம், பேரின அரசினால் மிகப்பெரிய தமிழினப் படுகொலை நடாத்தி முடிக்கப்பட்ட பத்து ஆண்டுகள் நிறைவெய்திய வேளையில் கடந்த 25/07/93 அன்று இரவோடு இரவாக இப்பகுதியின் மிகப் பெரிய முகாம்... எதிரி தனக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதி வந்த முகாம்... அப்பகுதியில் நடைபெற்ற பல்வேறு இராணுவத் தாக்குதலுக்கும் கட்டளைத் தலைமையகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம்.... அத்துடன் அதனைச் சூழ்ந்திருந்த சிறிய முகாம்களும் அரைமணி நேரத்தில் தகர்த்தழிக்கப்பட்ட வரலாற்றுச் சாதனை நிகழ்த்தப் பட்டுள்ளது.


இதயபூமி 1 எனப் பெயர் சூட்டப்பட்டு விடுதலைப் புலிப் போராளிகளினாலும் அவர்களின் பின்னால் அணிவகுத்து நின்ற துணைப்படை வீரர்களினாலும் நடாத்தப்பட்ட இந்த மின்னல் வேக, வெற்றிகரமான தாக்குதலில் தமது இனிய உயிர்களை இதய பூமிக்குத் தந்து தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிரந்தரமாய் உறங்கிக் கொண்டனர் பத்து வேங்கைகள்.

70க்கும் மேற்பட்ட இராணுவம் கொல்லப்பட்டு, 5 கோடி பெறுமதியான ஆயுதங்களும் அள்ளப்பட்டு வெற்றிகரமாக நிறைவேறிய இதய பூமி 1 இன்னும் எத்தனை தடவைகள் இந்தப் பகுதியில் வெடிக்கப்போகின்றதோ என்று எதிரி ஏங்கிக் கொண்டிருக்கின்றான்.

www.tamilarangam.net



'இதயபூமி-1' நடவடிக்கையின் போது முற்றாகத் தகர்க்கப்பட்ட மண்கிண்டிமலை இராணுவ முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராட்டத்தின் நிழலில்

“அண்ணை இதை வைச்சிருங்கோ. நான் சென்றிக்குப் போறன். ஜெயிலுக்கு உள்ளேயும், வெளியில் வந்தாப் பிறகும் நான் எழுதியதெல்லாம் இதில் கிடக்கு. இனி இது உங்கட பொறுப்பு. ஏனென்டா நான் இனி திரும்பி வருவேனோ தெரியாது.” இவ்வாறு கூறி ஒரு பைலை ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறான் சாளி. இரண்டு தினங்கள் சாளி எதிர்பாராத விபத்தொன்றில் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவிடுகிறான் என்ற சேதி கிடைத்தது.

சாளியின் அந்த பைலைத் திறக்கிறோம். இறுதியாக சாளியினால் தரப்பட்ட படத்தையும் கவிதையையும் காண்கிறோம். பட்டமரம் ஒன்றில் சென்றியில் இருக்கும் ஒரு போராளியின் உணர்வுகளைச் சித்தரிக்கும் கவிதையொன்றைப் படிக்கிறோம். பேச்சுவார்த்தையில் எந்தப் பலனுமில்லை. ஆயுதப் போராட்டமே ஒரே தீர்வு என்பதை அது வலியுறுத்துகிறது. சாவு தன்னை நெருங்குகின்றது என்பதை தனது உள்ளுணர்வுகளினால் உணர்ந்துகொண்ட போராளி இவன். இலட்சியத்தை நேசிக்கும் இந்தப் போராளியின் சத்தியமான வார்த்தைகளை மீண்டும் படிக்கிறோம். இதயம் கனக்கிறது.

ஒரு சிறந்த ஓவியனாக, கவிஞனாக, எழுத்தாளனாக, புகைப்படக் கலைஞனாக இவை எல்லாவற்றுக்கும் மேலாக உன்னதமான போராளியாக வாழ்ந்த சாளிக்கு வயதோ இருபத்தைந்து கூட ஆகவில்லை. இந்த வயதிற்குள் சகல கலாவல்லவனாக திகழ்ந்த சாளியின் ஆற்றலைக் கண்டு நாம் அனைவருமே வியந்ததுண்டு. பண்டிதர் சரணாலயத்தின் சுவர்களில் வரையப்பட்டிருந்த சகல ஓவியங்களும் சாளியின் கைவண்ணமே. ‘ஈழமுரசு’ பத்திரிகைதான் இவனது ஆற்றல்



கப்டன் சாளி

களை இனங்கண்டு, இவன் திறமைகளை வெளிப்படுத்தியது. முதன்முதல் தன்னோடு கூட இருந்து போராடி களத்தில் மடிந்த ஒரு போராளியைப் பற்றிய தான கதை ஒன்றை உணர்வுபூர்வமாகச் சித்தரித்திருந்தான் சாளி. அதைத் தொடர்ந்து வேறு சில படைப்புகளும் வெளியாகின. தளபதி கிட்டுவுடன் எப்போதும் காணப்படும் இவன், சதிகாரர்களினால் ஒரு காலை கிட்டு இழந்து வைத்திய சிகிச்சைக்காக இந்தியா செல்லும்போது அவருடனே பயணமானான். அரசியற் சூழ்நிலையின் மாற்றங்களினால் இந்தியப் படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மோதின. தமிழகத்தில் இருக்கும் புலிகளுக்கோ வீட்டுக்காவல். இந்நிலையிலும் “தமிழீழம்” என்ற சஞ்சிகை தமிழகத்தில் வெளிவந்து கொண்டிருந்தது. அந்தச் சஞ்சிகையில் வெளிவந்த சித்திரங்களும் சாளியினுடையதே. தனது எண்ணப்படி புலிகளை ஆட்டுவிக்க முடியாது என்பதை இந்திய அரசு சந்தேகமறத் தெரிந்துகொண்டபின், தமிழகத்தில் இருந்த புலிகளை சிறையில் தள்ளியது. பின்னர் எமது சொந்த மண்ணுக்கு நாடு கடத்தியது. இதற்கிடையில்தான் எத்தனை வாக்குறுதிகள்? எத்தனை நம்பிக்கைத் துரோகங்கள்? சென்னைச் சிறைச்சாலை, பருத்தித்துறை முகாம், காங்கேசன்துறை முகாம் என்று சாளியின் சிறைவாழ்வும் தொடர்ந்தது. என்ன நோக்கத்திற்காக இவர்களை சிறையில் அடைத்ததோ அந்த நோக்கத்திலும் இந்திய அரசு தோல்வி அடைந்தது. சிறைச்சாலைகளை கல்விச்சாலைகளாக்கினர் புலிகள்.

இந்திய அரசின் நடவடிக்கைகளினால் மனம் நொந்திருந்த போராளி சாளி S.L.R. ஒன்றை ஊன்றியபடி காணப்படும் மகாத்மா காந்தியின் ஓவியம் ஒன்றை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வரைந்திருந்தான். தப்பித் தவறி இந்தியப் படையில் சேர்ந்துவிட்ட கொஞ்சம் மனச்சாட்சியுடைய கேணல் சுக்கிந்தர்சிங் இந்த ஓவியத்தைப் பார்த்தார். அவரை உறுத்தியது இவனது ஓவியம். கைகொடுத்துப் பாராட்டிவிட்டுச் சென்றார். தனது போராட்ட அனுபவங்களை எழுத்துருவமாக்கினான் சாளி. எங்களுக்கு விடுதலை கிடைக்குமா? இவை வெளியில் செல்லுமா? என்றெல்லாம் நினைத்து அவன் முடங்கிக் கிடக்கவில்லை. தனது கடமையைத் தொடர்ந்தான். மானிப்பாயில் சோப் தொழிற்சாலையொன்றில் நடந்த இராணுவ முற்றுகையை எதிர்த்துப் போராடி தனது முதல் கள அனுபவத்தை புத்தக வடிவமாக வரைந்தான். எந்தப் போராளிக்கும் தனது முதல் கள அனுபவங்கள் மறக்க முடியாதவையாக இருக்கும். எனவே தனது உள்ளுணர்வுகளையெல்லாம் அதில் கொட்டியிருந்தான் சாளி. அதுமட்டுமல்ல சுமார் பத்துப்பேரை பெயரிட்டிருந்தான். மிகக் குறைந்த வசதிகளுடன் சிறைச்சாலையினுள் இப்படியெல்லாம் செய்ய முடியும் என்று செய்துகாட்டினான். அதுமட்டுமல்ல திலீபனின் நினைவாக ஓவியப் போட்டி ஒன்றை நடத்தினான். சிறந்த கருத்தும், அழகும் உள்ள ஓவியங்களுக்குப் பரிசும் வழங்க ஏற்பாடு செய்தான்.

இவனது திறமைகளை அறிந்த மேஜர் ஜெயராம் இவனையழைத்து தன்னை ஒரு ஆட்டுமந்தைக் கூட்டம் பின்தொடர்வதாக பிரபாகரன் நினைப்பதை ஓவியமாக வரையச் சொன்னார். படம் வரையாவிட்டால் விடுதலை இல்லையென்று மிரட்டினார். ஐந்து வருடங்கள் உனது பைலை எடுக்க முடியாதபடி சிவப்புப் பென்சிலால் கீறிவிடுவேன் என்று மிரட்டினார். வாழ்வை அனுபவிக்க வேண்டிய இளமைப் பருவம் என்பது சாளிக்கு நினைவில் வரவில்லை. போராளிகள் செய்த தியாகம்தான்




**மேஜர் ஜெயராம்**

மானிப்பாய் சோப் தொழிற்சாலை முற்றுகையிலிருந்து அதன்பின் இராணுவத்தினருடன் நடந்த ஏராளமான மோதல்களில் இவன் தனது திறமையை வெளிப்படுத்தினான். தளபதி கிட்டு கலந்து கொண்ட தாக்குதல்களில் எல்லாம் பெரும்பாலும் கூடவே இவனும் கலந்துகொண்டுள்ளான். பண்ணை பொலிஸ் நிலைய விடுதி மீதான தாக்குதல் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது.

சிறிலங்காப் படைகளுடனான தற்போதைய இந்த மோதலில் காங்கேசன்துறைப் பகுதியிலே இவன் தனது கடமையை ஏற்றிருந்தான். கடந்த 13.07.90 அன்று இரவு வீதி விபத்து என்ற வடிவில் விதி இவனை நெருங்கியது. "இவனது பேனா போர்க்கால இலக்கியங்களைப் பிரசவித்தது. இவனது தூரிகை இந்த மண்ணின் நிலைக் கண்ணாடி ஆகியது. இவனது துப்பாக்கி ஒளி துட்டர்களுக்கு நாராசமாகியது." இவன் மறைந்த பின்னும் அது கனன்றுகொண்டே இருக்கின்றது.

**சாளியின் ஓவியத்தில் கலைத்துவம் உண்டு. அவனது கவிதைகளில் கவித்துவம் இருக்கும். அவனது கதைகளில் தத்துவம் இருக்கும். கட்டுரைகளில் அவனது வித்துவம் கண்டோம். களத்தில் அவனது தனித்துவம் கண்டோம். இப்படிப் பல மகத்துவம் மிக்க ஒரு இளம் மேதைஇந்தச் சின்ன வயதில் போனானே!**

தனது மாணவர்களாக்கி அவர்களை சிறந்த ஓவியர்களாக இந்த மண்ணுக்குக் கொடுத்தான் சாளி. தியாகி திலீபனில் மதிப்பும், அன்பும் கொண்டவன் இவன். எனவே திலீபனின் இரண்டாவது தினத்தன்று கையெழுத்துப் பிரதியாக சிறந்த ஓவியங்களையும், கவிதைகளையும் கொண்ட மலர் ஒன்றை உருவாக்கி வெளியிட்டான். தியாக திலீபம் என்று அதற்குப் நினைவுக்கு வந்தது. எந்த விளைவுக்கும் தயார் என்பதைத் தெரிவித்துவிட்டு உன்னதமான போராளியாக தனது சிறைக்குத் திரும்பினான். இதையெல்லாம் எழுத்து வடிவத்தில் கொண்டு வந்திருந்தான். "அடிபணியா எரிமலைகள்" என்ற பெயரில் அவை வெளியாகியிருந்தன.

போராட்டக்களத்தில் இவனது பங்கு மறக்கக்கூடியதல்ல.

**நன்றி: ஈழநாதம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# தமிழக அரசியலில் ஒரு புதிய போக்கு

திராவிட முன்னேற்றக் கழகத்துள் நீறுபூத்துக்கிடந்த உட்கட்சிப் பிரச்சினை திடீரென தீயாய்ப் பற்றிக்கொண்டது. கோபால்சாமியை தலைமைப் பதவிக்குக் கொண்டுவருவதற்காக விடுதலைப் புலிகள் தன்னைக் கொல்லத் திட்டமிட்டுள்ளனர்

## 'விட்ட கணை பூச்சரமாய்'

**வை. கோபால்சாமி**



வை. கோபால்சாமி


என்ற செய்தியுடன் உட்கட்சிப் பிரச்சினையை வீதிக்குக் கொண்டு வந்தார் அதன் தலைவர் கருணாநிதி. கருணைநிதியால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, சுயபுத்தி உள்ள யாராலும் பகுத்தறிந்து சிரிக்கக் கூடிய நகைச்சுவைத் துணுக்காகவே கருதப்படுகின்றது. தனது மகன் ஸ்டாலினை கழகத்தின் தலைமைப் பதவிக்குக் கொண்டுவர கருணாநிதி எடுத்துவருகின்ற முயற்சியும், அதற்கு தடையாக கோபால்சாமி உள்ளார் என்ற கருணாநிதியின் கணிப்பும் கழகத்தினுள்ளே முரண்பாடுகளையும், மோதல்களையும் உருவாக்கின எனச் சொல்லப்படுகின்றது. கழகத்தைக் குடும்பச் சொத்தாக்கவோ, ஸ்டாலினைத் தலைவராக்கவோ கருணாநிதி எடுக்கும் முயற்சிகளை கழகத்தின் எண்பது வீத தொண்டர்கள் எதிர்க்கின்றார்கள் என நாஞ்சில் மனோகரன் தெரிவித்துள்ளார்.

முரண்பாடு மோதலாக வெடிக்கும் என எதிர்பார்க்கப்பட்டதுதான்; ஆனால் இவ்விதம் வெடிக்கும் என யாரும் எதிர்பார்த்திருக்கமுடியாது. மத்திய அரசு கொடுத்த தகவலை சுயபுத்தியுடன் ஆராய மனமின்றி, அவசர அவசரமாக செய்தியாளர்களிடம் தெரிவித்து தனது உளவிருப்பினை வெளிப்படுத்தினார் கருணாநிதி.

தமிழக அரசுக்கு இந்திய மத்திய அரசு கொடுத்த தகவல், தமிழக அரசு தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கட்ராமனின் கடித வாயிலாக கருணாநிதிக்குத் தரப்பட்டது. அக்கடிதம் இதுதான்;

## 'தப்புத்தாளம் தாளாத சோகம்'

**மு. கருணாநிதி**



**அன்புள்ள ஐயா,**

**மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் இந்தத் தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**வை. கோபால்சாமியின் ஆதாயத்துக்காக உங்களை எல்.டி.டி.ஈ. இயக்கத்தினர் தீர்த்துக்கட்டப் போவதாக ஊர்ஜிதம் செய்யப்படாத ஒரு தகவல் மத்திய அரசுக்கு வந்துள்ளது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**முதலமைச்சர் இந்தத் தகவலை உங்களுக்குத் தெரிவிக்குமாறும், தகுந்த பாதுகாப்பை உங்களுக்கு அளிக்குமாறும் உத்தரவிட்டிருக்கிறார்.**

**எனவே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய உங்கள் சம்மதத்தைக் கோருகின்றேன்.**

**உங்கள் உண்மையுள்ள,**
**தலைமைச் செயலாளருக்காக**
**பாஸ்கரதாஸ்**
**(ஒப்பம்)**
**பொதுத்துறை.**

இம்மாதம் இரண்டாம் திகதி கிடைக்கப்பெற்றதாகச் சொல்லப்படும் இக்கடிதத்தை மறுநாள், மூன்றாம் திகதி பத்திரிகையாளர்களிடம் தெரியப்படுத்தினார் கருணாநிதி. கோபால்சாமி மீதும், விடுதலைப் புலிகள் மீதும் இவர் மேற்கொண்ட இக் கொலைச் சதிக் குற்றச்சாட்டு நாடகத்தை, இந்திய மத்திய அரசு, உளவுத்துறையோடு சேர்ந்தே உருவாக்கியதாகச் சொல்லப்படுகின்றது. நடந்துமுடிந்த ராணிப்பேட்டை, பழனி இடைத் தேர்தல்களின் தோல்வியில் இருந்து, தி.மு. கழகமும், இந்திரா காங்கிரஸ் கட்சியும் இணைய வேண்டிய தேவையை இரண்டுபகுதியினரும் உணர்ந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இந்த இணைவிற்கு முன்னோடியாக கோபால்சாமி மீதான ஒழுங்கு நடவடிக்கை குறித்தும் பேசப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. எது எப்படியிருப்பினும், காங்கிரசைக் கவருவது, கோபால்சாமியை எழவிடாது தடுப்பது என்ற வகையில் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களைக் கொய்யும் கலையைப் பிரயோகித்தார் கருணாநிதி.


ஆனால் கருணாநிதி நினைத்ததைப்போல் எதுவும் நடந்துவிடவில்லை. கழகத் தலைமை, கழக அங்கத்தவர்களின் கடும் எதிர்ப்பிற்கு இலக்கானது. கோபால்சாமியை கழகத்தைவிட்டு வெளியேற்ற சிலர் முன்மொழிந்தாராயினும், பலர் கடுமையாக எதிர்த்தனர். கருணாநிதி முன்னெப்போதும் சந்தித்திராத எதிர்ப்பை கட்சிக்குள் சந்தித்தார் என B.B.C. செய்தியாளரே தெரிவித்தார்.

ஏழாம் திகதி, அரசியலில் இருந்து தான் ஒதுங்கப்போவதாக கருணாநிதி திடும் என அறிவித்தார். இது கருணாநிதியின் சித்து விளையாட்டே என தமிழக அவதானிகளின் விமர்சனங்களுக்கிடையில், மறுநாளே, உடன்பிறப்புக்களின் கண்ணீர் தன் மனதைக் கரைத்துவிட்டதாகக் கூறி, தனது முடிவை வாபஸ் பெறுவதாக அறிவித்தார்.

இன்று, கோபால்சாமியும், கருணாநிதியும் மாறி மாறி அறிக்கைகளை விட்டவண்ணமுள்ளனர். கோபால்சாமியும் அவரது ஆதரவாளர்களும், பொதுச்சபையைக் கூட்டி, குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு விடுத்துள்ள கோரிக்கையை, கோபால்சாமியின் அதிகரித்துவரும் ஆதரவு காரணமாக கருணாநிதி மறுத்துவருவதாகச் சொல்லப்படுகின்றது.

மத்திய அரசின் மேற்படி அறிக்கை தி.மு.க.வை பிரிக்கின்ற சதி நடவடிக்கையே என தமிழக கட்சிகள், அமைப்புகள், தலைவர்கள் தெரிவித்துவருகின்ற போதும், அவர்கள் மட்டுக்குமே அவர்களது கருத்துக்கள் சரியானவை என கருணாநிதி அலட்சியப்படுத்துகின்றார்.

எந்த உளவுத்துறையின் புலித் தகவலின் பேரில், கருணாநிதியின் ஆட்சி பறிக்கப்பட்டதோ, அதே உளவுத்துறையின் தகவலை நம்பி, கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவர்களில் ஒருவரான கோபால்சாமி மீதும், விடுதலைப் புலிகள் மீதும் கருணாநிதி குற்றஞ்சாட்டுவது உள்நோக்கமற்றது என யாராலும் கூறமுடியாது.



நன்றி: சிரித்திரன்.

பருந்துக்கு விருந்து கொடாதது பயங்கரவாதமா?

யாழ்குடா நாட்டில். "யாழ்தேவி" என்ற இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா அரசு ஆரம்பித்த வேளையில், விமானங்களின் கோர வெறித் தாக்குதல் நடந்துகொண்டிருந்த வேளையில், ஏராளமான தமிழர்கள் கொன்றுகுவிக்கப்பட்டிருந்த வேளையில், குடா நாட்டுக்குள் நுழைந்து தமிழர் பகுதிகளைத் துவம்சம் செய்ய பத்தாயிரம் சிங்களப்படை வெறியோடு முயற்சித்துக்கொண்டிருந்த வேளை, மக்களைக் காப்பாற்ற, தமிழர் தம் தாயகத்தைக் காப்பாற்ற தமது உயிர்களைக் கேடயமாக்கி விடுதலைப் புலிகள் போராடிக்கொண்டிருந்த காலத்தில் தான் கருணாநிதியின் விடுதலைப் புலிகளின் கொலைச் சதிக் குற்றச்சாட்டு வெளிவந்தது. இது உள்நோக்கமற்றதா? இந்திய உளவுத்துறையின் சதி இல்லாததா? தமிழ் இன உணர்வு தலைதூக்கக் கூடும் என்ற பயம்கொண்ட காங்கிரஸ் அரசின் தலையீடில்லையா?

தமிழர் தலைவன் எனக் கூறிக் கொள்ளும் கருணாநிதி, கேவலம் இந்திய உளவுத்துறையின் கைப் பொம்மையாகி, தமிழனையே காட்டிக் கொடும் கயமையைப் புரியக் காரணம் என்ன? பதவி! இதைவிட வேறு எதைக்கூறமுடியும். ஒரு கல்லில் இரு மாங்காய் கொய்யும் கலையை கருணாநிதி பிரயோகித்தார் என்னவோ உண்மைதான். ஆனால், அது குறிதவறி கருணாநிதியை நோக்கி வருவதை கருணாநிதி உணராமலில்லை. அவர் அரசியல் களத்தில் இருந்து மட்டுமல்ல, தமிழர் தம் இதயத் தளத்திலிருந்தும் தூக்கி வீசப்படப்போவதை வரலாறுதான் உணர்த்த வேண்டும்.

**-ஜெயா-**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்






# அக்கறைப்பூக்கள்

அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவுக்கு,

தமிழீழ மக்களுக்காக வெளிவரும் இதழ்களிலே சிறந்த இதழாக வெளிவரும் எரிமலைக்கு எனது இதயம் கனிந்த பாராட்டுக்கள். அன்னிய நாட்டில் அகதிகளாக வாழ்ந்துவரும் எமக்கு எரிமலை இதழ் ஊடாக நாட்டுப்பற்றை வளர்த்துவரும் உங்கள் பணி தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

எரிமலை இதழில் வரும் சில சொற்கள் ஆங்கிலத்திலேயே வருகின்றன. எனவே அவற்றைத் தமிழில் எழுதி உதவவும். ஏனெனில் நாங்கள் தமிழர்கள். அன்னிய நாட்டில் வாழ்ந்தாலும் தமிழை மறக்கக்கூடாது அல்லவா! இங்கே பலர் தமிழ் மறந்து இருப்பது அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.

உங்கள் பணிக்கு என்
நல்லாதரவுடன்
க.ஜெயந்திகரன்
ஜேர்மனி.

அன்புள்ளம் கொண்ட "எரிமலை" வெளியீட்டுக் குழுவிற்கு அன்போடு எழுதுவது,

ஐரோப்பாவில் வாழும் தமிழீழ மக்களுக்கு சமூக, பொருளாதார, அரசியல் அறிவை ஒளிபரப்பும் எரிமலைக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

புரட்டாதி மாத, 1993 இதழில் வெளியிடப்பட்ட கவிதைகள், கருத்தூட்டும் கட்டுரைகள், கதைகள், சிந்திக்க வைக்கும் ஓவியங்கள் எல்லாமே என் மனதில் ஒரு விதமான தெளிவையும், அறிவு வளர்ச்சியையும், சிந்தனைத் திறனையும் முறையான, தேவையான போக்குகளில் கூட்டக் கூடியவைகளாக இருக்கின்றன. இவற்றிற்காக எனது நன்றிகள்.

இவை எல்லாவற்றையும் விட, கிரிஷா ஜொவித்தாவின் "நிமிர்தல்" என் மனதைவிட்டு நீங்காத காவியமாகி விட்டது. இன்றைய நெருக்கடியான, அரசியல், பொருளாதார, உடல், மன ரீதியான கொந்தளிப்பு நிறைந்த காலகட்டத்தில், பல்லாயிரம் ஆண்டு அறிவு, ஆற்றல் மிக்க ஆத்மீகத் தூய்மை கொண்டவர்களால் ஒழுங்காக வகுக்கப் பட்ட, வளர்க்கப்பட்ட கலாச்சாரத்தில் மேற்கூறப்பட்ட புறக்காரணிகளால் படிப்படியாகவும் மெதுவாகவும் சுயாதீனமாகவும் மாற்றம் ஏற்படுகின்றது. இம்மாற்றம் எமது விருப்பத்தாலோ அல்லது விருப்பமின்மையாலோ, எம்மை அறிந்தோ அல்லது அறியாமலோ ஏற்படுகின்றது. இம்மாற்றம் எமது சமுதாயத்தில் சீர்நிலைவைக் கொண்டு வருமா, சீர்கேட்டைக் கொண்டுவருமா என்ற பல எண்ணக்கருத்துக்களை மனதில் ஓர் கருவாகக் கொண்டு எழுதிய நிமிர்தல் என் நினைவில் அலை அலையாக வடிவம் போடுகின்றது.

நிமிர்தலின் கதாநாயகி நித்தியா தன் சமுதாயத்தை நுண்ணறிவோடு நோக்கிக் கொண்டிருந்தாள். சமுதாய மேம்பாட்டிற்கு பொருளாதாரம் மக்களின் ஒற்றுமை, மன உறுதி, விடாமுயற்சி போன்ற போன்ற காரணிகள் மிக முக்கியமானவை. இவை எல்லாவற்றையும் விட மக்களின் அறிவு வளர்ச்சியே முதன்மை பெறும் என மிகத் திட்டவட்டமான முடிவிற்கு வந்திருந்தாள். அவ் அறிவுக் களஞ்சியத்தை சிற்றறிவு கொண்ட டேவிட் தவறான மனப்பார்வை கொண்டு பார்த்தான். டேவிட்டைப் போல ஆயிரம் பேர் படித்துப் பட்டம்பெற்று சமுதாயத்திற்கு உதவி செய்யாமல் சுயநலவாதிகளாக உயிர் இருந்தும் உயிரற்ற சடம் போல் எமது சமுதாயத்தில் இருக்கின்றனர். இவர்களுக்கு நித்தியாவின் எழுத்துக்கள் என்றோ ஒருநாள் அறிவு புகட்டும் என நம்பிக்கொண்டு இதனை முடிக்கிறேன்.

நித்தியாவின் விடாமுயற்சிக்கு எனது நன்றிகள்

ஜெகன்
இலண்டன்

மதிப்புக்குரிய "எரிமலை" ஆசிரியர் குழுவுக்கு,

எல்லா வகையிலும் நிறைவுகளைத் தாங்கிநிற்கும் "எரிமலை"யில் ஒரே ஒரு குறை மட்டும். தாயகத்து ஆக்கங்களை மறு பிரசுரப்படுத்துகையில், சமகாலத்தில் "எரிமலை"யும் "களத்தில்"உம் வாசகர்களிடத்தில் வந்துவிடுகின்றன. ஒரே ஆக்கங்கள் இரண்டு சஞ்சிகைகளில் சமகாலத்தில் வருவது சற்று சலிப்பை ஏற்படுத்துவது நியாயமானதாக எனக்குத் தோன்றுகிறது. இவ்விடயத்தில் எரிமலையும் களத்திலும் ஓர் உடன்பாட்டிற்கு வரமுடியாதா? இது சம்பந்தமாக நடைமுறைச் சிக்கல்கள் பல இருக்கலாம் என்பதை உணர முடிந்தாலும், வாசகன் என்ற முறையில் ஒரு குறிப்பாக இதை எழுதுகிறேன். பாடல் வரிகளில் தீப்பந்தத்தை திணித்துவிடும் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பாடல் கண்டு மகிழ்ச்சி.

சி. சிவஞானசுந்தரம்.
ஜேர்மனி.

தமிழ் இனத்துக்காகவே பணி ஆற்றும் அன்பான எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

உங்கள் மாதம் ஒருமுறை உதிக்கும் எரிமலையை புரட்டும் பல்லாயிரக் கணக்கான தமிழ் இனத்தவர்களில் நானும் ஒருவன்.

உங்கள் எரிமலையில் எழுதும் ஒவ்வொரு வரிகளும், ஒவ்வொரு புகைப்படங்களும் எம் தமிழினத்தின் வீரத்தையும், காலத்தால் உடைக்க முடியாத உறுதியையும் சுமந்து வருகிறது. ஆனால் சில வரிகளும், சில புகைப்படங்களும் என் கண்களை கசியவைக்கின்றன. இந்தக் கலக்கம் மிக விரைவில் தீரும் என்பது நம்பிக்கையான உறுதி.

நன்றி, வாழ்க தமிழீழம்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

சி. சிவகுமார்
குசன்வீல்.

அன்பின் எரிமலைக்கு,

எதிர்வரும் கார்த்திகைத் திங்கள் 26ம் நாள் தம்பியின் பிறந்தநாள். எரிமலை யில் தம்பியின் வரலாற்றை மிகச் சிறப்பாக வெளியிடவும். தம்பியின் போராட்ட உணர்வை வெளிப் படுத்தவும். தம்பியின் தாயுள்ளத்தை தமிழர்கள் அறியும்வண்ணம் இதழ் உருவாக்கம் அமைய வேண்டும் என விரும்புகின்றேன்.

நன்றி.

நெடுஞ்செழியன்
தமிழ்நாடு.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது கருத்தோவியர் தயா...







இருபத்து மூன்று வயதே நிரம்பிய இவர், நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வளர்ந்து வரும் இளம் கலைஞர்களில் குறிப்பிடத்தக்கவர். ஓவியரான இவர், கருத்தோவியராகவும் (காட்டூனிஸ்ட்) இருப்பது இவரது மேலதிக தகுதி எனக் கொள்ளலாம்.

ஈழநாதத்தின் கருத்தோவியராக இருக்கும் இவர், கருத்தோவிய வரைதலின் ஆரம்ப வழிகாட்டியாக அரசியல் விமர்சகர் திரு.மு. திருநாவுக்கரசு அவர்களைக் குறிப்பிடுகின்றார். தமிழீழம், வெளிச்சம், அறிவொளி, தளிர், ஆதாரம் போன்ற சஞ்சிகைகளிலும் இவரது கருத்தோவியங்கள் வெளிவந்துள் என.

இந்திய இராணுவத்தின் வருகையின் பின் ஏற்பட்ட நெருக்கடியான காலகட்டத்தில் ஓவியம் வரைதலை ஆரம்பித்தார்.

இலக்கிய ஈடுபாடுடைய நண்பர்களின் அரவணைப்பின் மூலம் தன்னை வளர்த்துக்கொண்டவர். ஆரம்பத்தில் தத்ரூப ஓவியங்களை வரைந்து வந்த இவரது ஓவியங்களில் தற்போது நவீனப்போக்கு முனைப்படைந்துள்ளது. தனது சேமிப்பாக சில நவீன பாணி ஓவியங்களைப் படைத்துள்ளார். இவற்றில் தனது உள்ளத்தில் எழும் உணர்வுகளை, குறிப்பாக சமகால நிகழ்வுகளை இவரது ஓவியங்கள் தொட்டு நிற்கின்றன. மேலும் பல முகப்பு அட்டைச் சித்திரங்களையும், நூற்றுக்கு மேற்பட்ட விவரணச் சித்திரங்களையும் போராட்டகாலச் சுவரொட்டிகளையும் இதுவரையில் வரைந்துள்ளார்.

எதிர்காலத்தில் சிறந்த ஓவியர் என்பதைவிட சிறந்த கருத்தோவியராக (காட்டூனிஸ்டாக) வரவே விரும்புகின்றார்.








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாயை கௌவிய கருத்துலகம்:

# எங்களுக்காக நாங்களே சிந்திக்க வேண்டும்

மனித குலத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்குரிய முக்கிய ஆயுதமாகத் தொடர்புச் சாதனங்கள் காணப்படுகின்றன. தொடர்புச் சாதனங்கள் மீது தமது பிடியை வைத்திருப்போர் மனித குலத்தின் மீது தமது பிடியை வைத்திருப்பது இலகுவானதாய் உள்ளது. கைத்தொழிற் புரட்சி, இரண்டாம் கைத்தொழிற் புரட்சி (கணணி, இயந்திர மனிதன்) தொடர்பு சாதனப் புரட்சி என இயந்திர மயம் சம்பந்தப்பட்ட முக்கிய புரட்சிகள் எல்லாம் மேற்குலகிலேயே தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள புரட்சியால் மேற்குலகம் தனது எண்ணங்களையும் விருப்பங்களையும் பரந்த உலகின் மீது திணித்து தனது அபிலாசைகளை இலகுவாக ஈட்டிக் கொள்கிறது.

தொடர்பு சாதனங்கள் மூலம் ஒரு பெரும் கலாச்சாரச் சுரண்டலை மூன்றாம் உலக நாடுகள் மீது மேற்குலகம் நடத்துகின்றது. கலாச்சாரச் சுரண்டலில் சிந்தனை என்பது ஒரு தலையாய அம்சம். இயல்பானதும், இருக்கவேண்டியதும், பொருத்தமானதுமான சிந்தனைகளுக்குப் பதிலாக ஒரு மாயச் சிந்தனையை வெகுஜன தொடர்பு சாதனங்களின் மூலம் இவர்கள் உருவாக்கி விடுகிறார்கள். செய்மதியின் வருகை இன்று தொலைத் தொடர்பில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது. சகல வெகுஜன தொடர்பு சாதனங்களுக்கும் இன்று அது மையமாகி விட்டது. செய்தி, தகவல் சேகரிப்பு, செய்தி தகவல் பரவல், செய்தி தகவல் கட்டுப்படுத்தல், செய்தி தகவல் திரிப்பு ஆகிய அனைத்தும் இன்று தொடர்பு, வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் மேற்குலகின் கைகளில் உள்ளன.

திரைப்படம், தொலைக்காட்சிப் படம் மற்றும் கலை இலக்கியம், பண்ட விளம்பரம், செய்திகள், தகவல்கள், ஆய்வுநூல்கள், ஆய்வுக்கான மூலாதாரங்கள் போன்ற சகல அம்சங்களுக்கு ஊடாகவும் மேலைத்தேச நோக்கு நிலையிலான ஒரு மேலைத்தேச கருத்துப்படிமம் எம்மை அறியாமலே எம்மிடம் உருவாக்கப்பட்டுவிடுகின்றது. இவற்றால் சிந்தனை, கலாச்சாரம், சமூக அரசியற்போக்கு என்பன நிர்ணயிக்கப்பட்டு விடுகின்றன. ஒரு வகையில் இவைகள் அபினிகள் ஆகும். இச்சாதனங்கள் மூன்றாம் உலக மக்களை தன்னுணர்வின்றிச் செயற்பட வைக்கின்றன.

"ஓர் அடிமை தான் அடியாய் இருக்கின்றேன் என்பதை உணர்ந்து விட்டானென்றால், அவன் அரை வாசிச் சுதந்திரம் அடைந்து விடுகிறான்." என்றொரு கூற்றுண்டு. இவ்வாறு மேலைத்தேச தொடர்புச் சாதனங்களினால் நாம் காயடிக்கப்படுகிறோம் என்பதை மூன்றாம் உலக மக்கள் உணர்ந்து கொள்வார்களேயானால் அரைவாசிப் பிடி தளர்ந்ததற்குச் சமன்.

இவற்றின் அர்த்தம் மேலைத் தேசத்தின் விஞ்ஞானத் தொழில் நுட்ப சாதனைகளை நிராகரிக்க வேண்டும் என்பதில்லை. மேலைத் தேசத்தின் செருப்புக்கேற்ற காலாய் மூன்றாம் உலகம் வெட்டப்படகூடாது. மாறாகக் காலுக்கேற்ற செருப்பாய் ஒரு சுய தெரிவு எல்லாவற்றிலும் இருக்க வேண்டும். இவ்ற்றிற்கான ஆப்பு சிந்தனைத் துறையிலிருந்தே உருவாகவேண்டும்.

"கற்பனை நிறைந்த காவிய ரசனை மிக்க மக்கள்" என்று இந்திய உபகண்ட சமூகத்தைப் பற்றி 19ம் நூற்றாண்டின் முக்காற் பகுதியில் ஒரு சிந்தனையாளன் கூறினார். தென்னாசிய மக்களின் பொதுவான சிந்தனைப் போக்கில் மாயையும் கற்பனையும் அதிகம் கோலோச்சுவதுண்டு. ஆனால் தென்னாசியப் பிராந்தியத்தில் சிறிய மக்கள் கூட்டமான தமிழீழ மக்கள் கடந்த ஒரு தசாப்தத்தில் பல் முனைத் தாக்கங்களுக்கும், பல்வகை அனுபவங்களுக்கும் உட்பட்டவர்கள் என்ற வகையில் இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய மக்கள் கூட்டத்த வரையும் விட அதிக விழிப்புணர்வு கொண்டவர்களாக உள்ளனர். பட்ட அனுபவமே இதற்கான காரணம். இது அரசியற்துறைக்கே பிரதானமாகப் பொருந்தும்.

தென்னாசியாவின் பொதுவான சிந்தனைப் போக்கில் கற்பனையும், மாயையும், அதீதப்போக்கும் அதிகம் வேரூன்றியுள்ளது. மேலைத்தேசத் தவர்களினால் இம்மக்கள் மீது மூடிப் போர்க்கப்பட்டுள்ள சிந்தனை மாயையும், இம்மக்களிடமே காணப்படுகின்ற கற்பனைப் போக்கும் மற்றும் பல் வழிகளினாலும் உருவாகும் அதீதப்போக்கும் உடைக்கப்படுவதே இப்பிராந்திய மக்களின் விமோசனத்திற்கான அடிப்படை நிபந்தனைகளாகும்.

மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு அவர்களின் நோக்கு நிலையிலான ஆய்வுகள் சிறப்பான வளர்ச்சியை அடையவேண்டும். இருக்கும் பிழையான கருத்துப் படிமம் உடையவேண்டும். சிந்தனையில் உயிர்த்துடிப்பும் செயல் பூர்வமான வழிகாட்டலும் இருக்க வேண்டும். ஆய்வு என்பது மனவிருப்பத்தை கருத்தாக்குவதல்ல;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

585927 Sundralingam.

அப்படியாயின் அது ஒரு கற்பனைதான். காணப்படும் யதார்த்தத்தை உள்ளபடியே கண்டறிவதும், அந்த யதார்த்தத்தை வைத்துக்கொண்டு உருவாக்கக்கூடிய நல்லவை எவை என அடையாளம் காண்பதும், அந்த நல்லவற்றை உருவாக்க யதார்த்தத்தில் எவ்வளவு தூரம் இடமுண்டு என்பதைக் கண்டறிவதுமே ஆய்வாகும். அதாவது இயற்கையைப் பற்றியதும், இயற்கையின் நியதியைப் பற்றியதுமே ஆய்வாகும். மனத்தின் கற்பனா விருப்பு வெறுப்புக்கு அப்பால் காணப்படும் உண்மையான நியதியை மக்களின் நன்மைக்காக எவ்வளவு தூரம் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்து விளக்கும் ஒருவன்தான் அமரத்துவமுள்ள சிந்தனையாளனாய் நிலைப்பான்.

ஒருபுறம் மனிதனது நடத்தையிலும், தேவையிலும், வாழ்விலும் சமூகத்தன்மை இடையறாது அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. மறுபுறம் ஆய்வில் சிறப்புத் தேர்ச்சி என்பதன் பெயரில் தனித்தன்மை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

## மு. திருநாவுக்கரசு

அதாவது பகுப்பாய்வுகள் அதிகரிக்கின்றன; ஆனால் தொகுப்பாய்வுகள் அருகுகின்றன. இது பண்ட உற்பத்தி வளர்ச்சியின் தவிர்க்க முடியாத விளைவு என்றொரு கருத்துண்டு. ஒரு தொகுப்பான சிந்தனைதான் ஒரு முழு வடிவத்தாக்கத்தையோ அல்லது கருத்தையோ தர வல்லது. அல்லாத இடத்து அது யானை பார்த்த குருடர்கள் கதைதான்.

மூன்றாம் உலக நாடுகளின் சிந்தனையிலும், கருத்துலகிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். ஒரு காலத்தில் கற்பனையின் மத்தியிலும் பெரும் சிந்தனையாளர்களைப் படைத்தது ஆசிய மண். எனவே அதனால் முடியாதது ஒன்றில்லை. ஆனால் அதன் சிந்தனைத்திறன் மேலைத்தேசத்தால் கெடுக்கப்பட்டுள்ளது. ஆசிய ஞானிகள் ஒருபுறம் கற்பனைத் தன்மையுள்ளவர்களாயும், மறுபுறம் இயற்கை விதிகளை ஆராய்ந்தவர்களாயும் காணப்படுகிறார்கள். எமது இன்றைய தேவை கற்பனைகளைக் கைவிட்டு, மேலைத் தேசத்தின் கருத்தாக்கிரமிப்புக்கும், திரிபுகளுக்கும் ஆட்படாது எத்தகைய இடர்களையும் தாண்டி எமக்குப் பொருத்தமான கருத்துக்களையும், எண்ண ஓட்டங்களையும் உருவாக்கவேண்டும் என்பதுதான்.

www.tamilarangam.net



## இவர்கள்

முட்டிய கூரையை
கட்டிய கந்தலை
காவு கொடுத்தவர்கள்.
முகவரி இழந்து
சுகவரி துறந்து
முடிவுரை ஆனவர்கள்.
துட்டகைமுனுவின்
தோன்றல்கள் விதைத்த
துயரின் அறுவடைகள்.
குட்டிட குனியும்
பேதமை மறந்து
குமுறும் எரிமலைகள்.


புண்ணிய பூமியின்
புதல்வர்கள் ஏவிய
கொடுமையின் குத்தகைகள்.
அண்ணலின் காந்திய
காவலர் ஆடிய
வேஷத்தின் ஒத்திகைகள்.
முன்னய தலைவர்கள்
விடியலை விற்றதில்
இருளினில் இருப்பவர்கள்.
பின்னய தலைமுறை
பெருமையில் பூத்திட
இரத்தம் இறைப்பவர்கள்.

மூட்டிய சிதைகளில்
மூடிய குழிகளில்
மரணத்தை மரித்தவர்கள்.
வாட்டிய பசியிலும்,
பிணியிலும் வெந்து
வைரம் பாய்ந்தவர்கள்.
காட்டிலும், மேட்டிலும்,
காப்புக்குழியிலும்
காவலின்றி; தங்கள்
நாட்டினில் தாமே
அகதிகள் என்று
பட்டயம் பெற்றவர்கள்.

- ஞானி
ஜேர்மனி.

புரட்டாதி 1993 இதழில் வெளியான புகைப்படத்துக்கான கவிதை.

# 1993 செப்டம்பர் 26



திலீபன்
ஆறாவது நினைவு நாள்....
சொட்டு நீரும் அருந்தாமல்
பட்டினிப் போர் நடத்தி
விடுதலைக்கு உரமாக
உயிர் கொடுத்த திலீபனே
உன் வீர நினைவு
எம்மை வழிநடத்தும் !

## திலீபன் மன்றம்

திலீபனின் ஆறாத நினைவால், தமிழக மக்கள் அவனை நினைவு கூர்ந்தார்கள். அவனின் நினைவு தம்மை வழி நடத்தும் என்று எழுந்தார்கள். கவிஞர்கள், திலீபன் மன்றம், பாட்டாளி மக்கள் கட்சி இளைஞர்கள் அணி, தமிழக முற்போக்குக் கட்சிகள் என அனைத்து நேசக்கரங்களும் ஒருமித்து நின்றன. அவற்றின் வெளிப்பாடுகளாக பல நிகழ்ச்சிகளில், பாடல்கள், கவிதைகள், கட்டுரைகள், கலைநிகழ்ச்சிகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் என. மேற்காணும் இச்சுவரொட்டி தமிழகத்தில் திலீபன் மன்றத்தால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

www.tamilarangam.net



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்